# சுதந்திரன்

SUTANTIRAN


194 A. BANDARANAIKB STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.






புத்தகம்19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஐப்பசி திங்கள் 22-ம் நாள் (7—11—1965) ஞாயிற்றுக்கிழமை ற்ஜப் 12 | இதழ் 24

இலங்கை வந்திருந்த மக்கள் திலகம் திரு எம். ஜி. ராமச்சந்திரன் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் இல்லத்துக்கும் சென்றிருந்தார். விடைபெற்றுத் திரும்புகையில் தந்தையின் கையை முத்தமிட்டபோது எடுக்கப்பட்ட படம்.

—படம்: ராஜப்பன்.

## தமிழரசுத் தலைவரானர் டாக்டர் நாகநாதன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவராக டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அறிவித்திருக்கிறார்.



கட்சித் தலைவர் பதவிக்கு நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதற்குரிய காலம் முடிவடைந்துவிட்டமையினாலும், வேறு எவருடைய விண்ணப்பமும அனுப்பி வைக்கப்படாமையினாலும் டாக்டர் நாகநாதன் அவர்களே — அடுத்த தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பொதுச்செயலாளருடைய அறிக்கை பின்வருமாறு:

'தமிழரசுக் கட்சியின் அமைப்பு விதிகள் 9 (ண) பிரிவின்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த மாநாடு முதல் கட்சித் தலைவர் பதவிக்கு டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களுடைய பெயர் மட்டுமே பிரேரிக்கப்பட்டுள்ள காரணத்தாலும் வேறு நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்குரிய காலம் கடந்துவிட்டபடியாலும் டாக்டர் நாகநாதன் அவர்களே அடுத்த மாநாடு முதல் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்'.

### அரசாங்க அதிபர் இடமாற்றம்:

# இடதுசாரிகளின் கூற்றுக்கு பிரதமர் ஆப்பு

# தமிழரசார் தலையீடு துளிகூட இல்லை

தமிழரசுக் கட்சியின் தூண்டுதலினாலேயே தமிழ்ப் பகுதியில் கடமை பார்த்துவந்த அரசாங்க அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று இடதுசாரிக் கட்சிகள் சில குற்றஞ்சாட்டி வந்தன. இதுபற்றி இடதுசாரிப் பத்திரிகைகள் பலத்த பிரசாரம் செய்துவருகின்றன. இக்குற்றச்சாட்டை பிரதமர் டட்லி சேனநாயகாவே மறுத்துள்ளார் என்று அறியப்படுகிறது.

திருகோணமலையில் அரசாங்க அதிபராகக் கடமை பார்த்துவந்த திரு. மகிந்த சேனநாயக்காவை மாற்றிவிட்டமையைக் கண்டித்து திருகோணமலையிலிருந்து 15 பௌத்த சங்கங்களுக்கு மேல் பிரதமரிடம் தூது வந்தன. அவற்றில் பல இடதுசாரிகளின் ஆதிக்கத்தின் கீழுள்ள சங்கங்களாகும். திரு. சேனநாயக்கா இதுவரை திருமலையை விழுங்க தமிழரசுக் கட்சி செய்து வந்த முயற்சிகளை முறியடித்துள்ளாரென்றும், தமிழரசாரின் தூண்டுதலின்மீதே அவர் மாற்றப்படுகிறாரென்றும் இச்சங்கங்கள் பிரதமரிடம் புகார் செய்ததாகத் தெரிகிறது.

ஆனால் பிரதமர், அவர்களின் கூற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாராம். தமிழரசுக் கட்சியின் தலையீடு இதில் கிடையாதென்றும் இது தானே செய்த முடிவு என்றும் பிரதமர் அவர்களிடம் கூறியதாகத் தெரிகிறது.

அரசாங்க அதிபர்களின் மாற்றலை பௌத்தர்களுக்கெதிரான நடவடிக்கை எனக் கூறி இடதுசாரிகள் இந்தப் பிரச்சினையின் மீதும் வகுப்புவாதத்துக்கு தூபமிட்டுக் கொண்டிருக்கின்றனர்.


## திரைப்படப் போட்டி அடுத்த வாரம்

ஆரம்பமாகிறது

## "மெய்கண்டான்"

| | |
|---|---|
| திருக்குறட் கலண்டர் No. 1 ஸ்பெஷல் | 2-40 |
| நன்மொழிக் கலண்டர் No. 2 | 1-35 |
| மாதக் கலண்டர் (பஞ்சாங்கக் கலண்டர்) | -85 |
| சிங்களக் கலண்டர் (No. 1 கலண்டர் அளவுள்ளது) | 2-15 |
| ரேபிள் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்) | 5-50 |
| தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-75 |
| No. 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி (பிளாஸ்ரிக் கவருடன்) | 2-75 |
| No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி " | 2-20 |
| No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி " | 3-60 |
| No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 2-20 |
| No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 1-75 |
| No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 3-85 |
| No. 7 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 3-30 |
| No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 3-55 |
| பிளாஸ்ரிக் சிங்கள டயறி " | 2-20 |
| பேர்ஸ் சிங்கள டயறி " | 3-30 |
| பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி " | 5-50 |
| No. 1 பேர்ஸ் தமிழ் டயறி (பேர்ஸ் சகிதம் With Purse) | 3-70 |
| No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி " | 3-15 |
| No. 4 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி " | 3-15 |
| No. 5 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி " | 2-75 |
| No. 6 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 4-95 |
| No. 7 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 4-40 |
| No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 5-25 |
| வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | 6-50 |
| ஜெம் டயறி (Gem Diary) பிளாஸ்ரிக் | 1-85 |
| ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | 2-75 |

இன்னும் பல உண்டு.

காகிதப் பஞ்சம் காரணமாக சொற்ப தொகையே தயாரித்துள்ளோம். பிந்தினால் கிடைப்பதரிது— இரட்டிப்பு விலை கொடுத்தும் வாங்க வேண்டி நேரிடலாம்.

மற்றும் விபரங்களுக்கு:

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை,**

161, செட்டியார் தெரு,

கொழும்பு-11.

போன்: 79141

கிளை: யாழ்ப்பாணம் — போன்: 236.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிவெறி தாய்மை உணர்ச்சியை கொன்றுவிட்டதா?

## சிறிமாவோவின் பேச்சுக்கு தென்னக ஏடு சட்டை

**இலங்கைக்கு தமிழர்கள் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டனர் என்ற கருத்துப்பட சுதந்திரக் கட்சித் தலைவரும் பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான திருவாட்டி சிறிமாவோ பண்டாரநாயக்கா அண்மையில் நிகழ்த்திய பேச்சு இலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது வாசகர்கள் அறிந்ததே. இப் பேச்சின் கருத்தை யொட்டி தமிழ் நாட்டுத் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானக்கிராமணியார் அண்மையில் 'செங்கோல்' என்ற தமது ஏட்டில் 'தமிழன்' என்ற பெயரில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். 'சிறிமாவோ சீமாட்டி சிறுவதேன்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட இக் கட்டுரையில் இரு நாட்டுக்கும் உள்ள உறவு முறைகளையும், சிறிமாவோவின் கொள்கை பச்சை இன வெறிப் போக்கேயன்றி முற்போக்கு வழியல்ல என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.**



மல்லாகம் திரு. சு. நடராசா அவர்கள் முதலவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கொழும்பிலிருந்து ஊர் திரும்பிய பொழுது, அப்பகுதி இளைஞர்களால் தெல்லிப்பளைப் புகையிரத நிலையத்தில் வைத்து வரவேற்கப்பட்டார். புகையிரத நிலையத்திலிருந்து அவரது இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படும்பொழுது இப்படம் எடுக்கப்பட்டது. படத்தில் தமிழரசுப் பிரமுகர்களுடன் 1960 ஆண்டுத் தேர்தல்களில் பொன்னம்பலம் கட்சி வேட்பாளராக காங்கேசன்துறையில் போட்டியிட்ட வழக்கறிஞர் திரு ஆர். என் சிவப்பிரகாசம் அவர்களும் (முன் வரிசையில்) காணப்படுகிறார்.

—படம்: கலைஞானி காரியாலயம், தெல்லிப்பளை.

இந்தியாவுக்கும் இலங்கைத் தீவுக்கும் உள்ள தொடர்பு தாய்க்கும் சேய்க்குமுள்ள தொடர்பு போன்றதாகும். இந்தியா முழுவதையும் களமாகக் கொண்டு கதை நிகழும் இந்தியக் காப்பிய மெனினும்- அது வட மொழிக் காப்பியமாயினும்சரி, தமிழ் மொழிக் காப்பியமாயினும் சரி-இலங்கைத் தீவு இடம் பெறாமல் விடப்பட்டதில்லை. வால்மீகி இராமாயணத்திலும் கம்ப இராமாயணத்திலும் கதையின் முடிவில் இலங்கை இந்தியாவின் நேசநாடாக வருணிக்கப்பட்டுள்ளது. தென் தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இலங்கைசிறப்பிடம் பெற்றுள்ளது.

மதத்தாலும் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பிரிக்க முடியாத பிணைப்புண்டு. வட இந்தியாவில் தோன்றிய புத்தமதம் இலங்கையின் தென் பகுதியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. தென்னிந்தியாவில் தோன்றிய சைவமதம் இலங்கையின் வடபகுதியில் நிலைபெற்றுள்ளது. ஆம், இன்றைய இலங்கை பௌத்த-சைவ மதங்களின் செல்வாக்கிலுள்ளது.

### சிறிமாவோ பேசியது

இந்த சரித்திர உண்மைகளை எல்லாம் மறந்து, இலங்கை இந்திய நாடுகளிடையே பகைமையை வளர்க்கப் பாடுபடுகிறார், இலங்கையின் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா.

'இலங்கைக்கு தமிழர்கள் அடிமைகளாக வந்தவர்களாவர்; பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் அவர்கள் கையில் ஒரு செண்டு கூடக் கிடையாது. தற்போது 'பணக்காரத் தொண்டைமான்கள்' இருக்கிறார்கள். சிங்களவர்கள் தங்கள் நகைகளையும் தமிழர்களிடம் அடமானம் வைக்கும் நிலை இருக்கிறது. இந்தத் தமிழர்கள் இலங்கையர்களை அடக்கி ஆளக் கூடிய காலம் வெகு தூரத்திலில்லை'.

இப்படி, இலங்கைத் தீவின் ஒரு பகுதியான "மாத்தளை" என்னும் ஊரில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் இலங்கையின் முன்னாள் பிரதமரான திருமதி பண்டாரநாயகா பேசியதாக இலங்கைப் பாராளுமன்றில் புகார் கூறப்பட்டது. இந்தப் புகார் மறுக்கப்படவில்லை. மாறாக, 'இலங்கைத் தமிழர்களைப் பற்றி திரு. பண்டாரநாயகா அப்படிக் கூறவில்லை. மற்றொரு பிரிவினரைப் பற்றியே அவர் குறிப்பிட்டார்' என்பதாகச் சமாதானம் கூறி, தமிழினத்தவரை இழித்துரைத்த திருமதி பண்டாவின் கூற்றை உறுதிப்படுத்தியுள்ளார் அவரது கட்சியைச் சார்ந்த திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா.

### நோக்கம்

திருமதி பண்டாரநாயகாவாய்க் கொழுப்புஇலங்கைச் சிங்களவர் அவ்வளவு பேரின் இதயத்தின் எதிரொலிப்பு என்று நாம் கொள்ளவில்லை. திருமதி பண்டாரநாயகா ஆட்சி சிங்களப் பொதுமக்களால் அழிக்கப்பட்டு விட்டது. பொதுத் தேர்தலில் திருமதி பண்டாவின் கட்சி சிங்களப் பொதுமக்களால் தோற்கடிக்கப்பட்டு விட்டது. ஆம்; சிங்கள மக்களிடையே செல்வாக்கையிழந்து விட்டார் திருமதி பண்டா. இதனால், அவருடைய உளறலை சிங்கள இனத்தின் கருத்தாக நாம் கொள்ளத் தேவையில்லை. பதவி பறிபோன ஆத்திரத்தால் வாய்க்கு வந்தபடி உளறுகிறார் திருமதி பண்டா.

இப்படி எல்லாம் உளறினால், சிங்கள மக்களிடையிலே இனவெறிக்குத் தூபமிட்டு வளர்த்தால், திரும்பவும் பதவிக்கு வந்துவிட முடியுமென்று அவர் கனவு காண்கின்றார். திருமதி பண்டாவின் வெறிப் பேச்சை, அவருடைய சொந்தக் கருத்தாக, அதிகமாகச் சொன்னால், அவர் சார்ந்துள்ள இலங்கா சுதந்திரக் கட்சியின் கருத்தாக மட்டுமே எடுத்துக் கொள்கிறோம். பண்டாவின் உளறலுக்குப் பதிலளிக்க வேண்டியது இலங்கைத் தமிழருடைய மட்டுமல்லாமல், உலகமெங்கும் பரவி வாழும் தமிழ் இனத்தவர் எல்லோருடைய கடமையுமாகும். அந்த வகையில்தான் திருமதி பண்டாவின் உளறலை இங்கு விமர்சிக்க விரும்புகிறோம்.

### வரலாறு

'கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்தில் இலங்கைக்குத் தமிழர்கள் அடிமைகளாக வந்தவர்கள்' என்கிறார் திருமதி பண்டாரநாயகா. இது சரித்திர உண்மை. இதற்காக தமிழர் எவரும் வெட்கப்படத் தேவையில்லை. இந்தியத் தமிழகம்தன்னைத்தானே ஆண்டு கொண்ட காலத்திலும்இலங்கைக்குத் தமிழ் மக்கள் சென்றதுண்டு. அடிமைக் கூலிகளாக அல்ல; ஆட்சிபுரியும் அரசர்களாக, போர் புரியும் வீரர்களாக! இந்தச் செய்தியையும் திருமதி பண்டா சொல்லியிருந்தால் சரித்திர உண்மையைச் சொன்ன சத்திய சீலராக அவரைப் போற்றியிருக்கலாம்.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவை அடிமைப்படுத்தியிருந்த காலத்தில் திருமதி பண்டாவின தாய் நாடான இலங்கைத் தீவு அப்படி ஒன்றும் சுதந்திர நாடாக வாழ்ந்து விடவில்லை, இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்ட கிழக்கிந்தியக் கம்பெனி வெள்ளையர்கள் இலங்கையையும் அடிமைப்படுத்தியிருந்தனர். இந்த சரித்திர உண்மையை சிறிமாவோ சீமாட்டியார் மறந்து விட்டார் போலும். இலங்கைக்கு தமிழர்கள் அடிமைக் கூலிகளாகச் சென்றனர் என்றால், அவர்களை அந்த நிலையில் அழைத்துச் சென்றவர்கள் சிங்கள 'எஜமானர்கள்' அல்லர்; ஆங்கிலேயரான வெள்ளை எசமானர்களே. இதைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள திருமதி பண்டாவுக்கு உரிமை ஏது? இங்கிலாந்திலுள்ள வெள்ளைக்காரனல்லவா சொல்லவேண்டும்!

### காடு நாடாகியது

திருமதி சிறிமாவோ சொல்லத் தவறிய மற்றொரு உண்மையையும் இங்கு எடுத்துக் காட்ட வேண்டியது கடமையாகிறது. தமிழர்கள் இலங்கை சென்றனர் என்றால், அது இலங்கையின் வளத்தைச் சுரண்டிப் பிழைக்க அல்ல. தங்கள் உழைப்பின் மூலம் இலங்கையின் வளத்தைப் பெருக்குவதற்கே சென்றனர். அட்டைக்கும் அரணைக்கும் நஞ்சுடைய நாகத்திற்கும் இரத்தத்தைப் பறிகொடுத்து, ஒரு சில நேரங்களில் பலர் தங்களுடைய உயிரையும் பலியாக்கி, காடுகளை 'நாடு நகரங்க'ளாக்கினர். ரப்பர் தோட்டங்களும், தேயிலைத் தோட்டங்களும் இலங்கை அரசுக்கு அன்னியச் செலாவணியை இன்று அள்ளி வழங்குகின்றன என்றால், நவீனத் தொழில்வளம் மற்ற இலங்கையிலே சிங்களவர்கள் இன்று வாழ்வாங்கு வாழமுடிகிறதென்றால், அந்தப் புதுமைகளை நிகழ்த்திய பெருமை அந்தத் தீவுக்குக் கூலிகளாகச் சென்ற தமிழர்களின் உரிமையாகும். இதனை மறந்து நன்றி கொன்று உளறுகின்றார் பண்டா.

'சிங்களவர்கள் தங்கள் நகைகளைக்கூட தமிழர்களிடம் அடமானம் வைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது' என்று வயிறெரிந்து கூறியுள்ளார் திருமதி பண்டாரநாயகா. இந்தியர்களான மார்வாடியர்கள் தங்களைப் போன்ற இந்தியர்களான தமிழர்களிடையே வட்டிக் கடை வைத்திருக்கக் காண்கின்றோம். சிங்களவர்கள் மத்தியிலே, தமிழர்கள்வைத்துள்ள வட்டிக் கடையின் எண்ணிக்கையைவிட, இந்தியத் தமிழகத்திலே மார்வாடியர் வைத்துள்ள வட்டிக் கடைகளின் எண்ணிக்கை மிகுதியாகும். ஆம்; தமிழன் இலங்கையில் வட்டிக் கடை வணிகனாக இருந்து, சிங்களவரைச் சுரண்டுகிறான் என்

(14-ம் பக்கம் பார்க்க)

# பரிவு

—"பாண்டியூரன்"—

என்னுடன் பேசிப் 'பல்லை' இளிப்பதால் எனதுபேரை
உன்னிலும் பெரிதாய்ச் சற்று உயர்த்துவதாகும் என்றாய்
கண்மணி! எனது நாமம் 'கணபதி'ப் பிள்ளை யென்று
முன்னரே பாட்டன் வைத்தார். முடியிட வேண்டாம் தம்பி!

மூகமனுக் கன்றி உன்னில் மூப்பினால் 'அண்ணன்' என்ற
அகநிறைவோடு அன்பால் அழைக்கின்றேன் 'தம்பி' யென்றே.
முகத்தினை மூடிக்கொண்டால் முழுநிலா இருளாய்ப் போமோ...?
அகூத்திமிர் வேண்டாம். பாட்டன் அளித்தபேர்க் கிடர்செய்யாதே!

தென்னைபோல் வளர்ந்தால்...? ஈச்சை தென்னையாய் விடுமோதம்பி?
உன்னிலும் எனதுபாட்டன் உயரமே குறைவு....! பெற்றோர்
அன்னவர்க் கிட்டநாமம் அமைவுறச் 'சின்னத்தம்பி'
என்பதாம், அன்றிட்ட என்பெயர்க் கிடர்செய்யாதே!

மூக்கிலான் கண்ணடிக்கு முகங்கொடான்; கறிப்பான், சால்பு.
பார்ப்பவர் பார்க்காவிட்டாற் பளிங்கியின் பண்பா மாறும்...?
போக்கெலாம் புரிந்தேன்!தம்பி புளுகெலாம் 'புலமை'யாகும்!
வாக்கிலுன் ஜொளியை மூட்டு! வைத்தபேர்க் கிடர்செய்யாதே.

தென்றலாற் றீமையில்லை; எனினுமத் தென்றல் ஊடே
துன்றிய நச்சு நாசித் துவாரிடை நுழையிற் றுன்பம்.
என்பதை யறிவேன்; அஃதால் எட்டநின் றினிமைகாண்பேன்.
நன்றி யுன் புத்திக் கென்பேர் நச்சிக்காதே மேலும்.

கோழியோர் முட்டையிட்டாற் கொக்கரிக்கின்ற தென்பார்.
ஆழியில்திமிங்கி சன்று அளிப்பதும் ஒன்றோ;முந்து!
பாழியில் [illegible]
வாழியுன் [illegible]! என்னை வம்பிழுத் திடர்செய்யாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வி. ஆர். கோபால்,
கொழும்பு-9

கே: இந்தோனேசியாவில் நடைபெற்ற சதி முயற்சிக்குப் பின்னர் ஜனாதிபதி சுகர்னேவின் நிலை எப்படி இருக்கிறது?

ப: இந்தோனேஷியாவின் இராணுவத்தின் கை ஓங்கி வருகிறது. சுகர்னே, சுபந்திரியோ முதலியோர் இராணுவத்திடம் கைதிகளைப் போலிருக்கின்றனர் என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது. இன்று சகல அதிகாரங்களும், கொம்யூனிஸத்தின் பரம விரோதியான பாதுகாப்பு மந்திரியிடம் இருக்கிறதாம். விரைவில் சுகர்னே தூக்கியெறியப்பட்டு அங்கு இராணுவ சர்வதிகாரம் ஏற்படக் கூடுமாம்.

கே: 'எத்த' என்ற சிங்களப் பத்திரிகைக்கும், தமிழ் காங்கிரசின் ஏதோ ஒரு முரசுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அது தினசரி தவறாது வெளிவருகிறது. இது தேர்தலுக்குத் தேர்தல் வெளிவருகிறது.

ஃ

வி. சிந்தனைச் செல்வன்,
கல்முனை.

கே: இருந்தாப்போல ஒரு தினசரி நிறம்மாறிவிட்டதே என்ன காரணமோ?

ப: மீண்டும் பழைய நிறத்துக்கு வந்துவிட்டதே, பச்சோந்தியைப் போல.

ஃ

வீ. அழகேசன்,
கண்டி

கே: இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நூரளைக் கிளை உட்பட இன்னும் பல மலை நாட்டுக் கிளைகள் நூரளையில் அழகுராணியைத் தெரிவு செய்வதில் பெரிதும் ஒத்துழைத்ததாக அறிந்தோம். ஆனால் இ. தொ. கா. தலைவர் மட்டும் எம். ஜி. ஆரை ஏன் சந்தித்துப் பேசவில்லை? எம். ஜி. ஆருக்குக் கொடுக்கப்பட்ட எந்த வரவேற்பிலும் அவர் கலந்துகொள்ளவுமில்லையே!

ப: அழகுராணித் தெரிவில் இ. தொ. கா. அக்கறை கொண்டாலும் மலை நாட்டுத் தமிழர்களிடையே எம். ஜி. ஆருக்கு உள்ள செல்வாக்கைக் கண்டதும் இ. தொ. கா. தலைவருக்கு உள்ளூர உதறல் எடுத்துவிட்டதாகவும், தனது தலைமையை விழுத்த எம். ஜி. ஆரை மறைமுகமாக யாரும் பயன்படுத்தினால் என்ன செய்வது என்ற பிரச்சினை அவருக்குத் தலையிடியைக் கொடுத்ததென்றும், எனவே எம். ஜி. ஆரைச் சந்திக்காமல் "டபாய்த்து" விட்டாரென்றும் பேச்சு அடிபடுகிறது.

ஃ

கே. எல். லட்சுமிகன்னியப்பன்,
சுங்கை உஜோங் எஸ்டேட்,
போர்ட்டிக்சன்,
மலேசியா

கே: எங்கள் நாட்டு தினசரி, மாதப் பத்திரிகைகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவைகளைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: பார்த்திருக்கிறேன். எங்கள் நாட்டைப் போல உங்கள் நாட்டில் பத்திரிகைக் கலை வளரவில்லை என்று தெரிகிறது. செய்திகளை இருட்டடிப்புச் செய்யவும், செய்திகளைத் தலைகீழாகத் திரிக்கவும், பொய்ச் செய்திகளை உண்மைச் செய்திகளாக்கவும், பழைய புளித்துப் போன செய்திகளுக்கு புதிய புதிய உருவம் கொடுத்து ஒரே செய்தியை ஆயிரம் தடவை பிரசுரிக்கவும் தெரிந்த பத்திரிகையாளர்கள் உங்கள் நாட்டில் இல்லையென்று தெரிகிறது. எங்கள் நாட்டுப் பத்திரிகைகள் தினசரி இம்மாதிரிச் செய்திகளாலேயே நிரப்பப்படுகின்றன. அதில் உலக சாதனையை நிலை நிறுத்தியவை இலங்கைப் பத்திரிகைகளே. உங்கள் நாட்டுப் பத்திரிகைகளுக்கு அந்தத் திறமையில்லை என்றே தெரிகிறது.

ஃ

வி. நசதிரமோகன்,
யாழ்ப்பாணம்

கே: மாவட்ட சபை மசோதாவை த. கா. எதிர்த்தால் இதன் விளைவு என்னவாக இருக்கும்?

ப: எதிர்த்தாலும் மசோதாவைத் தோற்கடிக்க முடியாது. அவர்கள் எதிர்ப்பதாயிருந்தால் அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேறிய பிறகுதான் அவ்வாறு செய்ய முடியும்.

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

அ. மு. நஜ்புதீன்,
ஹெம்மாதகம

கே: இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்பட்டால் பொருளாதார நிலை எப்படி மாற்றமடையும்?

ப: பொருளாதார நிலையைச் சீராக்குவதற்காக ஜனநாயக ஆட்சி 5-ஆண்டுகளில் செய்யும் முயற்சிகளையும் எடுக்கும் நடவடிக்கைகளையும் இராணுவ ஆட்சியால் ஒரே ஆண்டில் செய்ய முடியும். ஆனால் மக்கள் பெரிதும் துன்பத்துக்கு ஆளாக்கப்படுவர். மக்களுக்கு நன்மை செய்ய மக்களையே துன்புறுத்துவது காட்டுமிராண்டித்தனமாகும்.

கே: "அத்த" என்றொரு பத்திரிகை வெளி வருகிறதே அதில் பிரசுரமாகுபவை எல்லாம் உண்மையாக இருக்கின்றனவா?

ப: பொய்ச் செய்திகளை பிரசுரிக்கவில்லையேல் 'எத்த' (உண்மை) என்று பெயரிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்க முடியாதல்லவா? நம் நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளில் 20% நம்பலாம் என்பது எனது கருத்து. 'எத்த' வைப் பொறுத்தவரையில் இச் சதவிகிதம் இன்னும் பாதியாகக் குறைக்கப்பட வேண்டும்.

ஃ

சாரதி, தாவடி

கே: இக் காலக் குமரிகளிற் சிலரும், வாலிபர்களிற் சிலரும் கறுப்பு நிற உடைகள் அதிகமாக அணிகிறார்களே! ஏன்?

ப: உள்ளத் தூய்மையற்றவர்களுக்குக் கறுப்பு நிறத்தில் கவர்ச்சி அதிகம். தங்களைப் பார்ப்பவர்களிடம் உள்ளத் தூய்மையில்லை என்பது இந்த இளம் பிராயத்தினரின் முடிவு. எனவே அத்தகையோரைக் கவருவதற்காக இவர்கள் கறுப்பு உடை அணிகிறார்கள்.

ஃ

புனிதன்,
புதுவட்டகொடை.

கே: திருமணம் மோட்சத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்கிறார்களே, அப்படியானால் ஒருவன் இரண்டு மூன்று திருமணம் செய்ய சட்டமும் சமூகமும் இடம் தருவதில்லையே! ஏன்?

ப: இரண்டு, மூன்று திருமணங்கள் மோட்சத்தில் நிச்சயிக்கப்பட முடியாததால்.

கே: நான் காதலில் தோல்வி கண்டவன், காதலில் தோல்வி கண்ட கன்னி ஒருத்தி என்னைக் காதலிப்பதாகக் கூறுகிறாள் காதலிக்கலாமா?

ப: காதலிக்கலாமா என்று என்னிடம் அனுமதி கேட்பதிலிருந்தே நீங்கள் பொழுது போக்குக்காகக் காதலிப்பவரெனத் தெரிகிறது. உங்களிடமிருந்து அப் பெண்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.

ஃ

எஸ். பெருமாள்,
ஹாலியல

கே: சில பெண்கள் திருமணம் முடிந்த பிறகும் திருட்டுக் காதல் கொள்ளுகிறார்களே ஏன்?

ப: திருமணத்தின் மூலம் எதையோ எதிர்பார்த்து ஏமாந்திருப்பார்கள்.

ஃ

சி. பொ. ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்

கே: பாராளுமன்றத்தில் 'லஞ்ச மசோதா' நிறைவேறியதும் கல்முனை உறுப்பினர் காரியப்பர் அவர்கள் கதறி அழுதாரே ஏன்?

ப: அழுதாரா? பத்திரிகைகளுக்கு இது ஒரு நல்ல செய்தி! பதவியில் அவ்வளவு ஆசையா அவருக்கு?

ஃ

செல்வன் உ. சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம்

கே: கவலைப்படுகிறவர்கள் மெலிந்து போவதேன்?

ப: கவலையால் உள்ளம் மெலிந்து போகும். உள்ளம் மெலிந்தால் உடலும் மெலியும். உள்ளம் பூரித்தால் உடலும் பூரிக்கும்.



கொள்ளை-லாபம்

கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்களைக் கண்டுபிடிப்பதில் கிராம சேவகர்கள் அரசாங்கத்துக்கு உதவுவர்.

—செய்தி

பொருட்களின் விலையைக் குறைப்பதற்கு இந் நடவடிக்கைகள் உதவலாம் என்பதற்கு எதுவித உத்தரவாதமும் அளிக்கப்படவில்லை.

உயர்வு வேண்டாம்

ஆசிரியர்களின் உத்தியோக உயர்வுகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

—செய்தி

'உத்தியோக உயர்வு பற்றி எதுவுமே வேண்டாம். இடமாற்றப் பிரச்சினையாவது சிரமமின்றி நடக்குமா' என்று ஒரு ஆசிரியர் வினவுகிறார்.

சுலபமான வழி

வெள்ளைச் சாராயம் என்று குறிப்பிடப்படும் விசேட வடி சாராயம் தவறணைகளில் கிடைக்கவில்லை.

—செய்தி

'இந்தத் தட்டுப்பாட்டை நீக்கும் பொறுப்பை எம்மிடம் அளித்துவிட்டால் பிரச்சினை வெகு சுலபமாகத் தீர்ந்துவிடுமே' என்று ஒரு 'கசிப்பு' தயாரிப்பாளர் கோருகிறார்.

கவனம்!

பல்கொலியா பகுதியில் பாம்பாட்டிப் பிழைப்பு நடத்தி திரியும் குறவர்கள் அங்கே காணப்படும் நாய்களை வசப்படுத்திக் கொண்டு சென்று விடுகின்றனர்.

—செய்தி

மலைநாட்டு மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டியவர்கள் என்பதை இச் செய்தி நிரூபிக்கிறது. தொழிலாளர்களை வாழவைக்கிறோம் என்று வாக்களித்து விட்டு வேறு வகையில் தத்தம் சொந்தக் கருமங்களைப் பார்க்கும் பேர்வழிகள் மலிந்துவருகின்றனர். இதைத்தான் பாம்பாட்டும் குறவர்கள், நாயை வசிகரித்துச் செல்ல எத்தனித்ததை எடுத்துக் காட்டுகிறது.

தாமதம் ஏனோ?

விசாவுக்கு வரும் விண்ணப்பங்களை ஒரே நாளில் பரிசீலனை செய்துவிடுவதென குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் உத்தேசித்திருக்கிறது.

—செய்தி

'குப்பைக் கூடைக்குள் திணித்து விடும் பணிக்கும் ஒரு நாள் தேவைப்படுமா?' என்று நமது விடாக்கண்டர் வினவுகிறார்.

கலைச் செல்வி
கார்த்திகை இதழில்:
பண்டிதமணி கணபதிப்பிள்ளை, சற்குணநாதன், மட்டுவிலான், சடாட்சரன், அருள். வேலழகன் முதலியோரின் எழுத்தோவியங்கள்.
மக்கள் திலகம் பற்றிய சிறப்புக் கட்டுரை
இலக்கியக் கணைகள்—புதிய அம்சம்
சுவையான கேள்வி பதில் :: இலவச பரிசுப் போட்டி
தனிப்பிரதி 25 சதம்
கலைச் செல்வி,
குமாரசாமிப் புலவர் வீதி, சுன்னாகம்.



பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
இல: 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 3597-6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய இடமாற்றத்திற்கு ஒரு திட்டம்

# தமிழ்ப் பாடசாலைகளுக்கு தோன்றியுள்ள ஆபத்தை அது தீர்க்கும்

வட-கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படலாம் என்ற ஆபத்தான நிலை தோன்றியுள்ளது. போதியளவு தமிழாசிரியர்கள் வெளி மாகாணங்களில் கடமையாற்ற முன் வராமையே இதற்குக் காரணம் என்றும் தெரியவருகிறது. தமிழ் ஆசிரியர்களை வெளி மாகாணங்களுக்கு இடமாற்றும் பிரச்சினை கடந்த நாலு ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. இவர்களை இடமாற்றம் செய்வதற்கென்று உருவாக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் அமுல் நடாத்த முடியாமல் போய்விட்டது. இப்பொழுது தோன்றியுள்ள ஆபத்தை தடுத்து நிறுத்துவதற்கும், வெளி மாகாணங்களுக்கு தமிழாசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கும் ஒரு கவர்ச்சிகரமான திட்டத்தை கட்டுரையாளர் கொடுத்துள்ளார். அத் திட்டத்தை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொண்டால் நிச்சயம் இப் பிரச்சினை வெற்றிகரமாகத் தீர்க்கப்படும்.

கடந்த வாரம் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழாசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு மிடையில் நடைபெற்ற ஒரு மாநாட்டின் பின் வெளியிடப்பட்ட செய்தி யொன்று இந்த நாட்டில் உள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் அதிர்ச்சி யூட்டுவதாக அமைந்துள்ளது. வட—கீழ் மாகாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் உள்ள தமிழ் பாடசாலைகள் மூடப்படலாம் என்பதே அச்செய்தியாகும். இப்பாடசாலைகள் மூடப்படுவதற்கு யார் காரணம்? ஆட்சியாளரா அல்லது சிங்கள இனவெறியாளர்களா என்றால்; அதுதான் இல்லை. தமிழ்ப்பாடசாலைகள் மூடப்படுவதற்குத் தமிழாசிரியர்களே காரணம் என்று அச்செய்தியிலிருந்து தெரிய வருகிறது.

### புலிவாயில் தப்பி பூனை ...

நாளைய தமிழர் சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பை விரும்பியோ விரும்பாதோ ஏற்றிருக்கும் தமிழாசிரியர்களின் நடவடிக்கைகள் காரணமாக வட—கீழ் மாகாணங்கள் தவிர்ந்த இதர இடங்களில் உள்ள தமிழ்ப்பாடசாலைகள் மூடப்படலாம் என்பதை அறியும் பொழுது நமது உள்ளம் வெட்கத்தாலும் வேதனையாலும் குறுகுகிறது. அதே நேரத்தில், பெருந்தொகையான தமிழ்ப்பாடசாலைகள் இதுவரை மூடப்பட்டுவிட்டன என்பதைக் கேட்கும்பொழுது உள்ளத்து உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாது இருக்கிறது.

புலி வாயில் தப்பி பூனை வாயில் கொடுத்த கதையாக நமது நிலை முடியப் போகிறதே என்று எண்ணி ஏங்க வேண்டியிருக்கிறது. இனவெறி பிடித்த ஆட்சியாளர்களால் தமிழ்ப்பாடசாலைகளுக்கு ஆபத்து என்றால், அந்த இனவெறித் திட்டத்தை முறியடிப்பதற்கான போராட்டத்தில் குதிக்கலாம். இனவெறியாளர்களால் தமிழ்ப் பாடசாலைகளுக்கோ அல்லது தமிழ் மாணவர்களுக்கோ அல்லல் என்றால் ஆட்சியாளரின் உதவியை நாடலாம். இவற்றையெல்லாம் வெற்றிகரமாகத் தாண்டி நல்லதொரு அமைதியான சூழ்நிலையில் சென்று கொண்டிருக்கையில் இப்படியொரு ஆபத்தான சூழ்நிலை நம்மவர்களினால் தோன்றியிருக்கிறது என்றால் இதையிட்டு நாம் யாது செய்வது?

### தோல்வியுற்ற திட்டங்கள்

நம்மவர்களே நம்மவரின் அழிவுக்குக் காரண கர்த்தாக்களாவாதா? இந்நிலை உலகில் எந்த இனத்திற்காவது தோன்றியிருக்கிறதா? இதைப் பற்றி யாராவது சிந்தித்துப் பார்த்தார்களா?

ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினை இன்று நேற்றல்ல பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட நாளிலிருந்தே இருந்து வருகிறது. இந்த இடைக் காலத்தில் எத்தனையோ மாநாடுகளும், ஆலோசனைச் சபைகளும் கூட்டப்பட்டன. ஒவ்வொரு சந்திப்பின் போதும் ஒவ்வொரு திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை. எந்தத் திட்டத்தை உருவாக்கினாலும் அதற்கு எங்கிருந்தோ எதிர்ப்புக் குரலும் கூடவே தோன்றியது. இதனால் இந்த இடைக் காலத்தில் உருவாக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் தோற்றுவிட்டன. இப்பொழுதும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

### புதிய திட்டத்திலும் தவறு

புதிய இடமாற்றத் திட்டம்வட—கிழக்கு மாகாணம் முழுவதையும் ஒரே கண்ணோட்டத்தில் நோக்கும் முறையில் அமைந்திருக்கிறதாம். நெடுங்கேணியில் பிறந்த ஒருவர் நெடுந்தீவில் ஆசிரியராகக் கடமையாற்றினால் என்ன, திருக்கோயிலில் கடமையாற்றினால் என்ன, நெடுங்கேணியில் கடமையாற்றினால் என்ன மூன்று இடமும் ஒன்றாகவே கணிக்கப்படுமாம். அதாவது ஒரு ஆசிரியர் அவரின் சொந்தக் கிராமத்தில் கடமையாற்றினாலும் சரி, அல்லது பிரயாணக் கஷ்டங்கள் நிறைந்த வட—கீழ் மாகாணத்தி

**பூங்குன்றன்**

லுள்ள ஒரு இடத்தில்கடமையாற்றினாலும் சரி சம்பந்தப்பட்ட ஆசிரியர் உள்ளூரில் கடமையாற்றியதாகவே கணிக்கப்படுவராம். இத்தகைய கோணல்தனமான அம்சத்தைக் கொண்ட இடமாற்றத் திட்டமும் ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினையைத்தீர்த்துவைக்காது.

பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட ஒருவர் நெடுந்தீவில் ஆசிரியராகக் கடமையாற்றுவதோ அல்லது குருணாக்கல், கண்டி போன்ற இடங்களில் கடமையாற்றுவதோ அவர் மாட்டிலொன்றுதான். வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திருக்கோயிலில் கடமையாற்றினால் என்ன, புத்தளத்தில் கடமையாற்றினால் என்ன இரண்டும் ஒன்றுதான். 'உள்ளூர்' என்று கணிக்கும் பொழுது அதற்கு சில எல்லைகள் நிர்ணயிக்க வேண்டும். இவ்வாறு பிரச்சினைகளை உணர்ந்து கொள்ளாது உருவாக்கப்படும் கோணத்தனமான இடமாற்றத்திட்டங்களே இன்று ஆசிரியர் இடமாற்றப் பிரச்சினையைசிக்கலாக்கி, வெளி மாகாணங்களில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளை மூடும் அளவிற்கு ஆபத்தை உருவாக்கியுள்ளது.

### புதிய நியமனங்கள் இல்லை

இடமாற்றுத் திட்டங்களில் உள்ள தவறுதல்களைச் சுட்டிக் காட்டுகின்ற அதே நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களிற் (நாடு பூராவிலும் உள்ள பிரதிநிதிகள்) பலர் இவ்விடமாற்றங்களிற் தலையிடுவதும் பிரச்சினை [illegible] மையை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆசிரிய இடமாற்ற உத்தரவுகளை நிறுத்தி வைக்கும் முயற்சியில் பலர் அவ்வப்போது அனாவசியமாகத் தலையிட்டமையினால் இரு பெரும் ஆபத்துக்கள் தோன்றியுள்ளன. ஒன்று வெளிமாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டதும்—மூடப்படப்போவதும். அடுத்தது வட—கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் ஆசிரியர்கள் வெளியேற மறுத்தமையினால் புதிதாக ஆசிரியர்கள் எவரும் நியமனம் பெறமுடியாமற் போனது.

1960ம் ஆண்டுவரை வருடந்தோறும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு 300க்கும் அதிகமான மாணவர்கள் (ஆசிரியர்கள் அல்லாதார்) தெரிவு செய்யப்பட்டுவந்துள்ளார்கள். இந்த முறை 1961ம் ஆண்டிலிருந்து மாற்றப்பட்டது. எஸ். எஸ். சி. ஆசிரியர்களாக உள்ளவர்களே 1961ம் ஆண்டிலிருந்து பயிற்சிக் கலாசாலைகளுக்கு தெரிவு செய்யப்பட்டு வருகிறார்கள். இதனால் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் 1500 எஸ். எஸ். சி. சித்தியடைந்த தமிழ் மாணவர்கள் வழமையாகக் கிடைத்து வந்த ஆசிரிய பதவியை பெறமுடியாது போய் விட்டது.

இத்தஐந்துவருடகாலத்தில் இளைப்பாறிய ஆசிரியர்கள், சேவை காலத்தில் இறந்தவர்கள், வேறு சில காரணங்களினால் ஆசிரியத்தொழிலைத் துறந்தவர்கள் என்றுசராசரியாக ஆண்டொன்றுக்கு அறுபதிற்கும் மேற்பட்ட இடங்கள் காலியாகிக் கொண்டே வந்துள்ளன. இந்த வகையிலும் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் 300 காலி இடங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். இத்தனைக்கும் பொதுவில் சிறு தொகை தமிழ் இளைஞர்கள் ஆசிரிய மாணவர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள்.

### பிரச்சினைக்கு வழி

வட—கீழ் மாகாணத்தை விட்டு வெளியேற தமிழ் ஆசிரியர்கள் மறுத்தமையினாலும், இடமாற்றஉத்தரவு நிறுத்திவைக்கும்முயற்சியில் தலையிட்டமையினாலும் இந்த நிலை உருவாகியுள்ளது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்பொழுதும் வட—கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் தமிழ் ஆசிரியர்களை அனுப்புவது அத்தனை சுலபமானதாகப் படவில்லை. இதற்கு இருவழிகள் உண்டு. ஒன்று 'கவர்ச்சித் திட்டம்' ஒன்றை ஏற்படுத்துவது. வெளிமாகாணங்களுக்கு இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்களுக்கு 'விசேட உயர்வுப் படி'யுண்டு என்று அறிவிக்க வேண்டும். அதே நேரத்தில் இத்திட்டத்தின் கீழ் வெளி மாகாணத்தில் நாலு ஆண்டுகளுக்குக் குறையாமல் சேவை செய்பவர்களை, பின்னர் அவர்களின் சொந்த ஊரிலேயே சேவைக் காலம் முழுவதும் கடமையாற்ற அனுமதிக்கலாம் என்ற உத்தரவாதமும் கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலிருந்து வெளியேறும் எவரும்ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் வெளி மாகாணங்களில் கடமையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையையும் விதிக்க வேண்டும் இந்த இரு திட்டங்களுமே இன்று வெளி மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை தீர்க்க உதவும் என்பதை கல்வித் திணைக்களமும், தமிழ் அரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## விவேகானந்த சபையின் 37-வது சமயப் பரீட்சை

கொழும்பு விவேகானந்த சபையால் நடாத்தப்படும் அகில இலங்கைச் சைவசமயப்பாடப் பரீட்சை 7-11-65 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் இலங்கையின் சகல பாகங்களிலுமுள்ள 323 பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

இவ்வருடம் 437 பாடசாலைகளிலும், சங்கங்களிலுமிருந்து 34,666 மாணவர்கள் பாலர் பிரிவு 1. (இரண்டாம் வகுப்பு) முதல் மேற்பிரிவு 2 (க. பொ. த. ப. இரண்டாம் வருட வகுப்பு) வரையுள்ள ஒன்பது பிரிவுகளில் பங்கு பற்றுகின்றனர்.

இம்முறை பரீட்சை எடுக்கும் பரீட்சார்த்திகளின் தொகை கடந்த ஆண்டை விட 7500 அதிகப்படியாகவுள்ளது. இப் பரீட்சை அகில இலங்கையிலும் உள்ள பரீட்சை நிலையங்களிலும் நடைபெறும்.

மாணவர்கட்குரிய சுட்டிலக்கங்கள் பாடசாலைகட்கும், பரீட்சை நடைமுறைகள் பற்றிய சுற்று நிருபங்கள் கௌரவ மேற்பார்வையாளர்கட்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதே தினத்தில் பிற்பகல் 1 மணி முதல் கட்டுரைப் போட்டிகளும் நடைபெறும்.

## தமிழரசுக் கட்சி மாவிட்டபுரம் கிளை

இலங்கைத் தமிழரசுக் கட்சி மாவிட்டபுரம் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 27-10-65 புதன்கிழமை பிற்பகல் 7 மணியளவில் மாவை சின்னப்பு மடத்தில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. த. பொன்னம்பலம், செயலாளர்: திரு. ஆ. கு. சிவபாலசுந்தரம்பிள்ளை, பொருளாளர்: திரு. இ. சுந்தரலிங்கம், துணைத் தலைவர் திரு. சி. பொன்னம்பலம், துணைச் செயலாளர்: திரு. ச. மகேசுவரன்.

செயலவை உறுப்பினர்கள்: திருவாளர்கள், செ. வயித்திலிங்கம் சு. பாலசுப்பிரமணியம், பொ. ஜெயபதுமசிங்கம், மு. மகேசுவரன், செ. வல்லிபுரம், மூ. சுந்தரமூர்த்தி.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், லக கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

ஜாக்கிரதை!

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தி. மு. க. வில் இலங்கைக்கென தனிப் பகுதி"

## இந்நாட்டு சுயாதிபத்தியத்தில் இந்திய ஏடுகள் தலையீடாம்

### சிங்களப் பத்திரிகையின் குற்றச்சாட்டு

**'இலங்கையைத் தென்னிந்தியாவுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்ட திராவிட முன்னேற்ற கழகம், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் மத்திய உளவு சேவையைப்போல (சி. ஐ. ஏ) மிக நுட்பமான இரகசியத் திட்டங்களைக் கொண்ட ஸ்தாபனமாகும் தென்னிந்தியாவிலிருந்து இயங்கும் இந்த ஸ்தாபனத்தில் இலங்கைக்கென தனியொரு பகுதி உண்டு. இலங்கைக்கென சில பத்திரிகைகளும் அங்கு அச்சிடப்படுகின்றன' என்று ஸாசேன வித்கான என்பவர் "ஜனதின" 30-10-65 ந் திகதி இதழில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

அவர் தனது கட்டுரையில் மேலும் கூறுவதாவது:—

'தோட்டப் பகுதித் தமிழர்கள், இதர தமிழ் மக்கள் ஆகியோரிடம் வகுப்புவாத உணர்ச்சியை வளர்ப்பதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கும் தி. மு. கழகத்தினர் இலங்கையில் ஏற்பட்ட வகுப்புக் கலவரத்தின் வாயிலாகத் தங்களின் நிலையை இங்கு வலுப்படுத்திக் கொள்ள முயன்றனர்.

தென்னிந்திய இலக்கியமே அவர்களின் ஆக்கிரமிப்பு உபாயம். அதன் மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் கலாசாரத்தை மாசுபடுத்தியதுடன், அதன் மூலம் தோட்ட மக்களை தங்களின் முகாமுக்குள் கொண்டுவரவும் முயற்சி செய்தனர்.

இலங்கையின் சோஷலிச பாதையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் முதலாளிப் பத்திரிகைகளின் ஏகபோகத்தை முறியடிப்பதுடன், அதன் அன்னிய ஆதிக்கத்தையும் ஒழிக்க வேண்டும். தென்னிந்தியாவிலிருந்து சுமார் 80 பத்திரிகைகள் இங்கு வருகின்றன. இப்பத்திரிகைகளின் வாயிலாக அவர்கள் இலங்கையின் சுயாதிபத்தியத்திலும் தலையிட்டு, மிக பயங்கரமான ஒரு கொள்கையையும் அனுஷ்டிக்கின்றனர்.

அந்தப் பத்திரிகைகளிற் சில இலங்கைக்கென அச்சிடப்படுகின்றன. பெரும்பாலானவை தி. மு. க. இயக்கத்தைச் சேர்ந்தவை.

இன்று யு. என். பி.—தமிழரசு அரசாங்கத்தின் ஒத்துழைப்பைப் பெறும் தி. மு. க. வாதிகளும், நாம் தமிழர்களும் தேர்தற் சமயத்தில் முற்போக்கு முகாமைத் தோற்கடிப்பதற்காக இலங்கை சுயாதிபத்தியத்தில் மிகக் கடுமையாகத் தலையிட்டனர். 'ராணி' என்னும் பத்திரிகை கேலிச்சித்திரங்களை வெளியிட்டதின் மூலம் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை நிந்தனை செய்தது. 'சுதேசமித்திரன்' என்னும் ஏடு திருமதி சிறிமாவோ கட்டையை அணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பதைப் போல கேலிச் சித்திரம் வரைந்து அவமானப்படுத்தியது.

இப்பத்திரிகைகள் தேர்தற் சமயத்தில் திரு. டட்லி சேனநாயக்காவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு, இலங்கையிலுள்ள தமிழ் வாக்காளர்களைத் திசை திருப்ப மிகக்கீழ்த்தரமான முறையில் முயற்சி செய்தன.

தங்களின் நடுநிலைமைக் கொள்கைக்குப் பாதகமான செய்திகள் எதையும் வெளியிடக் கூடாதென ஏழு கூட்டு அரசாங்கம் இங்குள்ள தூதராலயங்களுக்கு அறிவித்துள்ளது. ஆயினும் தென்னிந்தியாவிலிருந்து இங்குவரும் பத்திரிகைகள் இலங்கையின் நேசநாடுகளை மிக மோசமான முறையில் தாக்குவதுடன், அந்நாடுகளுக்கெதிராக இந்நாட்டு மக்களிடையே தவறான அபிப்பிராயத்தை உருவாக்கவும் முயற்சி செய்கின்றன.

இலங்கையை இந்தியாவின் பிடியில் சிக்கவைப்பதற்கான எல்லா வசதிகளையும் ஏழுகூட்டு அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது.'

## தமிழர்பிரச்சினை தீர்க்க சர்ஒலிவர் உதவியாம்

'தமிழரசுக் கோரிக்கைகள் பற்றி தமிழரசுக் கட்சி விடுத்துள்ள இறுதி எச்சரிக்கையால் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையிலிருந்து விடுபடுவதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ள ஏழுகட்சி கூட்டு அரசாங்கத்தில் ஒரு பலம் வாய்ந்த கோஷ்டி இலங்கையைக் குடியரசாக்கும் பிரச்சினையின் மீது ஒரு பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென கட்சியின் மேலிடத்துக்கு யோசனை கூறியுள்ளது.

தமிழரசுக் கோரிக்கைகளில் சிலவற்றைக் கொடுத்தாலும் கூட, அது, யு. என். பிக்கு அரசியல் ரீதியாக நஷ்டத்தையே ஏற்படுத்துமென்றும் சுட்டிக் காட்டும் இக்கோஷ்டி பாராளுமன்றத்தைக் கலைத்து குடியரசை அமைப்பதற்காக மூன்றிலிருபகுதி ஆசனங்களை பெற்றுக் கொடுக்குமாறு மக்களுக்கு வேண்டுகோள்விடுத்தால், தமிழரசுக் கட்சியின்றி அரசாங்கம் அமைப்பதற்கான ஆசனங்கள் கிடைக்குமென்றும் யோசனை கூறியுள்ளது.

இந்த யோசனையை எதிர்க்கும் மற்றொரு கோஷ்டி கடந்த ஏழுமாதங்களில் அரசாங்கம் ஆக்கபூர்வமான சேவை எதையும் செய்யாததால், எந்தப் பிரச்சினையின் மீதும் பொதுத் தேர்தல் நடத்துவது மதியீனமாகுமென்றும் தமிழரசுக் கோரிக்கையைப் பல உபாயங்களைக் கையாண்டு மிகத்திறமையாகத் தட்டிக் கழித்துக் கொள்ள வேண்டுமென்றும், அதற்காக சர் ஒலிவர் குணத்திலகாவின் ஆலோசனையைப் பெறலாமென்றும் கூறியுள்ளது.

தமிழரசுக் கோரிக்கை பற்றி மிக இரகசியமாக ஒரு கூட்டம் நடத்தப்பட விருக்கிறதென்றும் இக்கூட்டத்தில் சர் ஒலிவரும் கலந்து கொள்வாரென்றும் தெரிகிறது.'

—எத்த (4-11-65(

## சிங்கள இதழ்களில்...

## அனுராதபுரத்தில் எல்லாளன் சகாப்தம்

'எல்லாளனின் சகாப்தத்தை நினைவூட்டக் கூடியதாக அனுராதபுரத்தில் அரசாங்க அலுவலகங்களில் தமிழர் ஆதிக்கம் வேரூன்றியிருப்பதுடன், இந்த அலுவலகங்களில் தலைமை அதிகாரிகளும், ஏனைய முக்கிய அதிகாரிகளும் தமிழர்களாகவோ, சிங்களவர் அல்லாதவர்களாகவோ இருக்கின்றனர்' என்று 'எத்தப்' பத்திரிகை (1-11-65) கூறுகிறது.

இது பற்றி இப்பத்திரிகை மேலும் குறிப்பிடுவதாவது:-

'அனுராதபுரத்தில் அரசாங்க அதிபராயிருந்த தேசபக்தரும் சிங்கள பௌத்தருமான திரு. சோமசிரி பிரேமவர்தன 'அரசியல் வஞ்சம் தீர்க்கும்' திட்டத்தின்படி உடனே மாற்றப்பட்டு, அந்தப்பதவி லூடுவொயிக் என்னும் பறங்கியருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் கச்சேரியில் காணிப்பகுதி, உணவுக்கட்டுப்பாட்டுப் பகுதி, கிராமாபிவிருத்திப்பகுதி, தேர்தல் பகுதி, சமூகசேவைப்பகுதி, புள்ளி விவரப்பகுதி, அனுராதபுரத்தில் நில அளவை இலாகா, பிராந்திய தபால் பகுதி, விற்பனவு இலாகா வீடமைப்புக் கொமிஷனர் திணைக்களம், நீர்ப்பாசனப் பகுதி, கராமசது இலாகா முதலிய முக்கியமான அரசாங்க அலுவலகங்களில் முக்கிய பதவிகளுக்கெல்லாம் தமிழர்களும், சிங்களவர்கள் அல்லாதோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனுராதபுரப் பகுதியில் சிங்கள பௌத்த மக்கள், குறிப்பாக விவசாயிகள் இத் தமிழ் அதிகாரிகளால் [illegible] கஷ்டத்துக்காளா[illegible]ளனர்'

### சிங்களவரும் குடியுரிமையும்

மாவனல்லைத் தொகுதியில் எல்பிட்டிய குவாகில் தோட்டத்தில் வசிக்கும் எம். ஜி. டிக்கிரியா, அவரது மனைவி, ஆறு குழந்தைகள் ஆகியோருக்கு தாங்கள் இலங்கைப் பிரஜைகள்தானு என்பதை நிரூபிக்கும்படி அந்தத் தோட்டத்து நிர்வாகி உத்தரவிட்டுள்ளார்.

இலங்கையிற் பிறந்து வளர்ந்த சிங்களக் குடும்பத்தைப் பிரஜாவுரிமையை நிரூபிக்கும்படி கோரும் இந்த ஏழு கூட்டு அரசாங்கம் அந்த தோட்டத்தில் வசிக்கும் கள்ளக் குடியேற்றக்காரர்களிடம் பிரஜாவுரிமை பற்றி எதுவுமே கேட்பதில்லை. சில மாதங்களுக்கு முன்பு 'லங்கா தீப்ப' பத்திரிகையால் பெரிதும் விளம்பரப்படுத்தப்பட்ட சிங்கப்பூர் காதர் என்ற நபர் மாவனல்லைப் பகுதியில் பெருந்தோட்டங்களைச் சொந்தமாக்கிக் கொண்டு இன்றும் வசித்து வருகிறார்.

—எத்த (2-10-65)

### ரூபா 20 கோடி நிராகரித்தனராம்

'சோஷலிச நாடான கிழக்கு ஜெர்மன் குடியரசு இலங்கைக்கு வழங்குவதாகத் தெரிவித்த ரூ. இருபது கோடி உதவியை வேண்டாமெனக் கூறி யு. என். பி.-தமிழரசு அரசாங்கம் அதனை நிராகரித்து விட்டது. கிழக்கு ஜெர்மன் தூதராலயத்திலுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கையைக் கட்டுப் [illegible] திருக்கிறது.'

—ஜனதின (30-10-95)

### பௌத்த அதிகாரிகளை நீக்குகின்றனராம்

பிரதம மந்திரிக்கு ஒரு சவால் என்ற தலைப்பில்கிழ்க் காணும் செய்தியை 'ஜனசத்திய' (31-10-65) வெளியிட்டுளது.

'அரசாங்க அதிபர்களை மாற்றுவதற்கான காரணம், சேவையில் பழுத்த அனுபவமுள்ள, கச்சேரி அலுவல்கள் பற்றித்தெரிந்த உணவு உற்பத்தி வேலைகள் பற்றி அனுபவமுள்ள அதிகாரிகளை அந்தப் பதவிகளுக்கு நியமிப்பதே என்று பிரதம மந்திரி சிங்கள பௌத்த அரசாங்க அதிபர்களை மாற்றல் செய்வதுபற்றி ஆட்சேபனை தெரிவிப்பதற்காகத் தன்னைப் பேட்டி கண்ட பௌத்த பிக்குகள் கோஷ்டியிடம் கூறியுள்ளார். அவரது கூற்றுதவறுகும். அதை நிரூபிக்கும்படி அவருக்குச் சவால் விடுகின்றோம்.

அனுபவமிக்க அதிகாரிகளை நியமிப்பதென்ற போர்வையில் மறைந்துகொண்டு சிங்கள பௌத்தர்களை நீக்கிய யு. என் பி.— தமிழரசு அரசாங்கம் அவர்களைவிட அனுபவத்தில் குறைந்த சிங்களரல்லாத— பௌத்தரல்லாதவர்களைப் பதவியில் தொடர்ந்திருக்க அனுமதித்திருக்கின்றனர். மன்னார் அரசாங்க அதிபர் நேசையா, மாத்தறை அரசாங்க அதிபர் பிரான்ஸிஸ் பீட்டர்ஸ் ஆகியோர் அத்தகையோராவர்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள 13 பேர்களில் ஒன்பது பேர் சிங்கள பௌத்தரல்லாதோராவர். அவர்களில் ஒருவர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தைக் கவிழ்க்கச்செய்த சதி பற்றிய வழக்கில் சிக்கி பின்னர் விடுதலை செய்யப்பட்டவர்.

ஓர் அரசாங்க அதிபர் சாதி அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளார். திருமலை அரசாங்க அதிபர் திரு. மகிந்த சேனநாயக்கா அங்கு தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்துக்கு உட்படாமல் வகுப்பு வாதிகளுக்கு எதிராகக் கடமையாற்றியவர்.

மாற்றப்பட்டுள்ள குருனாக்கல் அரசாங்க அதிபர் திரு. பாலித்த வீரமன் யானை மலை மீது ஒரு பெரிய புத்தர் சிலையை நிறுவுவதில் முன்னணியில் நின்று பாடுபட்டவர்.

இந்நாட்டில் பெரும்பான்மையோரான சிங்கள பௌத்தர்கள் விஷயத்தில் யு. என். பி.— தமிழரசு அரசாங்கம் எவ்வாறு நடந்து கொள்ளுகிறதென்பது அரசாங்க அதிபர்களின் மாற்றல் அம்பலப்படுத்தியுள்ளது'

### ஆங்கிலத்தில் பிறப்பு பதிவு

'பதுளை நகரப்பகுதியில்மரணம், பிறப்பு பதிவுசெய்தல் ஆங்கிலத்தில் மட்டுமே செய்யப்படவேண்டும் என்று பிரதம பதிவு அதிகாரி கட்டளையிட்டுள்ளார். இதுவரை சிங்களத்தில் நடத்திவந்த இப்பதிவுவேலையை ஆங்கிலமாக மாற்றியதை அங்குள்ள சிங்கள லிகிதர் சங்கம் ஆட்சேபித்துள்ளது.

—எத்த (1-11-65)

ஜீ. சீ. ஈ. (சா. த.)

பரீட்சையில் தேற உதவி புரியும்.
பட்டதாரி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட வினாவிடை பயிற்சிக் கோவைகள்.

| | |
|---|---|
| தமிழ் பாஷை | 5-00 |
| எண் கணிதம் | 5-00 |
| குடியியல் | 5-00 |
| உடனலவியல் | 5-00 |
| சரித்திரம் | 5-00 |
| இஸ்லாம் | 5-00 |
| பொது அறிவும் விவேகமும் | 5-00 |
| 101 கட்டுரைகள் | ரூ. 7-50 |

சர்வகலாசாலை போதனு கழகம்
(U T I)
540, மருதானை வீதி,
த. பெ. 1079,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை....?

வெங்கடபதியின் வீட்டில் அன்று ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டதுபோலும். சதா கலகலப்பாகத் திகழ்ந்த அவ்வீடு, காட்சி முடிந்த சினிமாக் கொட்டகைபோல் ஒருவித அமைதியுடன் காட்சியளித்தது.

எந்நேரமும் வாய் ஓயாமல் யாருடனாவது அரட்டை அடித்துக்கொண்டிருக்கும் வீட்டுக்காரி மங்களம் கூட சோகமே உருவாய் கைகளைத் தாடையில் ஊன்றியவாறு ஓரிடத்தில் அமர்ந்திருந்தாள். எமக்குஞ்சு எனப் பெயர் வாங்கிய கடைக்குட்டி சீனுவும் பயத்தால் சப்தநாடியும் ஒடுங்கியவனாக கதவிடுக்கில் பதுங்கியபடி இருந்தான். இருவரின் கண்களும் அவ்வறையின் ஓரிடத்தில் பதிந்திருந்தன.

சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் மட்டும் எவ்வித மாற்றமுமின்றி 'டிக் டிக்' என்ற ஒலியுடன் ஓடிக்கொண்டிருந்தது. மங்களம் கடிகாரத்தைப் பார்ப்பதும் மறுபடி தெருவைப் பார்ப்பதுமாக பயந்தபடி கணவரின் வருகையை எதிர்பார்த்து நின்றாள். அவர் கேட்டால் என்ன பதில் சொல்வது? கணவர் மிகவும் பொல்லாதவர் ஆயிற்றே. இன்று என்ன நடக்குமோ, எனப் பலவாறாக எண்ணி அவளுடைய மூளையைக் குழப்பிக்கொண்டாள். கடிகாரம் இரண்டு முறை அடித்து ஓய்ந்ததும் பள்ளி சென்ற குழந்தைகள் முன்னே வர வெங்கடபதி உள்ளே நுழைந்தார். அவர்கள் வருகையைக் கண்டதும் மங்களத்திற்கு மயக்கமே வருவதுபோல் இருந்தது. இருந்த இடத்திலிருந்து அவளால் எழுந்துநிற்க முடியவில்லை.

நிமிடக் கதை

சந்தோஷ ஆரவாரத்துடன் உள்ளே நுழைந்தவர்கள் அங்கு நடந்திருந்த கோரக்காட்சியைக் கண்டு ஒருவிநாடி திகைத்து நின்றனர். மறுகணம்......

"ஐயோ அம்மா என்ன செய்துவிட்டீர்கள்" என்று குழந்தைகள் ஏககாலத்தில் அலறினர்.

"என்ன மங்களம்? என்ன கோலம் இது?" என்று வெங்கடபதி தடுமாறினார்.

"என்ன அநியாயம். கால்கள் எத்தனை துண்டங்களாக வெட்டப்பட்டுள்ளன?" பரிதாபத்துடன் அத்துண்டுகளைப் பார்த்தபடி பெரிய பையன் புலம்பினான்.

"அப்பப்பா என்ன கோரம், கண்கள் இரண்டும் வெளியே பிதுங்கி அல்லவா இருக்கின்றன?" பயத்தால் கண்களை இறுகமூடிக் கொண்டாள் மூத்த பெண் பத்மா.

"வயிற்றுப் பாகம் மட்டும் என்ன? பார்க்கவே சகிக்கவில்லை." மறுபக்கம் திரும்பிக்கொண்டான் இரண்டாம் பையன் சிவம்.

"என்னதான் நடந்தது? சொல்லேன். கற்சிலைபோல் நிற்கிறாயே" என்று மனைவியைப் பார்த்துக் கேட்டார் வெங்கடபதி.

"நான் எதைச் சொல்ல. சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தபோது சீனு வந்து மிட்டாய் வாங்க காசு கேட்டு அடம் பிடித்தான். அப்பா வந்ததும் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு வேலையில் கவனமாக இருந்தேன். சிறிது நேரம் கழித்து ஏதோ காரியமாக இங்கே வந்தபோது இக்காட்சியைக் காண முடிந்தது" என்று கதவிடுக்கில் பதுங்கி இருந்த சீனுவைப் பார்த்தபடி மங்களம் சொன்னாள். எல்லோர் பார்வையும் சீனுவின்மேல் பதிந்தது. அவனுடைய கையில் ஒரு பெரிய சக்தி காட்சியளித்தது.

வெங்கடபதி கோபத்துடன் பின்வருமாறு சொல்லிக்கொண்டே அடுத்த அறையினுள் நுழைந்தார். "வாங்கி இரண்டுநாள் கழியவில்லை. அருமையான ஜப்பான் பொம்மை நாசமாக்கிவிட்டான்."

— "றஜப்டீன்"



# மங்கையர் சங்கம்

கருத்துமேடை

## கிராமப்புறச் சிறுவர்களை கெடுப்பது எது?

### திரையிலும சுவரிலும் ஆபாசம் [4]

மேலை நாடுகளிலிருந்து இங்கு கொணர்ந்து திரையிடப்படும் ஆங்கிலப் படங்களில் பெரும்பாலானவை ஆபாசம் நிறைந்தவை. அதற்காகச் சுவர்களில் ஒட்டப்படும் விளம்பரங்களும் அத்தன்மையனவே. ஆயின் இவைதான் சிறுர்களைக் கெடுக்கின்றன எனத் திட்டவட்டமாகக் கூற முடியாது.

கிராமப்புறச் சிறுர்களைப் பட்டினப்புறச் சிறுர்களோடு ஒப்பிட்டு நோக்குமிடத்து, கிராமப்புறச் சிறுர்களே மிகவும் கீழ்நிலையில், கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் காணலாம். ஆயின் இச்சிறுர்கள் ஆபாசம் நிறைந்த சினிமாவைப் பார்த்திருப்பார்கள் என யார்தான் கூறமுடியும்? அதேபோல் கிராமப்புறங்களில் இத்தகைய சுவரொட்டி விளம்பரங்களை எந்தச் சுவரில்தான் நாம் காண முடியும்? எனவே இச்சிறுர்களைக் கெடுத்ததுதான் என்ன?

ஆபாசச் சினிமாவை அல்லது சுவரொட்டி விளம்பரத்தைப் பார்த்து ரசிப்பதால்தான் சிறுர்கள் கெடுகிறார்கள் எனவுங் கூற முடியாது.

வசந்தா நடராசா
மீகா கியூல

உதாரணமாக ஒரு பொருளை வைத்து ஒரு கூடையால் மூடி, அதற்குள் இருக்கும் பொருளைப் பார்க்கக்கூடாது என ஒரு சிறுபிள்ளைக்குக் கூறுவோமாயின் அப்பிள்ளை அதற்குள் இருக்கும் பொருள் எத்தன்மையது என்பதை அறிவதற்கு மிகவும் ஆவலாக இருப்பதுடன் யாருமற்ற வேளையில் அப்பொருளைக் களவாகப் பார்ப்பதற்கும் எத்தனிக்கும்.

ஆனல் அப்பொருள் எத்தன்மையது என்பதை அப்பிள்ளைக்குக் காட்டிய பின் மூடிவைப்போமாயின் அதனைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலே அப்பிள்ளைக்கு ஏற்படாது. அதுபோலவே ஆபாசம்நிறைந்த சினிமாவையோ அல்லது சுவரொட்டி விளம்பரத்தையோ பார்க்கும் சிறுர்கள் அத்தகைய கெட்ட நடவடிக்கைகளை அறிந்தபின்பும் அதில் ஈடுபடுவார்களென்று கூற முடியாது ஆனலும் சிலர் இதன்பின் தீய செயல்களில் ஈடுபட்டாலும் அதற்கு ஆபாச சினிமாவும் சுவரொட்டி விளம்பரமும் தான் முக்கியகாரணம் எனக் கூறமுடியாது.

குடித்தனக் குறிப்பு

# கம்பளி ஆடைகள் சலவை முறை

—செல்வி நளினி நாதன்—

கம்பளி ஆடைகள் மிகவும் விலை உயர்ந்தவை. —மற்றைய ஆடைகளைச் சலவை செய்வதுபோல் இவற்றைச் சலவை செய்ய முடியாது — தனிப்பட்ட முறையில் சலவை செய்யாவிடில் இவை நீடித்து உழைக்க மாட்டா. கம்பளி சுருங்கக்கூடியது மட்டுமன்றி விரைவில் அழுக்காகிவிடவும் கூடியது. எனவே, அவற்றைச் சுத்திகரிக்கையில் சோடா பாவிப்பதையும், அதிக சூடுள்ள நீரைப் பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டியது அவசியம்.

சலவை செய்யும்போது கசக்கவோ அன்றி அழுத்திப் பிழியவோ கூடாது. எப்போதும் மென்நீரை, மிதமான சூடுள்ள நீரைப் பயன்படுத்துக. அதிகப்படியான அமிலம் சேர்ந்த சவர்க்காரங்களும்; சவர்க்காரத்தூளும் கம்பளி ஆடையில் ஒருவித பழுப்பு நிறத்தை ஏற்படுத்துகின்றன. எனவே சுத்தமான சவர்க்காரத்தை உபயோகியுங்கள். துணிகளை வெண்மையாக்கப் பயன்படும் Bleach என்கிற சலவைப் பொடியைப் பயன்படுத்தக் கூடாது.

எப்போதும் கம்பளிஆடையில் படிந்த கொழுப்புக்கறைகளை அகற்றிய பின்னரே சலவை செய்யவேண்டும். வெண்ணிறக் கம்பளி ஆடையானல் மாத்திரம் சிறிது 'அம்மோனியா'வையும், 'ஹைட்ரஜின் பேரொக்சைட்'டையும் (Hydrogen Peroxide) கலந்து பாவிக்கலாம். அல்லது 'போரக்ஸ்' நீரில் கலந்து சலவை செய்யவும்.

கடைசியாக அலசும் நீரில் சிறிது நீலம் சேர்க்கலாம். எப்போதும் அதிக அழுக்குப் படியும் முன்னரே கம்பளி ஆடைகளைச் சுத்தம் செய்யுங்கள். சலவை செய்யும் முன்னர் ஆடையில் உள்ள கிழிசல்களைத் தைத்துக் கறைகளையும் அகற்றிவிடவேண்டும். கம்பளி ஆடையை நீரில் போட்டால் சுருங்கும். எனவே, முதலில் ஒரு பத்திரிகைத் தாளில் கம்பளி ஆடையை விரித்து அதன் அளவைத் தாளில் வரைந்துகொள்ளவும்.

இரண்டு பாத்திரங்களில் சூடான நீரில் சவர்க்காரக் கரைசலைத் தயார்படுத்திக்கொண்டு, முதற் பாத்திரத்தில் கம்பளி ஆடையை ஊறவிடவும். அதிக நேரம் ஊறினல் கம்பளி இழைகள் பாதிக்கப்பட்டுவிடும். இலேசாகக் கசக்கி ஆடையைப் பிழிந்து, மற்றப் பாத்திரத்திலுள்ள சவர்க்காரக் கரைசலில் ஆடையையிட்டுக் கசக்கிப் பிழியவும். அழுக்கு அதிகமாயிருந்தால் மாற்றி மாற்றி புதிய சவர்க்காரக்கரைசலில் அலசவும். பின்னர் பல தடவை நீரில் அலசிச் சவர்க்காரத்தை அகற்றவும்.

சாயம் அகலக்கூடிய ஆடையானல் அலசும் நீரில் சிறிது வினகிரி கலந்துவிடவும். பின்னர் ஒரு உலர்ந்த துவாலையில் கம்பளி ஆடையை வைத்து மெதுவாகப் பிழிந்து ஈரத்தை அகற்றவும்.

ஆடையை நன்கு உதறி, முன்னர் அதன் உருவம் வரையப்பட்ட கடதாசியின் மீது வைத்து, சுருங்கியிருந்தால் ஆடையை அதன் சுய உருவத்தினளவிற்கு நன்கு இழுத்துச் சரிசெய்து, குண்டூசிகளினல் குத்திவிடவும். ஒரு துவாலை மீதோ அல்லது நாற்காலி மீதோ வைத்து இளம் வெய்யிலில் உலர விடவும். அடிக்கடி ஆடையைத் திருப்பிவிடல் வேண்டும். வெல்வெட் ஆடைகளுக்கும் இம்முறையைப் பின்பற்றிச் சலவை செய்யலாம். கம்பளி ஆடையை உலர்ந்த பின் சாதாரண சூடுள்ள இஸ்திரிப்பெட்டியினல் அழுத்தலாம் அல்லது கொதிநீருள்ள கேத்தலின் வாயின் முன்னர் பிடித்தால் சூடான நீராவியானது கம்பளி இழைகளினூடு புகுந்து வெளிப்படும்போது இழைகளை நேர்த்தியாக்கும். வேண்டுமானல் ஒரு பிரஷினல் கம்பளி இழைகளை வாரிவிடலாம்.

# பெண்களே! வேலைக்கு வாருங்கள்

[இங்கல்ல—ஜெர்மனியில்]

ஹாம்பர்க் மாதர் சங்கங்களின் கூட்டமைப்பு, இரண்டாண்டுக்கு ஒரு முறை ஹாம்பர்க் நகரில் நடத்தும் "நீங்களும் உங்கள் உலகமும்" என்ற கண்காட்சி மிகவும் பிரபல்யமானது; நகரிக நங்கையர் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் இக்கண்காட்சி சித்தரித்துக் காட்டுகிறது.

இந்த ஆண்டு 600 ஜெர்மன, வெளிநாட்டு ஸ்தாபனங்களும், இக்கண்காட்சியில் பங்கெடுத்துக்கொண்டன. தொழில்நுணுக்கங்கள் முன்னேறிவரும் இக்காலத்தில், ஒய்யார மங்கைகளுக்கும், வயதுவந்த பெண்களுக்கும் என்னென்ன வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை விளக்கும் வகையில், பெயர் பெற்ற நிறுவனங்கள் பல அரங்குகள் அமைத்திருந்தன.

கடந்த சில ஆண்டுகளில் மட்டும் மங்கையர்களுக்கென உருவாக்கப்பட்டுள்ள வேலைகள் என்ன என்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. சில அரங்குகளில் பெண்களே வேலை செய்துகொண்டிருந்தனர். மாதர் வேலைவாய்ப்புக்கான தகவல்களை எடுத்துரைத்தனர். வானொலி, திரைப்படம், டெலிவிஷன் அரங்குகளில் ஏகக்கூட்டம்! ஒலிப்பதிவாளர்கள், ஒப்பனையாளர்கள், தொகுப்பாளர்கள் முதலிய வேலைகளின் தன்மைகளை அறிந்துகொள்வதில் மங்கையர்கள் மட்டற்ற ஆர்வம் காட்டினர்.

பல்வேறு தொழில்களில் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டங்கள்; கணக்கு இயந்திரங்களை இயக்குவதற்கான பயிற்சி, பெரிய அலுவலகங்களின் நிருவாகத்துறையில் எல்லா வேலைகளையும் ஒருங்கிணைத்து மேற்பார்வையிடும் பதவிக்கான பயிற்சி, பத்திரிகை அலுவலகத்தில் அச்சுக்கோர்க்கும் இயந்திரத்தில் வேலை செய்வதற்கான பயிற்சி ஆகியவை குறித்து முழு விவரங்களும் அளிக்கப்பட்டன.

வயதாகிவிட்டதே என்று பெண்கள் கவலைப்பட வேண்டியதில்லை. 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு என்னென்ன வேலை வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் இக்கண்காட்சி விளக்கியது. வயதுவந்த சில பெண்களுக்கு ஏற்கனவே பார்த்த பழைய வேலை பிடிக்காமல் இருக்கும் தொழில் நிர்வாகத் துறைகளில் அவர்களுக்கு என்னென்ன வேலைகள் காத்திருக்கின்றன, எவற்றிற்கும் மிகவும் குறுகிய காலத்தில் பயிற்சி அளித்து தயார்செய்கிறார்கள் என்ற தகவலும் தாராளமாகத் தரப்பட்டது. சிலருக்கு, சந்தடிமிகுந்த அலுவலகம், தொழிற்சாலைகளில் வேலை பார்க்கப் பிடிக்காது; அப்படிப்பட்டவர்களுக்கு குழந்தைகள் இல்லங்கள், முதியோர் விடுதிகள் ஆகிய இடங்களில் வேலை இருக்கின்றன.

"பாஷனுடன்" தொடர்புள்ள வேலைகள், அதிகமான கன்னியர்களைக் கவர்ந்துள்ளது. தொழில் நுட்பம் வளர்ந்துள்ள இக்காலத்தில், தையல், ஆடைத் தயாரிப்புத் தொழிலில் ஏராளமான மங்கையர் மகிழ்ச்சிகொள்கின்றனர். ஆடை அலங்காரக் கடைகள், துணிக்கடைகள், தையல் கடைகள் எல்லாமே வேலைக்குப் பெண்களையே எதிர்பார்க்கின்றன.

அடுத்த இதழில்

பட்டுலேஸ் வகைகள் சலவை முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமச்சந்திரனும் இடதுசாரி ஏடுகளும்

## பொய்யுரையும் புனைகதையும் போலியான பிரசாரமும்

ஒரு கலைஞனாகவே திரு. இராமச்சந்திரன் இந்நாட்டுக்கு வருகை தந்தார். அவருடைய விசேடத் தன்மைகளே அவரை மக்கள் போற்றிப் புகழும் நிலைக்கு உயர்த்தி விட்டது. இதனை உணராது சில இடதுசாரிப் பத்திரிகைகள் விஷமத்தனமான செய்திகளைப் பிரசுரித்து வகுப்புவாதப் பூச்சாண்டி காட்ட முனைந்து விட்டன. வகுப்புவாதப் பணியையே தன் பணியாகக் கொண்ட 'சுயாதினப்' பத்திரிகைகளே அவரைத் தருவித்தன. இனிமேலாவது வகுப்புவாதக் கூச்சலைக் கிளறுதிருப்பது புத்திசாலித்தனமாகும்.

**திரு.** எம். ஜி. ராமச்சந்திரன அவர்களும் சரோஜாதேவி அவர்களும் இலங்கைக்கு வருகை தந்ததை அடிப்படையாக வைத்து இடதுசாரி இயக்கங்களினுல் நடாத்தப்படும் சில சிங்களத் தினசரிகள் விஷமத்தனமானதும் வெறும் பொய்யானதுமான செய்திகளைப் பிரசுரிக்கத் தலைப்பட்டுவிட்டன.

'உண்மை' (எத்த) என்ற பெயருடன் கொம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை விகற்பமான செய்திகளை, எதுவிதமான ஆதாரமற்ற தன்மையில் வெளியிடுவதில் முன்னணியில் நிற்கிறது. கொம்யூனிஸ்டுகளின் அகராதியில், 'உண்மை' என்ருல் 'பொய்' என்றுதான் அர்த்தமிருக்கிறது போலும்.

கடந்த 27-10-65ல் வெளியான 'எத்த' என்ற தினசரி, 23ம் திகதி மட்டக்களப்பில் திரு. ராமச்சந்திரன் பேசிய பேச்சை முற்றிலும் திரித்துக் கூறி, பொய்யான சரடைப் புனைந்துள்ளது. 'இலங்கைத் தமிழருக்குச் சுதந்திரம் பெற்றுத் தருவேன்' என்று திரு. ராமச்சந்திரன் பேசியதாக தலைப்பிட்டு செய்தி தந்திருக்கிறது 'எத்த' (இதன் மொழி பெயர்ப்பை கடந்த வாரம் சுதந்திரன் 5ம் பக்கத்தில் வெளியிட்டிருந்தோம்.)

மட்டக்களப்பு மைதானத்தில் ஏறத்தாழ ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டு நின்று திரு. ராமச்சந்திரனின்பேச்சைச் செவிமடுத்தனர். போதாதமைக்கு கொழும்பிலிருந்து திரு. ராமச்சந்திரன் குழுவினரை நிழல் போற் தொடர்ந்து இரண்டு துப்பறியும் பொலீசாரும் சென்றனர். இவ்விருவருக்கும் தமிழ் நன்ருகத்தெரியும். பொலீஸ் இன்ஸ்பெக்டரும் இரு பொலீஸ் ஊழியர்களும் சென்றிருந்தனர். மட்டக்களப்பு பொலீசார் திரு. ராமச்சந்திரனின் பேச்சை பதிவு செய்தனர். இவைதவிர சில மட்டக்களப்பு நண்பர்களும் பேச்சுக்களை பதிவு செய்துள்ளனர்.

### ஒலிப்பதிவிலே இல்லையே!

இத்தனை ஒலிப்பதிவுகளிலும் எவற்றிலேனும் 'எத்த' கூறுகின்ற பேச்சு இடம்பெறவில்லை என்பது தெட்டத்தெளிவான உண்மை.

27ம் தேதி வெளியான 'எத்த'யில் 'எம். ஜி. ஆர்.—ஜே. ஆர். பேச்சு' என்றும், இருவரும் அந்தரங்கமாக அரசியல் பேசினர் என்றும் சில பொய்யுரைகளையும் கூறியிருக்கிறது.

25ம் தேதி திங்கட்கிழமை பகல் திரு. ராமச்சந்திரன் குழுவினருக்கு திரு. எஸ். சற்குருநாதன் அவர்களால், கண்டி குவீன்ஸ் ஹோட்டலில் வைத்து மதிய உணவு அளிக்கப்பட்டது. மாத்தளையிலும், கண்டியிலும் நடைபெற்ற வரவேற்புக்களில் பங்கு கொள்ளவே, திரு. ராமச்சந்திரன் குழுவினர் சென்றனர். இதே ஹோட்டலில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இருந்தார். திரு. ராமச்சந்திரன் அமைச்சரைக் கண்டு தமது மரியாதையைத் தெரிவிக்க விரும்பினுர். இருவரும் சந்தித்தனர். இவ்விருவருடைய பேச்சிலும் எதுவிதமான அந்தரங்கமான செய்திகளும் அடங்கியிருக்கவில்லை.

'இவ்விருவரும் இரகசியமாக, முன்னறிவித்தலின்படி பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்தனர் என்ற கருத்துத் தொனிக்கத்தக்க வகையில் செய்தி வெளியிட்டதோடல்லாமல், 'படம் எடுக்கச் சென்ற படப்பிடிப்பாளரையும் அமைச்சர் துரத்தியடித்தார்' என்றும் இப்பத்திரிகை புளுகியுள்ளது. இத்தகவலும் ஆதாரமற்றதும் உண்மைக்குப் புறம்பானதுமாகும்.

திரு. ஜெயவர்த்தன தம்பதிகளை திரு. ராமச்சந்திரன் குழுவினர் சந்தித்ததைப் படம் பிடித்து சில சிங்களத் தினசரிகளே வெளியிட்டுள்ளன. 'எத்த'வும் இப்படத்தை மறுபிரசுரம் செய்துள்ளது.

மேலும் திரு. ராமச்சந்திரன் சென்ற விடமெல்லாம் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு நிற்கும் வேளையில் இரகசியமாக அவர் எங்கே எவரைச் சந்திக்கச் செல்ல முடியும்? அப்படிச் சந்திப்பது நெருப்பை துணியால் மூடி வைப்பதற்கு ஒப்பாகாதா?

### தமிழரசுத் தலைவர்களுடன்

28ம் திகதி பகல் ஒரு மணிக்கு திரு. ராமச்சந்திரன் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களுடைய இல்லம் சென்றிருந்தார். திரு. செல்வநாயகம், திரு. அமிர்தலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகிய தலைவர்களுடன் பகிரங்கமாகவே உரையாடியிருந்தார். இவ்வுரையாடல் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் நீடிக்கவில்லை.

அன்றிரவு உள்ளூராட்சி மன்றங்களின் அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் திரு. ராமச்சந்திரன் குழுவினருக்கு விருந்தளித்தார். இவ்விருந்துபசாரத்தின் போது திரு. அமிர்தலிங்கம், டாக்டர் நாகநாதன், பண்டிதர் இரத்தினம் ஆகியோரும் பங்கு கொண்டனர். விருந்துண்டதுடன் சாவகாசமான உரையாடல்கள் நடைபெற்றனவே தவிர அந்தரங்கமான அரசியற் பிரச்சினைகள் எவையுமே எழும்பவில்லை.

### தமிழகமும் ஈழமும

தமிழகத்தாரும், இலங்கைத் தமிழ் பேசும் இனமும் ஒரே மொழி பேசுபவர்கள்; கலை, பண்பாடு, நாகரீகம், மதம் முதலியவற்ருல் இவ்விரு இனத்தவருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஆனுல் அரசியலைப் பொறுத்த வரையில் அணுவளவும் தொடர்பு கிடையாது என்பதனை இந்நாட்டு அரசியல் வாதிகள் அத்தனை பேரும் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

தென் இந்தியாவிலிருந்து எத்தகைய ஒரு கலைஞன் வந்தாலும்—ஏன் அரசியற் தலைவன் வந்தாலும், இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள், தங்கள் சகோதரனுக்குக் கொடுக்கும் கௌரவத்தைக் கொடுத்து அகமும் முகமும் மலர வரவேற்பார்கள். இதனைத் தவறு என்று கூறுவது அடிமுட்டாள் தனமாகும். ஆனுல் அங்கிருந்து இங்குவருவோரின் அரசியற் கருத்தை ஏற்கவோ, அந்நிய நாடான இந்தியாவுக்கு அடிமைச் சாசனம் எழுதிக் கொள்ளவோ எந்தத் தமிழனும் தயாராக இருக்க மாட்டான்.

தன்மானம் மிக்கவன் தமிழன் தன் அரசியலை மாற்ருனுக்கு உரித்தாக்கிவிட்டு, அடிமையாக வாழ அவன் விரும்ப மாட்டான். ஆகவே இந்தியாவின் அரசியலை ஏற்கவோ, இந்தியாவின் கொத்தடிமையாகவோ இருக்க வேண்டும் என்ற துரோக சிந்தை எவருக்கும் ஏற்பட இடமில்லை என்பதனை, வகுப்புவெறியைத்தூண்டிவிட்டிடும் விஷமிகள் கருத்திற் கொள்ள வேண்டும்.

### அரசியற் தூதல்ல

திரு. ராமச்சந்திரன் இலங்கை வந்ததுமே தமது வருகை 'வெறும் கலாச்சாரத் தூதாகயிருக்குமேயன்றி, அரசியற் கலப்புள்ளதாக அமையாது' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிருர். அவருடைய அரசியல் வழிகாட்டியான அறிஞர் அண்ணுவே, திரு. ராமச்சந்திரனை வழியனுப்பி வைக்க மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வந்திருந்தபோது இதே கருத்தை வற்புறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

### பொருமைக் காய்ச்சலா?

திரு. ராமச்சந்திரன் அவர்களுக்கு இங்கு கிடைத்த அமோக வரவேற்பு, இலங்கையிலுள்ள வகுப்புவாத அரசியல் வாதிகளின் கண்களை உறுத்தியிருக்க வேண்டும். ஒரு தமிழ்க் கலைஞனுக்கு இனமதபேதம் கடந்து இலங்கையா அத்தனை பேரும் ஒருமித்து வரவேற்பளிக்கின்றனரே என்பதனுல் எழுந்த பொருமைக் காய்ச்சலால் மேற்படி செய்திகளை வெளியிடத்துணிந்தனர் போலும்.

திரு. ராமச்சந்திரன் அவர்களுக்கு இத்தகைய மகத்தான வரவேற்பினை மக்கள் கொடுப்பதற்கு முழுமுதற் காரணம், 'உள்ளத்தால் பொய்யாதொழுகின்உலகத்தார் உள்ளத்திலெல்லாம் உளன்' என்ற வள்ளுவன் வாய்மொழியே யாகும். தமது வருவாயில் பெரும்பகுதியை வாரிவாரி வழங்கிவரும் வள்ளல் என்பதனுலாகும். திரையில் தோன்றுவதனுல் மட்டுமல்ல, வாழ்விலும் செம்மை நெறி பிறழாமல் வாழ்பவன் என்பதனுலுமே நாடும் ஏடும் அன்னுரை வாழ்த்துகின்றன. ஆகவே அரசியற் கண்ணுடியையும், வகுப்புவாத போலி மூக்குக்கண்ணாடியையும் நீக்கி 'நேர்மை' என்ற ஒரே கோணத்திலிருந்து பார்க்கும்படி 'எத்த' போன்ற ஏடுகளை உலவவிடும் எத்தர்களைக் கேட்டுக் கொள்ளுகிருேம்.

### 'ஜனதின' விடும் கரடி

'எத்த'யின் சகோதர ஏடான 'ஜனதின' கடந்த 18ம் திகதி 'சிங்கள நடிகர்கள் பகிஷ்கரிப்பர்' என்ற கருத்துப்பட ஒரு செய்தியைப் பிரசுரித்திருக்கிறது. ஆனுல் அவர்களில் ஒரு நடிகரோ நடிகையோ தவருமல் ராமச்சந்திரன் குழுவினரின்வரவேற்புகளில் கலந்துகொண்டு பெருமை தேடிக் கொண்டனர்.

எந்தளையிலுள்ள விஜயா ஸ்டுடியோவில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற வரவேற்பின் போது, பொதுமக்

(14-ம் பக்கம் பார்க்க)

---

# அன்றலர்ந்த செந்தாமரை போல அழகு முகம் வேண்டுமா?




பதிலளிப்பவர்:

**வைத்திய கலாநிதி**

**நா. கந்தையா**

செல்வி எச். ஈ. ஏ. பெனடிக்,
இளவாலை.

கே: முகத்தில் பருக்களும் பருவந்த அடையாளங்களுமுண்டு. வயது 20. எனது நண்பர்கள் கேலிசெய்கின்ருர்கள். முகம் பொழிவுடன் வர ஆலோசனை கூறுங்கள்.

ப: தினசரி வெண்சந்தனம் பூசிக்குளிக்கவும். சவற்காரம் பாவிக்க வேண்டாம். அகில், எள், கண்டங்கத்தரிவேர், வெண்சந்தனம், வெட்டிவேர், பார்லி அரிசி, வாகைப்புஷ்பம், சதகுப்பை இவற்றை சம எடை எடுத்து தண்ணீரில் அரைத்து இரவில் படுக்கைக்குப் போகும் போது பூசிக் கொண்டு காலையில் குளிர்ந்த நீரில் நீராடவும்.

இதை நீண்ட நாள் மிகச் சிரத்தையுடன் செய்துவரின் முகம் அன்றலர்ந்த செந்தாமரை போல் மலர்ந்திருக்கும்.

உணவு வகையில் பழவகைகளை நிறையச் சேர்க்கவும். கேலி செய்யும் நண்பர்களில் சிலர் பொருமைப்படவும் செய்வர்.

ஃ

வி. திருநாவுக்கரசு,
கொடிகாமம்.

கே: ஏழுவருஷகாலமாக தும்முகின்றது. ஒருநாளைக்கு நூறு முறைகள் தும்மல் வருகின்றது. தகுந்த ஆலோசனை தரவும்.

ப: உமக்கு ஏற்பட்டிருப்பது பீனிசரோகம். அதிகாலையில் நித்திரை விட்டு எழுவதைத் தவிர்க்கவும். குளிர்ந்த நீரில் குளிப்பது நன்றல்ல. கட்பலாதி பவுடரை நசியமிடலாம். தலைக்கு பீனிசதைலம் வைக்கவும்.

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: சிலசமயம் எனக்கு நல்ல பசியுண்டு. ஆனுல் சிறிது உண்டதும் வயிறு நிரம்பியது போல் உணருகின்றேன். மலபந்தமுமுண்டு.

ப: வயிற்றில் அஜீரணம் சம்பந்தமான வாயுசேர்ந்திருக்கலாம். இதை ஆங்கிலத்தில் 'விளாருலன்ஸ்' என அழைப்பர். நல்ல வைத்தியரிடம் 'ஹிங்குயாதி சூரணம்' வாங்கிச் சாப்பிடவும், பலனுண்டு.

ஃ

க. அ. அலீம்,
மருதமுனை.

கே: தினசரிகாலையிலும் மாலையிலும் வயிற்றுவலி, பசியில்லை.

ப: வயிற்றுவலி அநேக வியாதிகளுக்கு குறிகளாக இருப்பதால் எதுவெனக் [illegible] யாது. அஜீரணம் [illegible] வும் ஏற்படலாம். மலபந்தம் வராது பாதுகாக்கவும். கறிவகைகளில் பெருங்காயம், வெள்ளைப்பூண்டு சேர்க்கவும். நல்ல பலன் கிடைக்கும்.

ஃ

கு. வேலுப்பிள்ளை,
கைதடி.

கே: வயது 49. அடிக்கடி மூத்திரம் வருகின்றது. ஒரு வருட காலமாகியும் குணமில்லை. தாகமுண்டு- ஆலோசனை தரவும்.

ப: அடிக்கடி மூத்திரத்தை பரீட்சித்துக் கொள்ளல் நன்று. தேனீர், காப்பி தவிர்க்கவும். பதிலுக்கு பொன்னுவரம் பூவைக் காயவைத்து இடித்துத் தூளாக்கி காலையிலும் மாலையிலும் சுடுநீரில் இட்டு குடிக்கலாம். இதனுல் தாகம் தீரும்.

பி. கணபதிப்பிள்ளை,
சாவகச்சேரி.

கே: தலையில் ஏற்பட்ட புண்களின் காரணமாக சிதழும் இரத்தமும் வருகின்றது சொறிச்சலும் உண்டு. சிகிச்சை முறை தாருங்கள்.

ப: தலையையும், கேசத்தையும் தகுந்த முறையில் சுத்தமாக வைத்திருக்காத காரணத்தால் ஏற்படுகின்றது. கேசத்தை நன்கு கத்திரித்துக் கொள்க. [illegible]

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1965 நவம்பர் மாதம் 7-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி என் - 3411    த. பெ. 1183


## கடந்த ஏழு மாதங்கள்

தேசிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஏழு மாதங்களாகிவிட்டன. ஓராண்டு நிறைவு பெற இன்னும் ஐந்து மாதங்களே எஞ்சியுள்ளன.

தேசிய ஐக்கியத்தை உருவாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர கடந்த ஏழு மாதங்களில் நாட்டிலே வேறு துறைகளில் சுபீட்சம் ஏற்பட்டதாகக் கூறுவதற்கில்லை. நாட்டின் ஒவ்வொரு பிரச்சினையும் தோல்வி கண்ட ஆட்சியாளரின் காலத்தில் இருந்ததைப் போலவே இன்றும் இருக்கின்றன.

ஆனால் சில பிரச்சினைகளைத் தீர்க்கும் நல்ல அறிகுறிகள் தோன்றியுள்ளன. காரணம் அப்பிரச்சினைகளை சரியான முறையில் அணுகியிருப்பதுதான். இஃது ஏழுமாத காலத்தில் பெற்ற ஒரு சாதனை என்றே கூறலாம். அதேசமயத்தில் வேறு சில பிரச்சினைகள் மென்மேலும் சிக்கலாகிக் கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் மறக்கமுடியாது.

சிறுபான்மையோரின் கோரிக்கைகளை நிறைவேற்றுதல்' விலைவாசி உயர்வு, வேலையின்மை போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்தல், புதிய அரசியற் பாதையில் நாட்டின் முன்னேற்றம் ஆகிய மூன்று கோணங்களிலிருந்து தேசிய ஆட்சியின் ஏழுமாத சாதனையை ஆராயலாம்.

மூன்று கோணங்களும் ஒன்றாக இணைக்கப்பட்ட முக்கோணமே இது. சிறுபான்மையோர் பிரச்சினையின் தீர்வு பொருளாதாரப் பிரச்சினையின் தீர்வுடன் இணைந்துள்ளது. இவ்விரண்டும் புதிய அரசியற் பாதையில் அரசாங்கம் கண்டுள்ள முன்னேற்றத்துடன் இணைந்துள்ளன.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதென்பதும், வகுப்புவாதக் கண்ணோட்டத்தில் அப்பிரச்சினையை அணுகவில்லை என்பதும் உண்மையே. ஆனால் நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. சிறுபான்மையோருக்கு உரிமைகள் வழங்குவதில் தாமதம் செய்வதால் தேசிய ஆட்சிக்கு எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

மொழியுரிமை, மாவட்டசபை ஆகியவற்றை அளிப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரியணை உரையிலும் உறுதியளித்துள்ளது. எனவே தாமதம் செய்ய எக்காரணமும் கிடையாது. தீர்மானித்ததைச் செயல்படுத்துவதில் தயக்கமும் தேவையில்லை. எதிர்க்கட்சியினரின் பிரசாரம் அதற்கு ஒரு முட்டுக்கட்டையாக இருக்க முடியாது. எதிர்ப் பிரசாரங்களுக்கெல்லாம் பணிந்து கொடுப்பதானால் இந்த அரசாங்கத்தால் எதையுமே செய்ய முடியாது. மேலும், தமிழ்பேசும் இனத்தின் ஜீவாதாரமான உரிமைகளை வழங்கும் மசோதாக்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது எதிர்க்கட்சியினர் அவற்றை முற்றாக எதிர்த்து நிற்பார்களென்று கூறுவதற்கில்லை.

இந்த நிலையில் இன்னும் தாமதம் ஏன் என்று மக்கள் கடுமையான தொனியில் கேட்பதில் தவறில்லை. இவ்வருட இறுதிக்குள் உரிமைகள் வழங்குவது பற்றி அரசாங்கம் திட்டவட்டமான சில நடவடிக்கைகளை எடுக்குமென்றே அனைவரும் எதிர்பார்க்கின்றனர். தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைக்கின்றனர். இந்த ஒத்துழைப்பின் பயனை அடுத்த ஐந்து மாதகாலத்துள் (ஓராண்டு பூர்த்தியாக முன்பு) அவர்கள் அடையக் கூடியதாகத் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது பற்றி பிரதம மந்திரி விசேட கவனம் செலுத்துவாரென்றே எதிர்பார்க்கின்றோம்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைவிட அந்நடவடிக்கைகள் பற்றி பத்திரிகைகளிலும், வானொலியிலும், பொது மேடைகளிலும் செய்யப்பட்ட பிரசாரங்கள் தான் அதிகமாயிருக்கின்றன.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்க அரசாங்கம் பல்வித முயற்சிகளைச் செய்தது-- செய்து கொண்டிருக்கிறது. அவை திட்டமிட்டுச் செய்யப்படாததால் இதுவரை அவற்றால் எதுவித பயனும் ஏற்படவில்லை. விலைவாசி ஏற்றத்திற்கான காரணத்தையே அரசாங்கத்தால் இன்னும் சரிவரக் கண்டுபிடிக்க முடியவில்லை.

பொருட்களின் தட்டுப்பாடே விலை ஏற்றத்துக்குக் காரணம் என்று முதலில் கூறப்பட்டது. வெளிநாட்டு உதவி பெற்று, பொருட்களை ஏராளமாக இறக்குமதி செய்துவிட்டால் இப்பிரச்சினை முற்றாகத் தீர்ந்துவிடுமென்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. ஆனால், மொத்த வியாபாரிகளும், இறக்குமதியாளருமே விலையுயர்வுக்கும், தட்டுப்பாட்டுக்கும் காரணம் என்று இன்று கூறப்படுகிறது. நாளை என்ன காரணம் கூறப்படுமோ தெரியாது.

தேசிய அரசாங்கத்தின் மீது மக்கள் அமோகமான நம்பிக்கை வைத்துள்ளனர். எனவே நம்பிய மக்களை வாழ்விக்காது விலைகளைக் குறைக்கவும், சாமான் தட்டுப்பாட்டை நீக்கவும் அரசாங்கம் மிகவும் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். முன்னாள் அரசாங்கத்தின் குறைகளை மட்டும் கூறிக்கொண்டிருந்தால் எந்தப் பிரச்சினையும் தீராது.

ஆனால் புதிய அரசியற் பாதையில் நாடு எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பதைப் பொறுத்தே சிறுபான்மையோர் பிரச்சினையையும், பொருளாதாரப் பிரச்சினையையும் தீர்க்க முடியும்.

# அரசாங்க ஊழியருக்கு அரசியல் உரிமை அவசியமே

## ஆனால், நிர்வாக இயந்திரத்தில் இயக்கம் தேவை

இந்நாட்டிலுள்ள சகல குடிமக்களும் அனுபவிப்பதைப் போன்று அரசாங்க ஊழியருக்கு அரசியல் உரிமைகள் வழங்குவதற்கான பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. புதன் கிழமை பாராளுமன்றத்தில் தனிப்பட்ட பிரதிநிதிகள் பிரேரணைகளின்போது கொழும்பு மத்திய தொகுதி உறுப்பினர் கரு. பீட்டர் கெனமன் அவர்களால் இப்பிரேரணை கொண்டுவரப்பட்டது.

இப்பிரேரணைக்கு எவரும் எதிர்ப்புத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சியினரும் ஆளும் கட்சியினரும் இப்பிரேரணைக்கு ஒப்புதலளித்துள்ளனர். ஆகவே இக்கருத்தை நாட்டுமக்கள் அனைவருமே ஒப்புக்கொள்கின்றனர் என்பது வெளிப்படை.

அரசாங்க ஊழியர்கள் இதுவரை காலமும் அரசியலில் பிரவேசிக்காமலிருக்கவில்லை. மறைமுகமாக எல்லோரும் அரசியலில் ஈடுபட்டே வந்துள்ளனர். பகிரங்கமாக அரசியலில் ஈடுபடுவது சட்ட விரோதமாக இருந்தமையினால், அந்தரங்க அரசியல்வாதிகளாகவே அரசாங்க ஊழியர்கள் இருந்து வந்தனர். இப்பொழுது அவர்கள் தங்கள் அரசியல் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்த வசதி கிடைக்கிறது.

காலம் தாழ்த்தியாவது உரிமைகள் கிடைக்கிறதே. அரசாங்க ஊழியரையும், அவர்களுக்கு உரிமை வழங்க வேண்டுமென்று இதுநாள் வரை பாடுபட்ட அனைவரையும் பாராட்டுகிறோம்.

பாராட்டுக் கூறும் இவ்வேளையில், அரசியல் நிர்வாகத் துறையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே வரும் ஊழல்களையும்பற்றிக் குறிப்பிட விரும்புகிறோம்.

வெள்ளையர்கள் இந்நாட்டை ஆண்ட காலத்திலிருந்து அரசாங்கத் திணைக்களங்கள் யாவும் ஒரு வகையான மந்த நிலையிலேயே இயங்கிவந்துள்ளன. மிகச் சின்னஞ்சிறு வேலையை முடிப்பதற்கும் ஏகப்பட்ட தாமதம் அனாவசியமாக ஏற்பட்டுவந்திருக்கிறது. அதே பழக்கம் வெள்ளையர் இந்நாட்டை விட்டகன்றபின்னரும் தொடர்ந்து வந்திருக்கிறது.

பொதுத்துறையுள் புகுந்துள்ள ஊழல்களுக்கெல்லாம் தலைமை தாங்குவதாக தாமதமே இருந்துவருகிறது. இத்தாமதத்தை நீக்குவதற்கும், நிர்வாக இயந்திரத்தை சீராக்குவதற்கும் இதுவரை எதுவுமே செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. போதுமான இலிகிதர்கள் ஒவ்வொரு துறையிலும் இருந்தும் செம்மையாகவும், சீராகவும், காலதாமதமின்றியும் வேலைகள் நடைபெறுவதில்லை.

வீண் காலதாமதத்தினால் விரையமாகும் பொழுதினால் ஏற்படும் நட்டங்களோ மிகப்பெரிது. பல திணைக்களங்களில் பணிபுரியும் ஊழியர்கள் வீண்பொழுது போக்குவதைக் காண்கிறோம். பெறும் சம்பளத்துக்கேற்ற

சுதந்திரன் அரசியல் நிருபர்

படி கடமை புரிபவர்கள் வெகு சொற்பமே. இவை போதாதென்று வேலைநேரம் தவிர்ந்த வேளைகளிலும் வேலை செய்வதாகப் பாசாங்கு காட்டிக்கொண்டு பொழுதை வீணடிக்கும் பலரையும் காண்கிறோம். இத்தகைய சூழ்நிலையில் பொது மக்களுக்கு மிகப்பெரிய அசௌகரியங்கள் ஏற்படுவதுடன், ஆட்சிச் சக்கரமும் அசைய மறுக்கிறது.

### தடுமாறும் தொழிற் சங்கம்

தொழிற் சங்கங்களையே நமது தொழிலாளர்களும் ஊழியர்களும் துஷ்பிரயோகம் செய்துவருகின்றனர். எதற்குப் போராடுவது, எதற்கு ஒத்துழைப்பு நல்குவது என்பதனையே நன்கு புரிந்து கொள்ள முடியாமல், தொட்டதற்கெல்லாம் வேலை நிறுத்தங்களைச் செய்து பலருக்கும் பல தொல்லைகளைத் தேடித் தருகின்றனர்.

இந்த நிலைமையில் அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கினால் நாட்டுக்கு நன்மை ஏற்பட முடியுமா?

நாட்டை பலபடிகளிலும் திருத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் வேரூன்றி, அதற்கேற்ற கடுமையான உழைப்பும் இணைந்தாலன்றி சுபீட்சம் காண முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரை நாட்டைச் சீராக்க நாம் கைக்கொள்ளும் பணி-உழைப்பு போதவே போதாது. இப்படியிருக்கும் போது அரசியல் சுதந்திரம் அரசாங்க ஊழியருக்குக் கிடைத்துவிட்டால் யாது பயன்?

இப்படிக் கூறுவதனால் அரசியல்உரிமை வழங்குவதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கிறோம் என்று எவரும் கருத்துக் கொள்ள வேண்டியதில்லை. நிர்வாக இயந்திரம் சீராக இயங்குவதற்கேற்ற புதிய பல மாற்றங்களைச் செய்து கொண்டு, ஊழியர்களுக்கு உரிமை வழங்குவது நன்றாயிருக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

### வேறு பல துறை ஊழியர்கள்

அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்க முற்படும்போது வேறு பல துறைகளிலும் தொழிலாளிகளும், வர்த்தக ஊழியர்களும் படும் இன்னல்களைக் களையவும் அரசாங்கம் ஆவன செய்ய முன் வரவேண்டும்.

அரசாங்க ஊழியர்கள் அனுபவித்துவரும் பலதரப்பட்ட சலுகைகள் ஏனைய பொதுத்துறை ஊழியர்களுக்கு இல்லை. அரசாங்கத்திலும் வர்த்தகத் துறையிலும் பணிபுரியும் ஒரே தராதரமுடையவர்களுக்கு ஒரே தன்மையான கடமை செய்தபோதிலும், அரசாங்க ஊழியர்களுக்கு இருக்கும் பல சலுகைகளை அனுபவிக்க வழியில்லை.

அரசாங்க ஊழியர்களாகச் சேர்வதற்கு எல்லோருக்குமே வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதிர்ஷ்டவசமாக கிடைத்து விட்டால், அவர்களுக்கு பல தரப்பட்ட நன்மைகள் காத்துக் கிடக்கின்றன. ஆனால் இவ்வாய்ப்பைப் பெறமுடியாத துரதிர்ஷ்டசாலிகள் வர்த்தக நிறுவனங்களுள் புகுந்து பெரும் பாடுபடுகின்றனர்.

அரசாங்க ஊழியர்களுக்கும், அரசாங்கஊழியரல்லாதாருக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை எடையிட்டுப் பார்த்து ஏனையோருக்கு சிற்சில நன்மைகள் கிடைக்கத்தக்க வகையில் சில ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் முன் வரவேண்டும்.

### ஆதர்ம பாதையில் பத்திரிகைகள்

ஆதாரமற்ற கட்டுக்கதைகளைக்கூறி நாட்டிலே கோர்தளிப்பை ஏற்படுத்தும் முயற்சியில் சில பத்திரிகைகள் ஈடுபட்டுள்ளன. தட்டிக்கேட்பாரில்லாத தன்மையினால் இப்பத்திரிகைகள் தாம் நினைத்தபடி செய்திகளைத் திரித்தும் மழுப்பியும் வெளியிட்டு வருகின்றன.

குறிப்பாக இப்பத்திரிகைகள் பெரும்பான்மை இன

(9-ம் பக்கம் பார்க்க)

சர்வாதிகாரப் போக்கைத் தடுத்து நிறுத்தி ஜனநாயகப் பாதையிலே நாட்டைத் திருப்பி விட்டது தேசிய அரசாங்கம். அந்தப் பாதையிலே மக்கள் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளனர் என்பது ஒரு கேள்வி.

முன்னாள் அரசாங்கம் ஜனநாயக—விரோத சர்வாதிகார நடவடிக்கைகள் பல எடுத்திருந்தது. அந்நடவடிக்கைகளில் பெரும் பாலானவைகளை அப்படியே அமுல் நடத்த வேண்டிய ஒரு கட்டாய நிலையில் தேசிய அரசாங்கம் இருக்கிறது. அவற்றை ஜனநாயக ரீதியாக மாற்றி அமைக்க முடியவில்லை. பாட்சாலைத் தேசிய மயம் உட்பட பல தேசிய மய நடவடிக்கைகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அத்துடன் அரசாங்க அமைப்பின் ஒவ்வொரு அம்சங்களிலும் சர்வாதிகாரப் போக்கை வளர்த்து வந்தது முன்னாள் அரசாங்கம். அதனையும் முற்றாக மாற்றி அமைக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

வேறு வார்த்தைகளில் கூறின், முன்னாள் அரசாங்கத்தின் சர்வாதிகார நடவடிக்கைகளையும், சர்வாதிகாரப்போக்கையும் அடித்து நொறுக்கிவிட்டு பூரண ஜனநாயகத்தைத் தழுவி நிற்கும் நிலை தேசிய அரசாங்கத்துக்கு இன்னும் ஏற்படவில்லை. அதனைப் படிப்படியாகவே செய்ய முடியும் என்பது உண்மையே. ஆனால் அதனைச் செய்யும் வரை மக்களின் பிரச்சினைகளை முற்றாகத் தீர்த்துவிட முடியாது.

சர்வாதிகாரத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றினால் மட்டும் போதாது. சர்வாதிகார நெருக்குதலுக்கு அரசாங்கம் விட்டுக்கொடுக்காமல் பூரண ஜனநாயகத்தை நோக்கி துரிதமாகவும் முன்னேறவும் வேண்டும். ... பிரச்சினைகளைத் தீர்க்க அது ஒன்று தான் வழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைக்குரிய தகுதியைப் பெற்ருர்

## நடராசாவின் நியமனத்திற்கு வித்தியானந்தன் புகழ்மாலை

'உழைப்புக்கும் தியாகத்திற்கும் உரிய பரிசு என்றே கிடைக்கும் என்பதற்குநல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது திரு. சு. நடராசா அவர்கள் மூதவை உறுப்பினராக நியமனம் பெற்ற சம்பவம். திரு. நடராசா அவர்கள் சுயநல நோக்க மெதுவுமின்றி கடந்த இருபது ஆண்டுகளாக தமிழினத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்ததுடன், பலதடவைகள் கல்லடிக்கும் பொல்லடிக்கும் இலக்காகியுள்ளார். இன்று எமது இனத்தின் வரலாற்றில் ஒரு சுமுகமான சூழ்நிலை தோன்றியதும் அதற்குக் காரண கர்த்தாக்களில் ஒருவராக இருந்த நடராசாவுக்கும் அவரின் சேவையை கௌரவிக்கும் முறையிலான ஒரு தகுதி கிடைத்துள்ளது' என்று இலங்கைப் பல்கலைக் கழக தமிழ் விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் கூறினர்.

கொழும்பு கிறீன்லன்ட்சு ஓட்டலில் திரு. சு. நடராசா அவர்கள் மூதவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டும் முகமாக கொழும்பு வாழ் காங்கேசன்துறைத் தொகுதியைச் சேர்ந்தவர்களால் நடாத்தப்பட்ட இரவு விருந்து வைபவத்தில் பேசும்பொழுதே கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் அவ்வாறு கூறினர்.

இவ்வைபவத்தில் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், திருவாளர்கள் கா. பொ. இரத்தினம், க. துரைரத்தினம், சு. ம. மாணிக்கராசா, வி. தர்மலிங்கம், இ. மு. வி. நாகநாதன், எம். மாணிக்கம், அமைச்சர் மு. திருச்செல்வம், சி. அரங்கநாதன் கியூ. சி., கோ. ஆழ்வாப்பிள்ளை, ஆர். என. சிவப்பிரகாசம் உட்பட பெருந்தொகையானவர்கள் கலந்து கொண்டனர்.

விருந்துபசாரத்தைத் தொடர்ந்து கலாநிதி சு. வித்தியானந்தன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

'தமிழ் பேசுமினம் பூரண உரிமை பெற்று இந்நாட்டில் சமத்துவத்துடன் வாழும் வரை திரு. நடராசா போன்றவர்களின் சேவை நமக்குத் தேவையாகவே இருக்கிறது. மூதவையில் எமது உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்க திரு. நடராசா போன்றவர்களாலேயே முடியும். எனவே அவருக்கு இப்பதவி கொடுக்கப்பட்டது நியாயமானது என்பதை எவரும் ஒப்புவார்கள். அவர் பல்லாண்டு வாழ்ந்து எமது இனத்திற்கு உழைக்க வேண்டும்.

கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

'சொல்வதைச் செய்வதில் வல்லவர் திரு. நடராசா. கட்சியிட்ட பணிகளைக் குறைவின்றி நிறைவேற்றுவதே அவரின் முதற் கடமையாக உள்ளது. தனக்குச் சரிவேலைப்பட்டதை அஞ்சாது எடுத்துரைக்கும் நேரிய தன்மையும் திரு. நடராசாவிடம் இயற்கையாக உண்டு. நமது கட்சியின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றியபணிகளை எவரும் எளிதில் மறந்துவிடவோ அல்லது மறைத்து விடவோ முடியாது.

'அவரின் சேவைக்குப் பரிசாக இப்பதவி கொடுக்கப்பட்டது என்ருல், அவரின் சேவையைக் குறைத்து எடை போட்டதாகவே கருத முடியும். கட்சியின் பணியிலே பகிர்ந்து கொள்ள தகுதியான ஒருவரை நியமித்திருக்கிருேம். அவர்கள் இப்பதவிக்கு நியமனம் பெற்றது எம்மவர்க் கெல்லாம் இரட்டிப்பு மகிழ்ச்சியாகும்.

### நன்றி

விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் திரு. சு. நடராசா அவர்கள் கூறியதாவது:

'எனக்கு இன்று கிடைத்துள்ள இப்பதவியைத் துறக்குமாறு எனது கட்சி என்று பணித்தாலும் அதைச் செய்யக் காத்திருக்கிறேன். என்றும் நான் பதவிகளை பெரிதாகக் கருதியதில்லை. மக்கள் மத்தியில் பேசித் திரிந்த எனக்கு இன்று அரசியல் மட்டத்தில் கட்சி ஒரு மேடை அமைத்துத் தந்துள்ளது என்றே நான் இதைக் கருதுகிறேன். நான் பல தியாகங்களைச் செய்துள்ளதாகக் கூறினர்கள். அப்படிக் "கூறுது கடமையைச் செய்தேன்" என்று கூறினல் அது பொருந்துவதாக இருக்கலாம்.

'கடமைக்கு இப்படியான கௌரவங்கள் உண்டு என்ருல், மக்கள் மத்தியில் கடமையுணர்ச்சி வளரும் என்று நம்புகிறேன்.

'இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களுக்காக உழைக்க முற்பட்ட இயக்கங்களுடன் எனக்கு அன்று முதல் தொடர்பு உண்டு. அத்தகைய இயக்கங்கள் தங்கள் கடமையை மறந்தபொழுது நானும் அவற்றைத் துறந்தேன். தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் எனக்கும் அதில் உரிமையிருந்து வந்தது.

'இன்று இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் தனிப்பெரும் இயக்கமாகத் திகழ்வது தமிழரசுக் கட்சியொன்றேதான். இதை எதிரிகளும் ஏற்றுள்ளார்கள்.

'நமது ஒத்துழைப்பில்லாமல் இந்த நாடு முன்னேற முடியாது. இந்த உண்மையை எமது கடந்தகால நடவடிக்கைகள் தெளிவுபடுத்தியுள்ளன. இன்றைய பிரதமர் நிறைந்த அரசியல் ஞானம் உள்ளவர். எமது திறமையையும், வலிமையையும் அவர் அறிந்துள்ளார்.'

## கெனமனுக்கு எதிராக 'எத்த' பாய்ச்சல்

இலங்கைக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குள் முன்னெப்பொழுதையும் விட இப்பொழுது கொழும்பு மத்திய தொகுதி மூன்ருவது பிரதிநிதி திரு. பீட்டர் கெனமனின் செல்வாக்குக் குறைந்து வருவதாக நம்பப்படுகிறது அண்மைக் காலத்தில் திரு. கெனமன் விடுத்த வேண்டுகோள் எதையும் கட்சி ஊழியர்களோ அல்லது கட்சி உத்தியோகஸ்தர்களோ ஏற்க மறுத்து வருவதாகவும் நம்பகமான வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மாஸ்கோ சார்புடைய இலங்கைக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குள் அதன் முன்னணித் தலைவராக விளங்கிய திரு. பீட்டர் கெனமன் இன்று இலையுதிர்க்க மரம் போன்று தனி மனிதனைக் காட்சியளிக்கிறாராம். அவரின் பேச்சுக்கோ அல்லது கட்டளைக்கோ எவரும் மதிப்புக் கொடுக்க மறுத்து வருகிருர்களாம்.

சில காலங்களுக்கு முன்னர் திரு. கெனமன் 'வகுப்புவாதப் போக்கை சற்று நிறுத்துங்கள்' என்று எதிர்க் கட்சிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். திரு. கெனமனின் இந்த வேண்டுகோளின் பின்னர் சுதந்திரக் கட்சியினரிலும் பார்க்க தீவிர வகுப்பு வாதிகளாக கம்யூனிஸ்டுகள் காட்சி கொடுக்கத் தொடங்கியுள்ளார்களாம். இந்நிலை கண்டு திரு. கெனமன் கொதிப்படைந்த போதிலும், எதையும் செய்ய முடியாதவராக இருக்கிருர் என்று பேசப்படுகிறது.

திரு. கெனமன் வகுப்புவாதம் வேண்டாம் என்று கூறிய பின்னர் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதரவுடன் வெளியாகும் 'எத்த' என்ற அதி தீவிர வகுப்புவாத சிங்களத் தினசரி பறங்கியர் சமூகத்தையும் கூடத் தாக்கத் தொடங்கியுள்ளதாம். இதற்கு திரு. கெனமன் ஒரு [illegible] சேர்ந்தவர் என்பதே காரணமாகும்.

எம். ஜி. ஆர்—சரோஜாதேவி

இலங்கை வந்து சென்றதன் ஞாபகார்த்தமாக

எங்க வீட்டுப் பிள்ளை

திரைப்படப் போட்டி

அடுத்த வாரம் ஆரம்பமாகிறது.

## எழுது வினைஞர்களுக்கு வகுப்பு

அரசாங்க எழுதுவினைஞர்களின் தரம் உயர்வுப் பரீட்சையையொட்டி அதற்கான வகுப்புகளை நடாத்த அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் முடிவு செய்திருப்பதாக சங்கச் செயலாளர் திரு. வே. தங்கவேலு அறிவித்துள்ளார். இவ்வகுப்புகளை நடாத்தும் பொறுப்பை கலாநிதி க. கணேசலிங்கம் அவர்களும், அஞ்சற் திணைக்களக் கணக்கியலாளர் திரு. சரவணமுத்து அவர்களும் ஏற்றுள்ளார்கள். கணக்கியல் வைப்புமுறை, நடைமுறை விதிகள் ஆகியவற்றில் வகுப்புகள் நடாத்தப்படும்.

இவ்வகுப்புகளில் சேர்ந்து பயிற்சிபெற விரும்பும் எழுதுவினைஞர்கள் முன்னதாகவே இதற்கான கட்டணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அங்ஙனம் பற்றுச்சீட்டுப் பெற்றவர்களையே விரிவுரையாளர்கள் வகுப்பில் அனுமதிப்பார்கள் என்றும் தெரிகிறது. இவ்வகுப்புகள் பற்றிய விபரங்களை அறிய விரும்புபவர்கள் எ. வி. ச. பணிமனையுடன் (தொலைபேசி: 83353) தொடர்பு கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

நிர்வாக விதிச் சட்டங்கள், பொதுசேவை ஆணைக்குழு விதிகள் தமிழில் மொழிபெயர்க்கும் வேலை ஒருவார காலத்தில் முடிந்துவிடலாம் என்றும், இந்த மாத முடிவிற்குள் அவையனைத்தும் நூல் உருவில் வெளிவந்துவிடுமென்றும் திறைசேரி மேலதிகச் செயலாளர் எ. வி. ச. செயலாளர் திரு. தங்கவேலு அவர்களிடம் கூறியுள்ளாராம். இச் சட்டவிதிகள் தமிழ் மொழிமூலம் தகுதி உயர்வுப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்குத் தேவையானவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அரசாங்க...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மான சிங்கள மக்களை சிறுபான்மையினர்பால் ஏவிவிட்டு, வேடிக்கை பார்க்க எத்தனிக்கின்றன.

வீண்வதந்திகளைப் பரவவிடுவதனல் ஏற்படும் விளைவுகளை இந்நாடு பல தடவைகளில் கண்டிருக்கிறது. பொய்யான தகவல்களைப் பரப்பியே இருஇனக் கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன. இக்கலவரங்களினல் இந்நாட்டு மக்கள் அனுபவித்த வேதனைகளின் சுவடு இன்னும் மாறவில்லை. மேலும், மேலும் இத்தகைய கலவரங்களை ஏற்படுத்தினல் இந்நாடு சுடுகாடாகிப் போவது திண்ணம்.

பொய்யையும், புழுகையும் புனைந்துரையையும், ஆதாரமற்ற அபாண்டங்களையும் செய்திகளாக்கிப் பிரசுரித்து பத்திரிகா தர்மத்தைக்குழி தோண்டிப் புதைக்க முயல்பவர்களிடம் அரசாங்கம் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இத்தகைய விஷமத்தனம் புரியும் பத்திரிகைகள் மீதுகடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிருேம்.

## பட்டிருப்பு வழக்கு தள்ளுபடி

பட்டிருப்புப் பிரதிநிதியான திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்களுக்கு எதிராக திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கம் தாக்கல் செய்திருந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடியாக்கப்பட்டுவிட்டது.

கடைசி நேரத்தில், இவ்வழக்கில், தாம் கூறும் குற்றச்சாட்டுகளை நிரூபிக்கத் தம்மிடம் போதிய ஆதாரங்களில்லாமையினல் வழக்கை வாபஸ் பெற திரு. எதிர்மன்னசிங்கம் கோரினர். நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா செலவு தொகையுடன் வழக்கைத் தள்ளுபடிசெய்தார்.




திரைக்கலை எம். ஜி. ஆர். சிறப்பு மலர். கே. ஆர். ராமசாமி, பி எஸ். இளங்கோ, ப. நீலகண்டன், என். எஸ். கே. மதுரம், கே. ஏ. தங்கவேலு, ஏ. எஸ். மணவைத்தம்பி ஆகியோர் எழுதியது. மூவர்ண முகப்பு. 60 சத முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

திரைக்கலை, 26, தூய அந்தோனியார் மாவத்தை, கொழும்பு-13.

இலங்கை எங்கும் ஏஜண்டுகள் தேவை.

## இலங்கை தமிழரசுக் கட்சி அறிவித்தல்

'தமிழரசுக் கட்சியின் அமைப்பு விதிகள் 9 (ஊ) பிரிவின்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த மாநாடு முதல் கட்சித் தலைவர் பதவிக்கு டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களுடைய பெயர் மட்டுமே பிரேரிக்கப்பட்டுள்ள காரணத்தாலும் வேறு நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்குரிய காலம் கடந்துவிட்டபடியாலும் டாக்டர் நாகநாதன் அவர்களே அடுத்த மாநாடு முதல் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அ. அமிர்தலிங்கம்,
பொதுச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயிர்ச் சாதம் விட்டுச் சாப்பிட்ட நீல நிறத் தட்டைப் போல வானம் காட்சியளித்தது. மப்பும் மந்தாரமுமாக வானத்தில் கருமை அப்பிப் போயிருந்தது. கொட்டவா வேண்டாமா என்று கொடி காட்டிக்கொண்டிருந்தது மழை மேகம். நல்ல வேளையாக இன்னும் கொட்டவில்லை. ஆதலால் என் புனிதக் கடமையை நான் செய்யக் கூடியதாகவிருந்தது. ஒ...ஒ...புனிதமான கடமையென்று சொன்னேனே? மனத் தூய்மையுடன் ஆற்ற வேண்டிய மங்களகரமான கடமைதான். அதுவும் மாதா கோயில் சுவாமியார் இட்ட கடமையென்றால் கஷ்ட நட்டங்களைப் பாராது, தன்னைத் தான் உருகிக் கொண்டு தன்னைச் சுற்றியிருளில் இருப்பவர்களுக்கு நல்லொளியை நல்கும் மெழுகுதிரியை ஒத்தவன் செய்யக் கூடிய பணியாகத்தானேயிருக்க வேண்டும்.

எட்டியாந்தோட்டையில் இருக்கும் அர்ச். கன்னி மரியாளின் கோயிற் பங்கைச் சேர்ந்த கத்தோலிக்கர் சிலர் ஒன்று சேர்ந்து தங்களுக்குள்ளேயே ஒரு சங்கம் அமைத்துக் கொண்டனர். யேசு பிரான் போதித்த கட்டளைகளை நிறைவேற்றுவதே அதன் கடமை. அதிலும் பத்துக் கற்பனைகளில் கடையேழு கற்பனைகளையும் எழிலாக தன்னுள் அடக்கிக்கொள்ளக்கூடிய கற்பனையாகிய 'தன்னைத்தான் நேசிக்குமாப் போல தன் பிறர்த்தியானையும் நேசிக்க வேண்டும்'' என்ற உன்னதமான கட்டளையைத் தன் இலட்சியமாகக் கொண்டு அமைக்கப்பட்ட சங்கம். வழக்கத்திலேயே...'சமுகப் பணியே சர்வேசுரனின் பணியென்ற' எண்ணக் கருத்துக் கொண்டிருந்த நானும் அந்தச் சங்கத்தில் சேர்ந்ததில் ஒருவித ஆச்சரியமுமில்லையே.

வாரமொருமுறை கூட்டம் நடக்கும். ஜெபத்துடன் தொடங்கும். பின் அந்தப் பகுதியில் அல்லலுறும் மக்களைப் பற்றி ஆராயப்படும். அதன் பின் அவர்களின் அவல நிலையைப் போக்க என்ன செய்யலாம் என்று எண்ணிப் பார்க்கப்படும். வழிவகைகள் வகுக்கப்படும்... பகுத்தறிவுடன் ஆராயப்பட்டாலும் கூட ஆன்மீக உணர்ச்சிகளுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படும். ஏன்...பகுத்தறிவிற்குப் புறம்பான எதையுமே நாம் வேண்டாம் என்று தள்ளிவிட முடியுமா என்ன? அறிவால் மட்டும் நம் வாழ்க்கை நிறைவு பெற்றுநின்றுவிடுவதில்லைத்தானே? அதியற்புதமான வாழ்க்கைச் சங்கீதத்தில் அன்பும் அழகும் தானே சுருதியும் லயமுமாகக் கனன்று நம் கருத்தைக் கிண்டி, உள்ளத்தை உறைக்கச் செய்கின்றன! இந்த அன்பாகிய சுருதியையும், அழகாகியலயத்தையும் அறிவால் அடகு வைத்துவிட நம்மால் முடியுமா என்ன? பகுத்தறிவின் நிழலிலேயே நாம் எப்பொழுதும் பதுங்கி வாழ முடியுமா என்ன! மரநிழல் பகலில் தங்கியிளைப்பாற ஏற்றதுதான். ஆனல் அதற்காக இரவிலும் தங்கினல்...! ஆகையால் அந்தப் பகுத்தறிவுக்கு மேலான உள்ளுணர்ச்சி, அன்புணர்ச்சி, அழகுணர்ச்சியுடன் ஒன்றித்துத்தான் வேலைகள் செய்யப்படும்...ஏனெனில் அவ்வுணர்ச்சிகளுடன் தானே உண்மை ஒட்டுறவாடி ஒன்று கலந்திருக்கிறது. இவ்வாறு நியமிக்கப்பட்ட வேலையை செவ்வனே ஆற்றத் தான் நான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன்.

தோகை தரையில் புரண்டு விளையாட, அதன் பளுவைச் சுமக்க முடியாமல் பவ்வியமாய் சுமந்து கொண்டு அசைந்து அசைந்து மெல்ல வரும் அழகிய மயிலைப் போல, 'அப்பே... அப்பே'...என்று தன் இதழ்நீர் தரையில் இழிந்தோட, பட்டுக் கைகளையும் பதுமையான முட்டுக்களையும் தரையில் இழுத்துக் கொண்டு என்னை நாடித் தவழ்ந்து வந்த மகள் மேரியிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன். 'அப்பே... அப்பே...' என்று அவள் கத்திக்கொண்டிருந்த ஒலி என் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டேயிருந்தன. வீதியில் இறங்கி நடந்தேன். அந்த வேளையும்...

புதுப் புனலில் நீராடி புத்துணர்ச்சியுடன் மலர்ச் சோலையில் முக்குளித்துச் செல்பவன் நிலையிலிருந்த என்னை...குழலையும் யாழையும் குழைத்து வந்த அந்த வீணுநாதம் பாசக் கயிருக மாறி கால்களைச் சுற்றி, ஒரு கணம் தடுமாறச்செய்தது. சுண்டியிழுத்தது. ஆனல் இறுதியில் கடமையுணர்ச்சி கொடி நாட்டியது. மந்தமான வானமும், மந்தகாச ஒலியும் என் மனதை மாற்றிவிடவில்லை.

போகும்போதே சுவாமியார் சொன்னதைச் சற்று நினைவு படுத்திக் கொண்டேன். 'எப்படியாவது அந்தக் கிழவனை அவன் அனுபவிக்கும் துன்பங்களிலிருந்து காப்பாற்ற வேண்டும். அதற்கு ஒரு வழியும் உள்ளது. அதாவது கண்டியிலிருக்கும் முதியோர் விடுதிக்கு அனுப்ப வழி செய்ய வேண்டும்.' அது தான் எனக்குத்தரப்பட்ட வேலை...

அந்தக் குடிசை. மிகச் சிறிய குடிசை. பார்த்தவுடனேயே விளங்கியது அந்தக் குடிசையில் எப்படிப்பட்ட ஜீவன்கள் வாழ முடியுமென்று. தரித்திரத்தின் எல்லைக் கோட்டிலிருந்து கொண்டு அவலமான ஒலியைக் கிளப்பிக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள்தான் அங்கேவாழ முடியும். முன் கட்டிலிலேயே முடைநாற்றமென்றல்... தலையில் மோடுதட்டிவிடும் என்பதற்காகக் கொஞ்சம் தலையைத் தாழ்த்திக் கொண்டு உள் நுழைந்தேன். முன்கட்டில்...



கயிற்றுக் கட்டில் ஒன்றிருந்தது. அதில் அக்கட்டிலோடு ஒட்டிவிட்டுப் போயிருந்த ஒரு கட்டை கிடந்தது. 'ஜீவன்' என்று சொல்ல முடியுமோ என்னவோ? ஆம். ஜீவன்இருக்கிறதோ என்னவோ? ஒட்டி உலர்ந்த உடல். எலும்பும் தோலும் தான் பாக்கி. நான் கட்டிலருகே சென்றேன். அந்நேரம் உள்ளறையிலிருந்து யாரோ வரும் காலடி சத்தம் கேட்டது. சுமார் முப்பது வயது மதிக்கக் கூடிய ஒரு பெண். என்னைக் கண்டவுடன் புலியைக் கண்ட மான்போல் மிரண்டாள். ஏன்...கிராமத்து மக்களே அப்படித்தானே!

'நான் இந்தக் கிழவனுருடன் கொஞ்சம் பேசிவிட்டுப் போகத்தான் வந்தேன்' என்றேன் நான்.

'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்.' அவள் விடுத்த கேள்வி.

சுவாமியார்தான் என்னை அனுப்பினர்.'

'ஒ...ஒ...அப்படியா... ஏன்...உட்காருங்களேன்' என்று சொல்லிக் கொண்டே அருகில் கிடந்த ஒரு சிறு வாங்கை எடுத்துப் போட்டாள். நானும் அதனை கட்டிலுக்குப் பக்கத்தில் இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தேன். அவளே சொன்னள் இப்படி...

'ஐயா, இவர் என்னுடைய அப்பாதான். இப்போதைக்கு நானும் இவரும் என் குழந்தையும் தான் வீட்டில் வசிக்கிறோம். என்னுடைய அவரும் செத்துப்போய் ஒரு வருடம்கூடயில்லை. அன்றைக்குச்சாப்பிடுவதற்குக் கூட......' என்று இழுக்க அவளின் குரல் கம்மியது... தொண்டையை அடைத்தது போலும். நானும் பேச்சை மாற்ற நினைத்தேன்.

'கொஞ்சத் தண்ணீர் குடிக்கத் தரமுடியுமா' என்றேன். அவள் என்னை ஏன் அப்படிப்பார்த்தாள். வெளியில் மழை 'சோ' வென்று பெய்து கொண்டிருக்கும் இந் நேரத்தில் தண்ணீர் கேட்டது அவளுக்குப் பைத்தியக்காரத்தனமாகப் பட்டதோ என்னவோ. என் பேச்சரவம் கேட்டு அந்தக் கிழவரும் எழும்பி விட்டார். கட்டிலில் உட்கார்ந்து கொண்டார். கொஞ்சம் திடகாத்திரமாகத்தான் இருக்கிறார் போலும். பழங்காலத்து கட்டையல்லவா?

வந்த விடயத்தை நானும் கெஞ்சம் கொஞ்சமாக அவிழ்த்தேன். முழு விபரத்தையும் நான் சொல்லிக் கொண்டு போகும்போது கண்களில் அமலமானநித்திலவானில் அன்பு முகில்கள் கூடுவது போல முட்டிமோதும் கண்ணீர்த் துளிகள் முன்னுக்கு வந்து நின்றன. வறுமையின் கொடுமைப் பிடியால் வந்த நீர் என்று எண்ணிக் கொண்டேன் நான். இரண்டு மனங்களில் உணர்வு என்னும் முள்ளால் குத்தி, வேதனை என்னும் குருதி பாயச் செய்து விட்டேனே நான். என் மனம் துணுக்குற்றது. ஆனலும், மாற்று மருந்தில்லையே. முள்ளின் முனை உள்ளிருக்கும்போது முள்ளால் எடுக்க வேண்டியுள்ளதே. என்ன செய்வது?

கிழவரும் எழுந்தார். ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தவராகக் காணப்பட்டார்.

'ஐயா நீங்கள் சொல்வதை யெல்லாம் ஏற்றுக்கொள்கிறேன். ஆம். கடவுள் எனக்கு நல்ல வழியைக் காட்டாமல் போக மாட்டார், என்று சொல்லிக் கொண்டே உள்ளறைக்கு நுழையப் போகும் அந்நேரம்...

சந்திரிகையைப் பிழிந்தெடுத்தாற் போன்ற தின் குரல் ஒன்று 'பாட்சா... பாட்சா' என்று குதலை மொழியில் மிழற்றக் கேட்டது. சிற்றெறும்பொன்று சிங்காரத் தேர்போல, மலர் வாயிலிருந்து தேன் என்னும் எச்சில் சிந்த தவழ்ந்து வந்தது தென்றல் போல. 'பட்சா ...பாட்சா' என்று மிழற்றிக்கொண்டே அந்த குழந்தை தன் தாத்தாவை நாடி வந்தது. அக் குழந்தையைக் கண்ட அந்தக் கிழவர் நிலை குத்திட்டார். சிலையானர். பாதி திறந்த பழுத்த விழிச் சுடரால் அந்தப் பாலகனைப் பாசத்துடன் பார்த்தார். அந்தக் குழந்தையும் ஆனந்தம் கரைபுரளும் மழலையில் 'பாட்சா ...பாட்சா' என்றது. அவர் மனதில் பிசிர்விட்ட எண்ணங்கள் முறுக்கேறி ஒன்ருக இணைந்து பாசத்தின்பிடியில் திக்கித்திணறி திண்டாடினர். ஆதங்கத்துடன் அந்தக் கொடியை அள்ளியெடுத்தார். அன்போடிணைந்த ஆர்வத்துடன் தன் மார்போடு

(14-ம் பக்கம் பார்க்க)

## 'கொழும்புப் பெண்'

பிரபல நகைச்சுவை எழுத்தாளர் திரு. பொ. சண்முகநாதனின் 'கொழும்புப் பெண்' என்ற நகைச்சுவைத் தொகுதி ஒன்று 7-11-65 அன்று வெளியிடப்படும். இவ் வெளியீட்டு விழாவிற்கு திரு. கா. பொ. இரத்தினம் தலைமை தாங்குவார். நகைச் சுவை எழுத்தாளர் திரு. ரீ. பாக்கியநாயகம் நூலை வெளியிட்டு வைப்பார் திரு. தேவன் யாழ்ப்பாணம், திரு. கனக. செந்திநாதன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். யாழ். நகர முதல்வர் திரு. க. செ. மாதேவா பாராட்டுரை நிகழ்த்துவார். வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் வைத்திசுவர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

**அன்றாடம் உண்ணவே வழியில்லாத அந்தக் குடும்பத்தில், எலும்புந்தோலுமான ஒரு கிழவன், அவன் மகள், அவள் குழந்தை!**

**அன்பு ஒன்றுதான் அங்கு இருந்தது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க உதவுக

## கைத்தொழில் அமைச்சரிடம் கூட்டுறவுத் தலைவர் வேண்டுகோள்

"வட பகுதிக் கூட்டுறவு இயக்கத்தின் ஆதரவில் பல சிறுகைத் தொழில்களை பல தடைகளின் மத்தியில் நாம் தொடக்கி நடாத்தி வருகிறோம். இவற்றை இங்கு வருகை தந்திருக்கும் அமைச்சர் அவர்கள் தமது குறுகிய கால விசயத்தின் போது பார்வையிடுவார்களாயின் இவற்றின் முன்னேற்றத்தையும், அதனுல் நாட்டின் பொருளியல் வளர்ச்சிக்கு ஏற்பட்டிருக்கும் உதவியையும் உணர்ந்து கொள்ள முடியும். நமது இயக்கம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். நாம் ஒரு புதிய கைத்தொழிலை ஆரம்பிக்கும்கால், அவ்வகையான தொழில்கள் ஏற்கனவே நாட்டில் உள்ளன என்று காரணம் காட்டி தடை செய்யாமல் இருந்தாற் போதும்' என்று வடபகுதிக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் ...வது வருடாந்த மாநாட்டின் போது தலைமையுரை நிகழ்த்துகையில் சம்மேளனத் தலைவர் திரு ஆர். இராசரத்தினம் அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தனவிடம் கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சிறப்புற நடைபெற்ற இம்மாநாட்டிற்கு பலதரப்பட்ட கூட்டுறவு இயக்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



சு. சே. மாதேவா

இம்மாநாட்டில் யாழ். நகர முதல்வர் திரு. எஸ். சி. மாதேவா பேசுகையில் கூறியதாவது:

"இரண்டாம் மாயுத்த காலத்தில் பதுக்கல் பேர்வழிகளிடம் இருந்தும், இருள் சந்தைக்காரரிடம் இருந்தும் வாடிக்கைக்காரரையும், நாட்டையும் காப்பாற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய பண்டகசாலை இயக்கம் மக்களுக்கு எங்ஙனம் ஓர் வரப்பிரசாதமாக அமைந்தது என்பதை நாம் அனுபவத்தில் கண்டோம். ஐக்கிய பண்டகசாலைகள் யுத்த நெருக்கடி காலத்திலும் கூட, உணவுப் பொருட்களையும், துணிபுடவை வகைகளையும், வாடிக்கைக்காரருக்கும், பொதுமக்களுக்கும் குறைந்த விலையில் பகிர்ந்தளிப்பதில் செய்த சிறப்பான சேவையே கூட்டுறவு இயக்கம் யாழ்ப்பாணத்தில் வேர்கொள்ளுவதற்கு மூலகாரணமாகும்.

"நாட்டில் வேறெந்தப் பகுதியிலும் பார்க்க கூட்டுறவு இயக்கம் நன்கு செழித்து வளர்ந்திருப்பது யாழ்ப்பாணத்தில் தான் என்பதை அகில இலங்கையும் ஒத்துக் கொண்டிருக்கிறது. ஆதலினுல் தான் தென் இலங்கையில் கூட்டுறவு இயக்கம் குறித்து பிரச்சாரம் செய்யப்படும் பொழுதெல்லாம் யாழ்ப்பாணத்தை முன்மாதிரியாகக் கொள்ளும்படி உதாரணம் கூறுகிருர்கள்.

### கடல்படு திரவியம்

"வடகிழக்குப் பிரதேசம் மூன்று பகுதிகளும் கடலால் சூழப்பட்டுள்ளது. இலங்கையின் மீன்பிடி பகுதிகளில் முக்கியமான பகுதியாகவும், இலங்கைக் கடற் பிரதேசத்தின் மூன்றில இரு பகுதிகளை உட்கொண்டதாகவும் இப்பிரதேசம் இருக்கின்றது. மீன்பிடித் தொழிலில் கூட்டுறவு முறையில் முதலிடு செய்வோமாளுல், இலங்கைக்கு வேண்டிய மீன் உணவின் பற்ருக்குறையை அடியோடு நீக்கிவிடுவோம் என்பதுடன், பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையிலும் நாம் இருப்போம். மீன்பிடித் தொழிலில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கு, அதற்கு ஏற்ற கல்வியை அவர்களுக்கு அளிக்கவேண்டும். மீன்பிடி வள்ளங்களைத் திருத்துவதற்கு குருநகரில் அண்மையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அதிலிருந்து மீன்பிடிப் பயிற்சி நிலையங்கள் பல தோன்ற வேண்டும். கப்பல்கள் செய்வதில் வல்லவர்கள் பலர் எம்மிடையே இருந்தனர். ஆயினும் நீராவிக் கப்பல்களின் வரத்துடன் இத்தொழில் பட்டுவிட்டது. மீண்டும் அறிவியல்முறையில் கப்பல் கட்டும் தொழிலை நாம் விருத்திசெய்ய வேண்டும்.

### பெண்கள் முன்வர வேண்டும்

"கூட்டுறவுக் கல்வி நாட்டில் தீவிரமாகப் போதிக்கப்படுவதற்கு, முதலில் எமது பெண்களுக்கு இத்துறையில் ஆர்வத்தை உண்டாக்க வேண்டும். கூட்டுறவில் பெண்கள் இதுவரை போதிய அக்கறை காட்டாதிருப்பதற்கு அவர்கள் கூட்டுறவுக் கொள்கையை வெறுப்பது தான் காரணமென்று கொள்ள முடியாது. இத்துறையில் போதிய பிரச்சாரம் செய்யப்படாமையும், கூட்டுறவுக் கொள்கைகள் பற்றிய கருத்துக்கள் நன்கு போதிக்கப்படாமையுமே காரணமாகும். பெண்கள் மட்டும் இத்துறையில் ஈடுபடுவார்களாளுல், கூட்டுறவுக் கல்வியை நாட்டு மக்கள் அனைவரிடமும் பரப்புதல் எளிதில் கைகூடும். ஆகவே, கூட்டுறவுமுறையில் குடும்பத்தின் பொருள் வருவாயை எவ்விதம் அதிகரிக்கக்கூடும் என்பதையிட்டும், தையல், பின்னல், நெசவு, பன்னவேலை போன்ற சிறு சிறு குடிசைக்கைத்தொழில்களில் ஓய்வு நேரத்தைச் செலவிட்டு குடும்பபாரத்தை ஆண்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும் என்பதையிட்டும் அவர்களுக்கு நல்ல முறையில் சொல்லிக் கொடுக்கவேண்டும்".

### புதிய தொழில்கள்

திரு. ஆர். இராசரத்தினம் அவர்கள் தொடர்ந்து அமைச்சரை வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது:

'புதிதாக கூட்டுறவு முறையில் கைத்தொழில்களை ஆரம்பிக்க முயற்சிகள் செய்யப்பட்ட பொழுதெல்லாம் அவற்றிற்குத் தடை விதிக்கப்பட்டது. ஆளுல் வேடிக்கைக்குரிய விடயமாக இருப்பது அதே கைத்தொழில்களை தனியார் ஆரம்பிக்க முயற்சிக்கப்பட்ட பொழுதெல்லாம் அனுமதி வழங்கப்பட்டதாகும். இது கூட்டுறவுத் துறையில் உள்ள எமக்கு வேதனையைத் தரும் சம்பவமாகும். கூட்டுறவாளர்கள் கைத்தொழில் துறையில் ஈடுபட கைத்தொழில் அமைச்சர் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்.



ஆர். இராசரத்தினம்

'மின்விசைத் தறிகளை அமைக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் கடந்த இரண்டுவருடங்களாக நிலவி வருகின்றது. ஆளுல் இது பற்றி உருப்படியாக எதுவும் செய்யப்படவில்லை. கூட்டுறவு முறையில் மின்விசை நெசவுத்தறிகள் நிறுவப்படுமாயின் நாட்டுக்கும் நல்லது. வெளிதேசச் செலவாணியை மிச்சப்படுத்த இது உதவும்.

### மீன்பிடிக் கூட்டுறவு

'கடந்த வருடம் வீசிய புயற்காற்றினுல் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு இதுவரை போதிய நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகிறேன். நிவாரணம் வழங்குவதற்கும் போதிய பணம் திரட்டப்பட்டது. ஆளுல் அப்பணத்திருலான உதவி அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கும் போதுமானதாக இல்லை. மேலும் கொடுக்கப்பட்ட நிவாரண உதவிகளும் கடனுகவே வழங்கப்பட்டுள்ளன. இக்கடனைத் திருப்பிக் கொடுப்பது என்பது அவர்கள் மாட்டில் பெரும் சுமையாகும். இது பற்றியும் அமைச்சரை ஒரு முடிவுக்கு வருமாறு வேண்டுகிறேன்.

'மீன்பிடிக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதனுல் யாழ்ப்பாணத்திலுள்ள மீன் விற்பனவுச் சங்கம் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு தாபனம் திறமையாகச் செயற்படும் பொழுது வேறொரு சமமான நிறுவனம் வேண்டுமா? இச் சங்கம் தொடர்ந்து இயங்கி மீனவர்களுக்கு உதவ வழி சமைக்கப்படவேண்டும்"

# கல்முனைத் தொகுதி அனுதையாகிவிட்டது

இலங்கைப் பாராளுமன்றச் சரித்திரத்திலேயே நடைபெற்றிராத ஒருசம்பவம் கடந்த 21.10-65 மாலை பாராளுமன்றத்திலே நடைபெற்றது.

அன்று மாலை குடியியல் உரிமைகளைப் பறிக்கும் மசோதா மீதான விவாதத்தின் இறுதிக்கட்டம் பாராளுமன்றத்திலே தொடர்ந்து நடைபெற்றது. தல்கொடபிட்டிய இலஞ்ச விசாரணைக் கமிசனுல் குற்றவாளியாகக் காணப்பட்டவரும், இந்த மசோதாவினுல் பாதிக்கப்படுபவர்களுள் ஒருவருமான ஜனுப் எம். எஸ். காரியப்பர் இந்த மசோதாவின் மீது பேசிக்கொண்டிருந்தார். அவரது பேச்சு மிகப் பரிதாபகரமானதாகவும். பாராளுமன்ற அங்கத்தவர்களை மயக்கக் கூடியதாகவும் அமைந்து.

குடியியல் உரிமைகளைப் பறிக்கும் இந்த மசோதாவால் பாதிக்கப்படுபவர்கள் எம். எஸ். காரியப்பர், சி. ஏ. எஸ். மரிக்கார், எம். பி. டி. சொய்சா, டி. பி. மொன்னங்குலாம், ஆர். இ. ஜயதிலகா, கென்றி அபயவிக்ரம ஆகியோராவர். இவர்கள் அறுவரும் எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களின் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தல்கொடபிட்டியா இலஞ்சவிசாரணைக் கமிசனுல் விசாரிக்கப்பட்டுக் குற்றவாளியாகக் காணப்பட்டவர்கள். இவர்களுள் முதலிருவரும் முஸ்லிம்க...

முஸ்லிமவரை ... மற்றவர் (சி. ஏ. எஸ். மரிக்கார்) முஸ்லிம் சமூகத்தின் கௌரவத்தைக் கருதி அரசியல் வாழ்விலிருந்தே விலகிக் கொண்டவர். ஆளுல் ஜனுப் எம். எஸ். காரியப்பர் மட்டும் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னரும் தன்னை 'நிரபராதி என்று கூறிக்கொண்டு' மின்சார பொம்மைபோல நடமாடித் திரிகின்ருர்.

1960 யூலைத் தேர்தலில் அப்போது தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட ஜனுப் எம். சி. அகமதுவால் பாராளுமன்றப் படிக்கட்டையே மிதிக்க வொண்ணுதவகையில் துரத்தப்பட்ட அவர், கடந்த 1965 மார்ச் தேர்தலில் சில 'யக்கடாயா'க்களின் முயற்சியால் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு இப்போது ஏற்பட்டுள்ள இழிவு நிலை அவருக்கு மட்டுமுரியதல்ல; அவர் ஒரு முஸ்லிம் என்ற முறையில் முஸ்லிம் சமூகத்திற்கே உரியதாகும். இதனுல் அவர் ஈழத்து முஸ்லிம் சமுதாயத்தின் கௌரவத்தையும் காற்றில் பறக்கச்செய்துவிட்டார்.

ஜனுப் காரியப்பர் குடியியல் உரிமைகளைப் பறிக்கும் மசோதாவின் மீது ... ஞர். இந்தப் பேச்சைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு, இவரது ஏடகோடிகளுக்கு விநியோகித்து, சுப்ரீம் கோர்ட்டிலே அப்பீல் செய்வதற்குப் பணம் அறவிடப் போகிருராம்.

மசோதா பாராளுமன்றத்திலே இரண்டாம வாசிப்பின்போது 142 வாக்குகளைப் பெற்று நிறைவேறியதும், துக்கம் தோய்ந்த மரணக்களை தட்டிய முகத்தோடு வெளியேறிய ஜனுப் காரியப்பர் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்தார்: "நான் என் பதவியை இராசினுமாச்செய்யப் போவதில்லை; சுப்ரீம் கோட்டில் அப்பீல் செய்யப் போகிறேன்' என்று நிருபர்களிடம் குழறிவிட்டு அகன்றுபோனுர்.

இவ்வளவு வெட்கக்கேடான சம்பவம் நடைபெற்ற பின்னும் பதவியை விட்டு விலகமாட்டேன் என்று குரங்குப் பிடி பிடிப்பது சனநாயக விரோத செயலாகும்.

இப்போது கல்முனைத் தொகுதி அனுதையாகி விட்டது. கடந்த மார்ச் 65 லிலிருந்து கல்முனைத் தொகுதி அனுதையாகவே இருந்துவருகின்றது. குடியியல் உரிமைகளைப் பறிக்கும் மசோதா நிறைவேற்றப்படுவதற்கு முன் ஒரு சக்தியற்ற உருவம் கல்முனைத் தொகுதிக்கு உரிமை கொண்டாடிக் கொண்டிருந்தது. இப்போது அந்த உருவமும் அடியற்ற மரம்போலக் கீழே சாய்ந்துவிட்டது. அடுத்த இடைத் தேர்தல் நடக்கும்வரை இத்தொகுதி அனுதையாகவே இருக்கும்.

— மரு கய்யாம்


# ரிஷி லேகியம்
(கருணைக் கிழங்கு)



மூல முளைகள், இரத்தம், சீழ் பௌந்தம், வாய்வுகள், உள் மூலம், வெளி மூலம், தீராத மலச்சிக்கல், மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா உபாதைகளுக்கும் கைகண்டது.

ரிஷி மார்க்கைக் கவனித்து வாங்கவும்

டின் 1க்கு ரூ. 3-50

தபால் செலவு 1-10 சதம்

எவ்வித தீராத வியாதிக்கும் எம்மைக் கலந்து ஆலோசியுங்கள்.

அனேக மருந்துகள் அடங்கிய கேட்லாக் இனும்,

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு,
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெட்டவரின் நட்பால் ஏற்பட்ட கேடுகள்

## துட்டர்கள் சகவாசத்தால் தூற்றுதல் மலிந்தன

மலர் மலர்ந்ததும் தேனீக்கள் தேடி ஓடோடி வருகின்றன. மரம் பழுத்ததும் வெளவால்கள் பறந்தோடி வருகின்றன. இதேபோலத்தான் மனிதன் வாழ்க்கை வசதிகளைப் பெற ஆரம்பித்ததும் அவனைச் சுற்றி ஒரு கூட்டமே வந்து மொய்த்து விடுகிறது.

மலர் தராத மரத்தை எந்தத் தேனீயும் தேடுவதில்லை. பழம் தராத மரத்தையும் வெளவால்கள் நாடுவதில்லை. மனிதன் வாழ்க்கை வசதியற்றிருக்கும் நிலையில், வாழத் துடிக்கும் பருவத்தில் அவனை எவரும் திரும்பிப் பார்ப்பதில்லை.

வறுமையுடன் போராடிய திரு. ராமச்சந்திரனின் குடும்பத்தை கைதூக்கிவிட அந்நாட்களில் யாரும் முன்வரவில்லை. சத்தியா அம்மையார் சக்கரபாணியையும் ராமச்சந்திரனையும் வளர்க்க பெரிதும் பாடுபட்டார். வேளாவேளைக்கு போதிய உணவூட்ட மறந்தாலும் அவர்களுக்குத் தேவையான அறிவையும் பண்பையும் ஊட்ட அன்னை மறக்கவில்லை.

கண்டியிலே உள்ள ஒரு கலாசாலையின் அதிபராக திரு. ராமச்சந்திரனின் தந்தையார் கடமை பார்த்து வந்தார். ராமச்சந்திரன் பிறந்து ஆறு மாதங்களில் கேரளத்துக்கு குடும்பத்தார் அனைவரும் சென்றனர். தந்தை மறைந்த பின்னர் தரித்திரம் தலை தூக்கியது. வறுமைப்பிணி வாட்டி வதைத்தது.

தமது ஏழாவது வயதில் ராமச்சந்திரன் நாடக உலகில் காலடி எடுத்துவைத்தார். சிறுவர்களான சக்கரபாணியும் ராமச்சந்திரனும் சம்பாதிக்கும் தொகையில் குடும்பம் நடத்துவதே மிகவும் கடினமாகவிருந்தது. நாடகக்கம்பெனி எங்கெங்கு விடுதி விடுகிறதோ அங்கெல்லாம் சத்தியா அம்மையாரும் மக்களுடன் சென்று, தனியாக வீடு வாடகைக் கமர்த்திக்கொண்டு வாழ்ந்து வரலானார்.

### திரையில் பிரவேசம்

1936-ம் ஆண்டு சதிலீலாவதி என்ற தமிழ்ப்படத்தில் சின்னஞ்சிறு பாத்திரமேற்று ராமச்சந்திரன் தோன்றினார். தொடர்ந்து பல படங்களில் தோன்றலானார். அமைச்சராகவும், சிற்றரசராகவும், அர்ச்சுனனாகவும், கிருஷ்ணனாகவும் பலப்பல பாகங்களில் தோன்றலானார்.

ராமச்சந்திரனிடம் தேங்கிக் கிடந்த திறமையை வெளிக்கொணர காரணபூதர்களாகவிருந்தவர்கள் ஜுபிட்டர் பிக்சர்ஸ் முதலாளியான காலஞ்சென்ற திரு. சோமசுந்தரம், பட்சிராஜா ஸ்ருடியோ அதிபர் ஸ்ரீராமுலு நாயுடு ஆகியோர்கள் எனலாம். 'மர்மயோகி', 'மலைக்கள்ளன்' போன்ற படங்களே புரட்சி நடிகர் என்ற பட்டத்தை ராமச்சந்திரனுக்கு அளித்து சினிமாவானிலும், மக்கள் மன்றத்திலும் ஒரு நிலையான இடத்தை அவருக்கு ஏற்படுத்திவிட்டன.

முன்னேற்றப் பாதையில் ஏறுநடை போட ராமச்சந்திரன் ஆரப்பித்ததும் நல்லவர்களும் பொல்லாதவர்களும் அவரைச் சூழ்ந்தனர். நல்லவர்களின் பாதையில்தான் ராமச்சந்திரன் நடைபோட்டார். ஆனாலும் கெட்டவர்களின் சகவாசத்தால் சில சில்லறைச் சம்பவங்களும் ஏற்படாமற் போகவில்லை.

### பொறுமையும் பகையும்

புரட்சி நடிகரின் தயவை நாடிய சிலர், அவரிடம் பலதரப்பட்ட கதைகளைக் கூறி



வேறு சிலருடைய விரோதியாக்கிவிட முனைந்தனர். சிற்சில சமயங்களில் சிண்டு முடியும் வேலைகளிலும் ஈடுபட்டனர். இதனால் நல்லவரான ராமச்சந்திரன், சிலரால் தீயவரென பழித்துமிழித்தும் கூறப்பட்டார். பகைமையும் பொறுமையும் வளரத் தலைப்பட்டன.

மக்கள் மத்தியில் போதிய செல்வாக்கைப் பெற்றுவிட்ட எம். ஜி. ஆரைப் பயன்படுத்தி தங்கள் படங்களில் கொள்ளை லாபமடிக்க பல படமுதலாளிகள் திட்டமிட்டனர். இவர்களுடன் பலதரப்பட்ட வகையில் ஒத்துழைக்க புரட்சி நடிகர் சிற்சில வேளைகளில் மறுத்தும் வந்தார். படத்துக்கான கதைவசனம், நடிகர் தேர்வு, காட்சி அமைப்பு அத்தனையிலும் எம். ஜி. ஆர். தலையிட்டு தனது அதிகாரத்தைப் பிரயோகிக்கலானார். தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் புரட்சிநடிகரின் தலையீட்டுக்கு சிரம்பணிந்தே நடக்க வேண்டியிருந்தது. பல இலட்சக்கணக்கான ரூபாய்களை தயாரிப்புகளில் முடக்கிக் கொண்டிருந்த முதலாளிகள், எம். ஜி. ஆரின் ஒத்துழைப்புக் கிடைக்காத தன்மையினால் திக்கற்றுத் திணறினார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரசாரக் கூட்டங்களிலும் வேறு விழாக்களிலும் அதிக நேரத்தை செலவிட்ட எம். ஜி. ஆர்.,

தமது சினிமாத்துறை வாழ்க்கையையே இரண்டாவதாகக் கணிக்கத்தலைப்பட்டார். ஆகவே சினிமா வட்டாரத்தில், புரட்சி நடிகர் பற்றிய புறங்கூறும் கூட்டம் தலைதூக்க ஆரம்பித்தது.

ஒரு தடவை விஜயா ஸ்ருடியோவில் 'பவானி' படத்துக்கான நந்தவனக் காட்சி சுடப்படவிருந்த சமயம், படப்பிடிப்பைக் காணச் சென்றிருந்தோம். புரட்சி நடிகருடன் அஞ்சலிதேவியும் சேர்ந்து பாடும் காதல் பாட்டு படமாக்கப்படவிருந்தது. இப்பொழுது இலங்கையிலிருக்கும் விஜயா ஸ்ருடியோவில் பணிபுரியும் இயக்குநர் திரு. மஸ்தான் அவர்களே இப்படத்தின் இயக்குநராகவும், ஒளிப்பதிவாளராகவும் பணிபுரிந்தார். பகல் ஒரு மணி முதல் இரவு 10 மணி வரை படப்பிடிப்பு இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

### ஒத்துழையாமை

அஞ்சலிதேவி உரிய காலத்துக்கு வந்து 'மேக்கப்' முடித்துக்கொண்டு படப் பிடிப்புக்குத் தயாராகிவிட்டார். ஆனால் புரட்சி நடிகரைக் காணவேயில்லை. மாலை 7 மணியளவில்தான் எம். ஜி. ஆர். வந்தார். வெளியூரில் நடைபெற்ற ஒரு கழகக் கூட்டத்துக்குப் போய்விட்டு நேரடியாக ஸ்ருடியோவிற்

**அங்கம் பத்து**

குள் நுழைந்தார். படப்பிடிப்பு முடிவதற்கு இன்னும் 3 மணி நேரமே பாக்கியிருந்தது. அதற்குள்ளாக எதைச் செய்ய முடியும்?

அடுத்தவாரம் படப் பிடிப்பை வைத்துவிடலாம், என்று புரட்சி நடிகர் கூறிவிட்டு புறப்பட்டுச் சென்றுவிட்டார். இத்தனைக்கும், 'பவானி' படத்தை தயாரிக்கத் திட்டமிட்டிருந்த 'சுவஸ்திக்' நிறுவனத்தில் புரட்சி நடிகரின் அண்ணனை திரு. சக்கரபாணிக்கும் பங்கிருந்தது. அத்தகைய நிறுவனத்திற்கே புரட்சி நடிகரின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லையென்றால் வேறு எவருக்குத்தான் கிடைக்க முடியும்?

புரட்சி நடிகரின் பிடிவாத குணத்தினால் பல பெரிய படங்கள், பல வருடங்களாக முடிவு பெறாமல் மூலையில் கிடந்தன. 'விக்கிரமாதித்தன்', 'பக்தாத் திருடன்', 'ராஜாதேசிங்கு' ஆகிய பிரமாண்டமான படங்கள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ 5 வருடங்களுக்கு மேலாக அரை குறையாகவே இருந்தன.

### பிடிவாதமும் பட்டாமதமும்

புரட்சி நடிகரிடம் சென்று நிலைமையை விளக்கிக் கூறவோ எந்தத் தயாரிப்பாளருக்கும் துணிவு போதாது. மறு பேச்சுப் பேச வகையற்று செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தனர் தயாரிப்பாளர்கள்.

'தான் நடந்து வந்த பாதையை தானே திரும்பிப் பாராவிட்டால் மனிதன் மனிதனாகவே வாழ முடியாது' என்று எம். ஜி. ஆர். அடிக்கடி கூறுவார். தனது வாழ்க்கைப் பாதையை திரும்பிப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் ஒன்று எதிர்பாராமல் புரட்சி நடிகருக்கு திடீரென ஏற்பட்டது.

## புரட்சி நடிகரின் ஒத்துழைப்பின்றி தயாரிப்பாளர் கலங்கினர்

இச்சந்தர்ப்பம் எம். ஜி. ஆரின் வாழ்க்கையையே அடியோடு மாற்றியமைத்துவிட்டது. மக்களனைவரது உள்ளங்களிலும் மங்காத ஒளிவிளக்காக இன்று எம். ஜி. ஆர். வாழ்வதற்கு ஏற்ற வாய்ப்பினை ஏற்படுத்திய அந்தச் சந்தர்ப்பத்தை நாம் வாயார வாழ்த்துவோமாக. சில துர்மதியாளர்களின் சகவாசத்தினால் நல்லவரின் இதயத்தில் தூவப்பட்ட நச்சுக் கருத்துக்கள் யாவும் நீங்கிவிட இவ்வரிய சந்தர்ப்பம் வழி அமைத்தது.

(வளரும்)

### சரோஜாதேவியின் செய்தி



'இலங்கை மக்கள் எம்மீது காட்டுகின்ற அன்பைப் பார்க்கையில் பிறந்தகத்திற்கு திரும்பிச் செல்லவே தேவையில்லை என்று எண்ணத் தோன்றுகிறது' என்று நடிகை சரோஜாதேவி நமது நிருபரிடம் தமது பிரியாவிடைச் செய்தியைக் கூறுகையில் தெரிவித்தார்.

சுதந்திரன் மூலம் ஈழத்து இரசிகர்களுக்கு விடுத்த விசேட பிரியாவிடை செய்தியில் மேலும் சரோஜாதேவி கூறியதாவது:—

'சாதாரண கலைஞர்களாக வந்த நாம் மீண்டும் சாதாரண கலைஞர்களாகத் திரும்பினாலும், அன்பு என்ற பெரும் சுமையைத் தாங்க முடியாத அளவிற்குத் தாங்கிச் செல்கிறோம். ஈழத்தவர்கள் எம்மீது காட்டிய அன்பு எமது வாழ் நாள் முழுவதும் பசுமையாகவே இருக்கும்.

'பெரும் பாலான மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாது போனாலும் முக்கிய நகரங்களுக்கெல்லாம் விசயம் செய்தோம். அங்கெல்லாம் அன்பொழுகும் முகங்களை கண்டோம். அம்முகங்களைக் காணும் பொழுது நாம் பெறற இன்பத்தை எப்படி எடுத்துக் கூறுவது என்று தெரியவில்லை.

'மீண்டும் இலங்கை வருவோம். இலங்கை வருவதினால் எமது உள்ளம் புத்துணர்ச்சியும் புதுத் தென்பும் ஏற்படுகிறது. அந்தளவிற்கு ஈழம் எம்மைக் கவர்ந்துவிட்டது. இந்த அன்புள்ளங்கள்வாழும் நாடு செழித்தோங்க வாழ்த்துகிறேன். இரு நாடுகளுக்குமிடையில் உள்ள உறவு மேலும் வளரட்டும். எமது வருகை இரு நாட்டுக்கும் நிலையான ஒரு கலைப்பாலத்தை அமைத்துள்ளது என்று நம்புகிறேன்.




'ஈழத்தரசன்' எழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் இதயத்தில் பதிந்துவிட்ட நிகழ்ச்சிகள்

## மக்கள் திலகத்தின் சுற்றுலாக் காட்சிகள்

ஊருவெளிபோல் சுழன்று திரிந்த மக்கள் திலகம் குழுவினர் 24ம் திகதி பகல் விசேட விமானத்திலேறி மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் சென்று அன்று இரவே திரும்பினர். அடுத்த நாள் பகல் கொழும்பு தெமட்டகொடையிலுள்ள 'சின்டெக்ஸ்' துணி ஆலையைப் பார்வையிட்ட பின்னர் கண்டிக்குப் புறப்பட்டனர்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்களை மக்கள் திலகமும், சரோஜாதேவியும் திங்கட்கிழமை காலையில், பொறளையிலிருக்கும் 'வூட்லண்ட்ஸ்' என்ற அவருடைய இல்லத்தில் வைத்துச் சந்தித்தனர். தென் இந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் தந்தத்தினாலான ஒரு நேரு சிலையினை பிரதமரிடம் எம். ஜி. ஆர். கையளித்தார். சுமார் ஒரு முள உயரமுடைய இச் சிலை மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுகளமைந்தது.

தமது சொந்த அன்பளிப்பாக திரு. ராமச்சந்திரன் பிரதமருக்கு தந்தத்தினாலான ஒரு மேசை விளக்கைப் பரிசளித்தார். சரோஜாதேவி வெண்கலத்தினாலான ஒரு நடராஜர் விக்கிரகத்தை பிரதமருக்கு அளித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கலைஞர்களைப் பரஸ்பரம் பரிவர்த்தனை செய்து கொள்ளவேண்டும் என்று இருவரும் பேசிக்கொண்டனர். இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு விரைவில் ஒரு கலாச்சாரத் தூதுக் குழுவினை அனுப்பி வைக்க வேண்டும் என்று பிரமரை மக்கள் திலகம் கேட்டுக் கொண்டார்.

மாத்தளையில் நகரசபைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அலிக் அலுவிகார தலைமையில் வரவேற்புபசாரம் வழங்கப்பட்டது. மாலை கண்டி திருத்துவக் கல்லூரியில் வரவேற்புபசாரம் நிகழ்ந்தது. இதன் பின்னர் மக்கள் திலகம் குழுவினர் கொழும்பை நோக்கிப் புறப்பட்டனர். கொழும்பிலேயுள்ள தப்பிரபான் ஹோட்டலில் 'சுயாதீனப் பத்திரிகைகள்' சார்பில் இரவு விருந்து அளிக்கப்பட்டது. பிரபல சிங்களச் சினிமா நட்சத்திரங்கள் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

### கதிர்காமம் சென்றனர்

செவ்வாய்க்கிழமை காலை கால்பேஸ் ஹோட்டலில் ஓய்வெடுத்துவிட்டு பிற்பகல் 4 மணிக்கு தென்பகுதியிலுள்ள காட்சிகளைக் காணவும், கதிர்காமத்தைப்பார்வையிடவும் குழுவினர் புறப்பட்டுச் சென்றனர்.

அடுத்த நாட் காலையில் கதிர்காமத்தில் சற்றும் எதிர்பாராத வகையில் பெரும் திரளான மக்கள் சமுத்திரம் சேர்ந்து கொண்டது. மக்கள் திலகத்தின் குழுவிலுள்ள பலரும் ஆலய தரிசனம் செய்துபூசை கண்டபொழுது எம். ஜி. ஆருக்கு வேஷ்டி பணி கொடுக்கப்பட்டிருந்தது. இராமக்கிருஷ்ண சங்க மடத்திலேயுள்ள புத்தக சாலையில் புரட்சி நடிகர் புதையுண்டார். அங்கே கிடந்த நூல்களனைத்தையும் தாமே எடுத்துக் கொண்டார்.

மீதமாகக் கிடந்த நூல்கள் யாவும் நொடிப் பொழுதில், பக்தர்களுக்கு விலையாகிவிட்டன. கந்தனைத் தரிசிக்க வந்த மக்கள் இராமச்சந்திரனைக் கண்டதும் அவருடைய கையொப்பத்தைச் சேகரிக்க மார்க்கம் இல்லாது தவித்தபோது இராமகிருஷ்ண மடத்து வாசிகசாலை தஞ்சமளித்தது. அங்கே கிடந்த புத்தகங்களை வாங்கி அவற்றிலே கையொப்பங்களைப் பெறத் தலைப்பட்டனர் மக்கள்.

புதன்கிழமை மாலை கொழும்பை அடைந்த குழுவினர் எந்தளையிலுள்ள விஜயா ஸ்டுடியோவிற்குச் சென்றனர். ஸ்டுடியோவின் உள்ளும் புறமும் சமுத்திரம் போல மக்கள் அலைமோதினர். மக்கள் வெள்ளத்தில் திக்குமுக்காடிய மக்கள் திலகத்தையும் சரோஜாதேவியையும் சிங்கள சினிமா நடிகைகள் கைகொடுத்துக் காப்பாற்றி மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

இயக்குநர் திரு. எம். மஸ்தான் அவர்கள் வரவேற்பிதழ்களை வாசித்து வெள்ளிப் பேழைகளிலிட்டு அளித்தார். செல்வி சுஜாதா பெரேராவின் தமிழ்ப் பாடலுடன் விழா ஆரம்பமாகி

தொகுப்பு:

**ஈழத்தரசன்**

யது. சிங்களக் கலைஞர்களின் கலை விருந்தின் பின்னர் சரோஜாதேவியும், மக்கள் திலகமும் நன்றியுரை கூறினர். மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை வரவேற்புரை கூறினார். இரவு உணவு திரு. கே. குணரத்தினம் அவர்கள் இல்லத்தில் கொடுக்கப்பட்டது.

வியாழக்கிழமை காலை 10-30க்கு சிலோன் ஸ்டுடியோவில், சிலோன் தியேட்டர்ஸ் அதிபர் திரு. செல்லமுத்து ஒரு வரவேற்பளித்தார். சிற்றுண்டி விருந்தின் பின்னர் கலைஞர்கள் இருவரும் நன்றி கூறினர். சிங்களப் படப்பிடிப்பு ஒன்றினையும் மக்கள் திலகம் பார்வையிட்டார். மதிய உணவுக்காக திரு. செல்லமுத்து வீட்டுக்குச் சென்றனர்.

### தமிழரசுத் தந்தையுடன்

பகல் ஒரு மணியளவில் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுடைய இல்லத்துக்கு மக்கள் திலகமும் சரோஜாதேவியும் வந்திருந்தனர். திரு. அ. அமிர்தலிங்கமும், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கமும், பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகிய தமிழரசு எம். பிக்களும் மக்கள் திலகத்தைக் காண வந்திருந்தனர். கால் மணி நேரம் அளவளாவிவிட்டு புறப்பட்டுச் சென்றனர். பகல் விஜயா ஸ்டுடியோ சென்று, சிங்களப்படங்கள் சிலவற்றை திரையிட்டுப் பார்த்துத் திரும்பினர்.

இலங்கை திரைப்பட வர்த்தக சபையினர் மக்கள் திலகம், சரோஜாதேவி ஆகியோருக்கு கால்பேஸ் ஹோட்டலில் வைத்து தேனீர் விருந்தளித்தனர். இவ்வைபவத்தில் பேசும்போது, புரட்சி நடிகர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் திரைப்படங்களை பரிவர்த்தனை செய்வதில் தாமும் தம்போன்ற தயாரிப்பாளர்களும் விசேட கவனம் செலுத்த ஆவன செய்வதாகக் கூறினார்.

கொழும்பு விவேகானந்த சபையினர் ஏற்பாடு செய்திருந்த கலைவிழா மாலையில் வித்தியாலய மண்டபத்தில், திரு. சூ. வைரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. வித்தியாலயம் செல்லும் தெருக்களனைத்திலும் மக்கள் சமுத்திரம் போல் திரண்டு நின்றனர். ஐநூறுக் [illegible] இருந்தும் மக்களின் உணர்ச்சி வெள்ளத்துக்கு அணைபோட இயலவில்லை.

### அமைச்சர் வீட்டில்...

இரவு உணவு உள்ளூராட்சி மன்ற அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அவர்களுடைய இல்லத்தில் அளிக்கப்பட்டது.

மக்கள் திலகம் இலங்கையை விட்டுப் புறப்படவிருந்த நாளான வெள்ளிக்கிழமை அதிகாலையிலிருந்தே விடுதியில் ஆண்களும் பெண்களும் குழந்தை குட்டிகளும் ஆயிரக் கணக்கில் படையெடுக்கத் தொடங்கினர். விடுதி அதிகாரிகள் தலையிட்டும் கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை.

எம். ஜி. ஆர். மன்றத்தினர் காலை உணவை ஏற்பாடு செய்திருந்தனர். மதிய உணவிற்காக 'சிலோன் எண்டர்டெயின்மெண்ட்ஸ்' அதிபர் ஜனாப் ஜபீர் ஏ. காதர் அவர்களுடைய இல்லத்தை அடைந்தனர். உணவை முடித்துக்கொண்டு இரத்மலானை விமான நிலையத்துக்கு அனைவரும் புறப்பட்டனர்.

(—தொடர்ச்சி

கடந்த வாரம் 'மக்கள் திலகத்துக்கு இலங்கை மக்கள் அளித்த மகத்தான வரவேற்பு' என்ற மகுடத்துடன் சுற்றுலாக் காட்சிகளைத் தந்தோம். அக் கட்டுரையின் தொடராக இஃது அமைகிறது.

இரண்டு இலட்சத்துக்கு மதிகமான மக்கள் திரள்திரளாக விமான நிலையத்தை முற்றுகையிட்டிருந்தனர். வழக்கமான பரிசோதனைகள் யாவும் மிகவும் சீக்கிரமாகவே முடிந்ததும் மக்கள் திலகமும் சரோஜாதேவியும், தங்களை வழியனுப்ப வந்திருந்த மக்களுக்குக் காட்சி கொடுக்க கால்நடையாகச் சென்று சுற்றினர். எங்கெங்கு வெற்றிடமிருந்ததோ அங்கெல்லாம் மக்கள் திரள் அலைமோதியது. வானுயர வாழ்த்தொலிகளைக் கூறி மக்கள் பரவசமடைந்தனர். இலங்கை மக்கள் தன்பால் கொண்டுள்ள கரைகடந்த அன்புப் பெருக்கை நினைந்தோ என்னமோ மக்கள் திலகத்தின் மனதும் சஞ்சலமடைந்திருக்க வேண்டும். அவருடைய முகத்தில் ஒரு சிறு கவலை ரேகை இழையோடியதை அவதானிக்க முடிந்தது.

### பிரியாவிடை

பிற்பகல் 3-45 மணிக்கு விமானத்துள் சென்றமர்ந்து கொண்டனர். மக்களின் வாழ்த்தொலியுடன் விமான மிட்ட ஓசையும் இணைந்தது. மக்கள் திலகத்தையும் சரோஜாதேவியையும் அவர்களுடன் வந்திருந்த திரு. எஸ். கே. டி. சாமி (எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்), திரு. ஆர். எம். வீரப்பன் (சத்தியா மூவீஸ் தயாரிப்பாளர்), திரு. முத்து, திரு. திருமதி பைரப்பா (சரோஜாதேவியின் பெற்றோர்), திரு. ஏ. கிருஷ்ணசாமி, (சரோஜாதேவியின் மைத்துனர்) ஆகியோரையும் சுமந்து கொண்டு 'எயார் சிலோன்' விமானம் வானமண்டலத்துள் ஓடி மறைந்து கொண்டது.

பிரிவாற்றுத் துயருடன் பின் தங்கி நின்ற நண்பர்களும், அன்பர்களும் கண்ணீரை மறைக்க முடியாது தவித்தனர்.

'மீண்டும் வருவேன் இந்நாட்டுக்கு' என்று புரட்சி நடிகர் பகர்ந்துவிட்டுச் சென்ற மொழியை நினைந்து ஓரளவு சமாதானமடைகின்றனர் இலங்கை மக்கள்.



முரட்டுத்தனமுள்ள ஒருவன் மூர்க்கத்தனமான காரியங்களைச் செய்வான் என்பதில் யாருக்காவது ஐயமிருக்க முடியுமா? இதோ 'முரடன் முத்து' தனது முரட்டு சுபாவத்தைத் [illegible] மங்கையிடம் காட்டுகிறான் சினிமாஸ் திரைகளுக்கு [illegible] "முரடன் முத்து" படத்தில் சிவாஜி கணேசனும் தேவிகாவும் இப்படிக் காட்சி அளிக்கின்றனர்.

## கண்டி நகர் கண்ட கண்கொள்ளாக் காட்சி

**25ம்** திகதி மலையகத் தலைநகரும், மக்கள் திலகம் பிறந்தகமுமான கண்டி மாநகரம் மக்கள் திலகத்தையும் குழுவினரையும் வரவேற்க விழாக்கோலம் பூண்டது. பிற்பகல் நிகழ்ச்சி மாத்தளை மைதானத்தில் நடைபெற்றது. மாத்தளை மாநகர சபைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அலிக் அலுவிகார வரவேற்புக்குத் தலைமை தாங்கினார். மழையின்மையினால் மக்கள் திரள் பெருங் கடல்போல் அலைமோதியது.

கண்டி டிரினிட்டிக் கல்லூரி மண்டபத்தில் மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கத்துக்காகவும் செங்கடகல பௌத்த மன்றத்தின் நிதிக்காகவும் கலைவிழா நடைபெற்றது. கண்டிய நடனங்களைப் பார்க்க மக்கள் திலகம் விரும்பியமையினால் கண்டிய நடனக் காட்சிகளைக் காண்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

கண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளனைத்தையும் ஏற்பாடு செய்தவர் திரு. எஸ். சற்குருநாதன் அவர்களே. மதிய உணவளித்ததோடு, பரிசுகளையும் வழங்கியவரும் அவரே. மதிய உணவுக்கு கண்டி குவீன்ஸ் ஹோட்டலுக்கு வந்தபோது அரசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவை திரு. ராமச்சந்திரன் குழுவினர் எதிர்பாராத வகையில் சந்திக்க நேர்ந்தது.



தலையிலே கட்டுப் போட்டுக் கொண்டு தையல் நிமிர்ந்து பார்த்துக்கொண்டு நிற்பது ஏனோ? 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் எம். ஜி. ஆர்., புதுமுகம் ரத்னா.

விழாவுக்கு சேர் பேர்னட் சொய்சா தலைமை தாங்கினார். திரு பி. டி. ராஜன் வரவேற்புரை வழங்கும்போது, தமிழகத்திலிருந்து இலங்கைக்கு 200 வருடங்களுக்குமேல் தருவிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வியின் பரிதாப நிலையைச் சுட்டிக் காட்டினார். சுமார் 10லட்சம் தமிழர்களில் பத்தாயிரம் பிள்ளைகள் தானும் கல்வி பெற வாய்ப்பற்றிருப்பதாகக்கூறி, அக்குழந்தைகளின் கல்விக்கு புரட்சி நடிகர் மீண்டும் மீண்டும் கொடை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

# பதவிவெறி தாய்மை . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஷி, இங்கு இந்தியத் தமிழகத்திலே மார்வாடி வட்டிக்கடைக்காரர்களால் சுரண்டப்படுவோருக்கவும் இருக்கிறுன். இது முதலாளித்துவ சமுதாயத்தின் முறைகேடான நியதி. இதற்காக தமிழரை மட்டும் குறைகூறுவது முற்போக்கு அரசியலாகாது.

## இது முற்போக்கா?

'தமிழரிடையே பணக்காரத் தொண்டமான்கள்இருக்கிருர்கள்' என்கிறுர் திருமதி பண்டாரநாயகா. இங்குதான் அவருடைய இனவெறி பொருளாதார முற்போக்கு நெறியோடு இணைந்திருக்கவில்லை என்பது புலப்படுகிறது. இலங்கைக்குக் கங்காணியாகச் சென்ற ஒரு குடும்பத்திலிருந்து அத்திமரம் பூத்தாற்போல ஒருதோட்ட முதலாளி தொண்டமான் தோன்றியிருக்கிருர். அவரைக் காட்டி இலங்கையில் குடியேறிய தமிழர் எல்லோரும் தோட்டமுதலாளிகள் ஆகிவிட்டனரென்று அப்பாவிச் சிங்களவர்களை நம்ப வைக்கப் பார்க்கின்ருர் பண்டா.

இலங்கையில் ஒருவர் ஏழைக் குடிமகனை இந்துதோட்ட முதலாளியாக மலர்கிருரென்ருல், தோட்டத் தொழிலாளர்களாக உள்ள தமிழர்களுடைய உழைப்பாலேதான். இதைக் கண்டு சிங்களச் சீமாட்டி வயிறெரிவது ஏனே? துணிவிருந்தால், முற்போக்கு மனமிருந்தால், புரட்சி உள்ளமிருந்தால், வர்க்க உணர்ச்சி கொண்டு தோட்ட முதலாளிகள் எல்லோருரையுமே வெறுத்துப் பேசட்டும் பண்டாரநாயகா. அதனைத் 'தமிழர்' என்ற இன உணர்வோடு எதிர்க்க நாம் கடமைப் பட்டிருக்கவில்லை. ஆனல், அத்தகைய வர்க்க உணர்ச்சி எதுவும் சீமாட்டியின் சிந்தனையில் இல்லை.அது இருந்திருந்தால், இலங்கையில் தோட்ட முதலாளிகளாக உள்ள வெள்ளையர்களையும் அவர் வெறுத்துப் பேசியிருப்பார். இலங்கையைச் சுரண்டிக் கொழுத்தவர்களிலே பிரிட்டிஷ்காரர்கள் முதலிடம் பெறுகிருர்கள். சிறிமாவோ அம்மையார் அவர்களைச் சீருத காரணம் என்னவோ? அவர்களிலே பெரும்பாலோர் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறி விட்டார்கள் என்பதனுலா?

### நாட்டைச் சுரண்டியவன் ஆங்கிலேயன்

ஆங்கிலேயன், இலங்கையின் வளத்தைப் பெருக்க தோட்டங்களிலே கூலிக்காரஞக இல்லாமல், அந்த நாட்டின் வளத்தைச் சுரண்டித் திரட்டிய பெரும் பொருள்களை பிறந்த நாட்டிற்கே கொண்டு போய் விட்டான் திருடனைப்போல. கூலிகளாக இலங்கைக்குச் சென்ற தமிழர்கள் இன்னமும் கூலிகளாகவே உழைத்துப் பிழைக்கின்றனர். நாகரிகம் நுழையமுடியாத தோட்டங்களிலே, கற்காலத்து மனிதர்களைப் போல, கூண்டுகளில் அடைக்கப்பட்டுள்ள புருக்களைப் போல, சின்னஞ்சிறு குடிசைகளிலே சிறை வாழ்க்கை நடத்துகின்றனர். இதற்காகவா இலங்கைத் தமிழர்களை சிறிமாவோ சீறுகிருர்?

'தமிழர்கள் இலங்கையர்களை அடக்கி ஆளக்கூடிய காலம் வெகு தூரத்திலில்லை' எனக்கூறி, சிங்கள இனத்தவரை எச்சரித்திருக்கிருர் சிறிமாவோ சீமாட்டியார். இதன் பொருள் 'இலங்கையிலுள்ள தமிழர் அனைவரையும் இங்கொழுகே, இக்கணமே இந்தியாவுக்கு விரட்டி அடிக்கவேண்டும்' என்பது போலும்.

இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர்களிலே ஐந்தில் நான்கு பகுதியினரைப படிப்படியாக அழைத்துக்கொள்ள இசைவு தெரிவித்துவிட்டது இந்தியா. அதற்கான ஒப்பந்தம் திருமதி பண்டா பிரதமராக இருந்தபோதே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை அப்படியே அமுல் நடத்திவைக்க இப்போது இலங்கையின் பிரதமராகவுள்ள டட்லி சேனநாயகா செயலாற்றி வருகிருர். இந்த நிலையிலும் தமிழருக்கு எதிராக சிங்களவரைத் தூண்டிவிடவேண்டிய அவசியம் என்னவோ?

### நமது விருப்பம்

பிரதமர் பதவி வகித்த ஒரு பெருமாட்டியார், தானே இந்தியாவுடன் செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்திற்கு எதிராக சிங்களவரிடையே இனவெறியைத் தூண்டிவிடுவது அரசியல் நாணயமாகாதே. திருமதி பண்டாவிடம் வேறு எந்த உணர்ச்சியில்லாவிட்டாலும் பிறப்பு காரணமாக தாய்மை உணர்ச்சியேனும் இருக்கவேண்டும். அந்த உணர்ச்சியுடைய எந்த ஒரு பெருமாட்டியும், கொலைக்கும் கொள்ளைக்கும் இட்டுச் செல்லக்கூடிய இனவெறிக்குத் தூபமிடமாட்டார். பதவிவெறி திருமதி பண்டாரநாயகாவின் தாய்மை உணர்ச்சியைக் கொன்று விட்டதோ?

நல்ல காலமாக இலங்கையிலுள்ள சிங்களப் பொதுமக்கள் திருமதி பண்டாவின் தூண்டுதலுக்கு இரையாக மாட்டார்கள் என்ற நம்பிக்கை இன்னமும் நமக்கு இருக்கின்றது. இன்றுள்ள சேனநாயகாவின் ஆட்சி அந்த நல்ல சூழ்நிலையை உண்டாக்கப் பாடுபட்டு வருகிறது. இலங்கைக்குப் பாதுகாப்பு சிங்கள-தமிழர் ஒற்றுமைதான் உண்மையிலேயே இலங்கையிடம் திருமதி பண்டாவுக்கு விசுவாசமிருக்குமாஞல் உண்மையில் சிங்களவர் - தமிழரிடையே ஒற்றுமையை வளர்க்கப் பாடுபட வேண்டும். இதுவே நமது விருப்பம்.

# இராமச்சந்திரனும்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

களிடம் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த ராமச்சந்திரனையும் சரோஜா தேவியையும் சிங்கள நடிகைகளே பாதுகாத்து மேடைக்கு இட்டுச் சென்றனர். இந்த அரிய காட்சியை 'ஜனதின' காணவில்லையே என்றுதான் நாம் ஏங்கிஞேம்.

### 'தவச'வுக்கு வேண்டுகோள்

சுயாதீன பத்திரிகைகள் சங்கம் பத்திரிகைகள் வெளியிட ஆரம்பித்து இன்னும் மூன்று வருடங்கள் பூர்த்தியாகவில்லை. இந்நிறுவனம் வெளியிடும் 'தவச' 'சவச' என்பன போன்ற சிங்களத் தினசரிகள் கடந்தவருடங்களில் முற்றிலும் வகுப்புவாதக் கண்ணேட்டத்துடனே செய்திகளை வெளியிட்டு வந்தன. சிங்களவர்களை தமிழ்பேசும்இனத்துக்கு எதிராகத் தூண்டிவிடும் நோக்குடனேயே பெரும்பான்மையான செய்திகளைப் பிரசுரித்து வந்துள்ளன.

இப்பேற்பட்ட வகுப்புவாத நிறுவனம் தனது பத்திரிகைகளை விளம்பரப்படுத்தும் ஒரே நோக்குடன்தான் திரு. ராமச்சந்திரன், சரோஜா தேவி குழுவினரைஇலங்கைக்கும் கொண்டு வந்தது. இதனை அவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்.

### மனிதனு தேவனு?

சாதாரண ஒரு சினிமா நடிகனைத் தருவிப்பதாகவே இந்நிறுவனத்தின் அதிபர்களும் அதிகாரிகளும் கருதினர். ஆனல் திரு ராமச்சந்திரன் கொழும்பில்கால்வைத்தவுடனேயே தங்கள் அபிப்பிராயத்தை முற்றாக மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. 21ம் தேதி மாலை கவச முதலாளியின் வீட்டில் நடைபெற்ற விருந்தின் போது, 'தவச' நிறுவனத்தின் முக்கியஸ்தர் ஒருவரே திரு. ராமச்சந்திரன்சாதாரண மனிதரல்ல; மக்களுக்கும் தேவருக்கும் இடைப்பட்ட ஒரு படைப்பு என்று கூறியதை நாம் காதால் கேட்டோம். ஒரு தமிழ்க் கலைஞரால் விளம்பரம் தேடிக் கொள்ள முயன்ற நிறுவனம் இம் மென்மேலும் தமிழர்களைத் தூஷித்து வகுப்புவாதக் கூச்சலிட ஆரம்பிப்பது அடாத செயலாகும். 27ம் தேதியே 'தவச'ப்பத்திரிகை வகுப்புவாத விஷமங்களைக் கக்க ஆரம்பித்திருக்கிறது.

வகுப்புவாதக் கூப்பாட்டால் இந்நாடுபட்ட தொல்லைகள் போதாதா? தேசிய அரசாங்கத்தில் தேசம் சேமமடைய, முன்னேற முயலும்போது,மீண்டும் வகுப்புவாத வெறியாட்டத்துக்கு வித்திடலாகாது. இதே போன்ற செய்திகளை திரு. ராமச்சந்திரன் பேராலாவது பிரசுரிக்காமலிருக்க வேண்டும்என்று தயவாகக் கேட்டுக்கொள்ளுகிருேம்.

# அன்பின்....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அணைத்தார். அவர் கண்களின் கடையோரத்தில் முத்தமிட்டு முட்டிக் கொண்டிருந்த நீர்த்திவலைகள் அந்தச் சின்னக் குழந்தையின் கன்னங்களில் புரண்டு முத்தாரம்அமைக்கத் தொடங்கின. அம். பாசமெல்லாம் ஒன்றுதிரண்டு கனத்து வந்து அவரின் உள்ளத்தில் அழுத்த, அந்த அழுத்தத்தினைத் தாங்கிக் கொள்ள முடியாது வருந்திய அந்தக் கிழவர்...என்னைத் திரும்பிப் பார்த்தார். அந்தப் பார்வை என்னைச் சுட்டெரித்தது. நான் அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அப்படியே தலை கவிழ்ந்தேன்...

அந்நேரம்...

நான் விட்டை விட்டு வெளிவரும் போது நடந்த நிகழ்ச்சி என் மனக் கண் முன் திரை விரித்தது. என் கருத்தைக் கவர்ந்த பொருளின் கருவில் கரைந்து உருகித் தளைத்துப் போனேன். நான் ஒன்றும் பேசவில்லை. மூலையில் வைத்திருந்த குடையைக் கையிலெடுத்தேன்...

திரும்பினேன். நடந்தேன். தெருவை நோக்கி.

அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்... என்ற ... காற்றுப் போல என் உள்ளத்தில் ஒலமிட்டது. வள்ளுவரின் மானசீகக் குரலொலியோ...!!

திரும்பிப் பார்த்தேன். குழந்தைமேலிருந்த கிழவரின் பிடி இன்னும் இறுகியிருந்தது.

கழுவி சுத்தம் செய்யப்பட்ட நீலத்தட்டாய்க் காட்சியளித்தது நீலவானம். நிர்மலமான நிலை. ஆனல் என் மனது...?

## இலக்கிய உலகு

வேதாளம்

## கவியரங்கில் கவிஞர்கள்

'சொக்கன்' அவர்களுக்குக் கவிதை எழுதத்தெரியாது என்ருே,கவிதையின் இயல்புகள் பற்றி புரியாதென்ருே கூற வேதாளம் வரவில்லை. இ. நாகராசனுக்குக் கவிதையாத்து, சபையோரைக் கவரத்தக்கதாக இசையுடன் பாடத் தெரியாதெனருே வேதாளம் கூறவில்லை.

கவிதை என்பது உணர்வுகளின் இசை வெளிபாடு. சுவைத்து, அளந்து வார்த்தைகளைக் கோத்துக் கட்டும் ஒருமாலை.உரை நடையுமல்லாத, கவிதையுமல்லாத ஒருவகை வார்த்தைக் கோர்ப்பை உருவாக்குகின்ற முருகையனது பிறகாலச் சரக்குகளும், மகாகவியின் 'குறும்பா'ப்பாட்டுக்களும் கவியரங்குகளுக்கு ஏற்றனவாகா. பா. சத்தியசீலன, யாழ்ப்பாணன்,நாவற்குழியூர் நடராசன், ச. வே. பஞ்சாட்சரம் போன்ருேரது கவிதைகள் அச்சில் பார்த்துப் படித்துச் சுவைக்கவே தக்கன. ஆனல், கவியரங்குகளுக்கு, சபையோரைக் கவரத்தக்க கவிதைகளே சிறப்புப் பெறுவதோடு, அவற்றை இசையோடு,பாவத்தோடு பாடும் கவிஞர்களாலும் அவை சிறப்புப் பெறுகின்றன. இ. நாகராசன் அத்தகையவர்களில் ஒருவர்.

அண்மையில் நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற தமிழ்விழாக் கவியரங்கில் இ. நாகராசனும் கலந்து கொண்டார். சொக்கன் ஒரு பார்வையாளராகக் கலந்து கொண்டார். கவியரங்க முடிவில நாகராசனுக்குச் சொக்கன் கூறினுராம்: கவிதையை மெல்லிசையுடன் பாடுதல் கூடாது. கவிதையை அட்சரசுத்தமாக வாசிக்க வேண்டும்'

கவிதையைப் பாட வேண்டும்; உரைநடையை வாசிக்க வேண்டும்; நாடகத்தை நடிக்க வேண்டும். சொக்கன் அவர்களுக்கு எல்லாம் மாறு.முன்னதை வாசிக்க வேண்டும்; பின்னதைப் பாட வேண்டும்; இரண்டாவதை நடிக்க வேண்டும்.

அண்மையில் இலங்கை வானெலிச் சிறுகதை வாரத்தில் சொக்கனின் 'சேத்தான்குளம்' என்ற ஒரு நாடகமும் இடம் பெற்றதை வாசகர்களுக்கு நினைவு படுத்துகின்றேம்.

# அன்றலர்ந்த செந்தாமரை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைக்குத் தேய்த்து தினசரி குளிக்கவும். இதனல் புண்கள் சுத்தமாகும். பின்பு பிண்டதைலம் எனப்படும் எண்ணெய்யை பஞ்சில் நனைத்து பூசவும். மீன், இறைச்சி, கருவாடு, இறால், நண்டு இவற்றை தவிர்க்கவும். ஒருசில நாட்களில் குணம்தரும்.

❀

எஸ். என். வன்னியசிங்கம்,
கரவெட்டி.

கே: 28 வயதுடைய எனக்கு தலைமயிர் உதிர்கின்றது. எத்தனையோ விதமான தைலங்கள் பாவித்தும் நலமில்லை. சொடுவும் உண்டு. தகுந்த பரிகாரமுறை சொல்லுங்கள்.

ப: குளிக்கும்போது தேசிப்பழத்தை தேய்த்துக் குளித்து வரலாம். தலைக்கு 'கீழ்காய் நெல்லித்தைலம்' தேய்த்து வந்தால் அல்லது நீலியாதிதைலம் தேய்த்துவரின் குணம் கிடைக்கலாம் தினசரி-காலையில் ஐந்து நிமிடநேரம்வரை தலைகீழாக நிற்கவும்.

❀

பா.வு. நவாப்ஜான்,
அப்புத்தளை.

கே: என் இருகாதுகளும் வலிக்கின்றன கீச் கீச் என்ற சப்தம் இரவில் படுக்கும் போது ஏற்படுகின்றது. காது கேட்பதும் குறைவு. இதற்கு ஒரு வழி கூறுங்கள்.

ப: உட்காதுத் தாபிதம் காரணமாக இப்படியான தன்மைகள் ஏற்பட இடமுண்டு. எனவே காதுநோய் நிபுணரைக் கண்டு ஆலோசனை பெறுவது நன்று.

❀

வை. க. இரத்தினம்,
கண்டி.

கே: உடம்பு பூராவும் தேமல் படருகின்றது. வியர்வை அதிகம். வெய்யிலில் வேலை செய்தால் தடிக்கின்றது. ஆலோசனை தாருங்கள்.

ப: இது ஒரு சர்மத்தைப் பற்றிய வியாதி. குளிக்கும் போது சவற்காரம் போடுதல் நன்றல்ல. மலச்சிக்கல் இல்லாதிருக்க மரக்கறி வகைகள், பழவகைகள், பால் நன்கு பாவிக்கவும் நில்பாகல் எனும் செடியின்இலையை கிழமைக் கொருதரம் சுண்டிப் புசித்தல் நன்று. காலையும் மாலையும் குளித்தல் நன்மை தரும். செல்லி, சிந்தில்தண்டு சாதாவாரிக் கிழங்கு இவற்றை அவித்துக் குடிக்கலாம்.

❀

தமிழழகன்,
பசறை குறூப்.

கே: எனது வயிற்றின் கீழ் இடது பக்கம் வீங்கி, பொறுக்க முடியாதவலி.அத்துடன் ஒருபக்க விதையும் பெருத்திருக்கின்றது. ஆலோசனை கூறவும்.

ப: நீர் கூறும் கூற்றிலிருந்து இது 'இன்குவயினல்கேனியா' என எண்ண இடமுண்டு. உடனே ஒரு சத்திர வைத்திய நிபுணரைக் கொண்டு பரிசோதித்து அவசியமெனக் கண்டால் சத்திர சிகிச்சை செய்து கொள்வது நலம்.

**உங்கள் நோய்?**
'சுதந்திரன்'
த. பெ. 1183,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பாரோர் போற்றும் பெரியோர்கள் - 6

# லின்டன் பி. ஜோன்சன்

அமெரிக்க குடியரசுத் தலைவர் கென்னடி டெக்சாசு மாகாணத்தில் உள்ள டல்லசு என்னுமிடத்தில் கோரமாகக் கொலையுண்டதை அடுத்து அவரது இடத்திற்கு உடனடியாக நியமிக்கப்பட்டார் லின்டன் பி. ஜோன்சன். எவருமே எதிர்பாராத துக்ககரமான சம்பவத்தால் நாட்டு மக்கள் பரபரப்பும் குழப்பமும் அடைந்திருந்த வேளையில் உதவிக் குடியரசுத் தலைவராக இருந்த அவர் அமெரிக்காவின் முப்பத்தாறுவது குடியரசுத் தலைவரானார். இது 1963ம் ஆண்டு நவம்பர் 22ம் திகதி நடைபெற்றது.

அமெரிக்காவில் 1964ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் இவர் அமோக வெற்றிபெற்று அடுத்த நான்கு ஆண்டுகளுக்கும் அமெரிக்க குடியரசுத் தலைவராய் இருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காவின் சரித்திரத்திலேயே மிகக் கூடுதலான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற குடியரசுத் தலைவராம் பெருமை இவரையே சாரும். நாட்டு மக்கள் இவர் பேரில் கொண்டுள்ள நம்பிக்கைக்கும் மதிப்பிற்கும் அளவற்ற அன்புக்கும் இதைவிட வேறென்ன சான்றாக முடியும்.

ஓர் ஏழை விவசாயியின் மகனாக டெக்சாசு மாகாணத்தில் ஸ்டோன் வோல் என்னுமிடத்தில் 1908ம் ஆண்டு ஆகஸ்ட் 27ம் திகதி ஜோன்சன் பிறந்தார். லின்டன் பெய்ன்ஸ் ஜோன்சன் என்பது இவரது முழுப் பெயர். இவர் தன் பள்ளிப் பருவத்தில் தனக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில் சப்பாத்துக்கள் மினுக்கிக் கொடுக்கும் வேலை செய்து அதற்குச் சிறு ஊதியம் பெற்றார். பதினைந்து வயதாகும் போது உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு பல இடங்களிலும் அலைந்து திரிந்து சில்லறை வேலைகள் செய்தார். மின்சார ஏணியிலும் சாப்பாட்டுக் கடையிலும் பணியாளராக வேலை செய்ததோடு கார் கழுவும் வேலையும் செய்தார்.

தனது ஏழ்மை நிலையிலும் தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற ஆசை இவரை விடவில்லை. தான் பிறந்த மாகாணத்திற்கே திரும்பி வந்து அரசாங்க ஆசிரியர் கல்லூரியில் சேர்ந்து படிக்கலானார். ஓய்வு நேரங்களில் கல்லூரியிலேயே வாயில் காப்போனாகப் பணிபுரிந்தும், பனியன், மேஸ் முதலான பொருட்களை வீடு வீடாகக் கொண்டு சென்று விற்றும் படிப்புச் செலவுக்கான பணத்தைத் தேடிக் கொண்டார். இடையில் பணம் போதாமையால் கல்லூரியை விட்டு விலகி ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியரானார்.

தன்னம்பிக்கையையும் முயற்சியையும்கைவிடாது பின்னரும் தொடர்ந்து படித்த ஜோன்சன் தனது 22வது வயதில் அறிவியல் துறையில் பட்டதாரியானார். பின்னர், உயர்நிலைப் பள்ளி ஒன்றில் ஈராண்டு ஆசிரியராகப் பணி புரிந்த இவர் 1931ல் அமெரிக்க சனப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் ஒருவரின் செயலாளர் ஆனார். படிப்பின்மேல் இருந்த ஆசை இங்கும் இவரை விட்டு விடவில்லை. எனவே வாசிங்டன் நகரில் ஜோர்ஜ்டவுன் பல்கலைக் கழகச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிக்கலானார். அங்கிருந்து 1935ல் மீண்டும் டெக்சாசு திரும்பி வந்து தேசிய இளைஞர் நிறுவனத்தின் அதிபராகப் பணியாற்றினார். பின்னர் தேர்தலில் வெற்றி பெற்று சனப் பிரதிநிதிகள் சபை உறுப்பினரான இவர் செனட் சபைக்கும் தெரிவு செய்யப்பட்டு சக்தி வாய்ந்த அச்சபையின் பெரும்பான்மைத் தலைவராகவும் பணிபுரிந்தார்.

இரண்டாவது உலகப் போரின் போது பதவியைத் துறந்து போரில் ஈடுபட்ட சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினரில் ஜோன்சன் தான் முதன்மவர். சிறந்த முறையில் போர் புரிந்து பலராலும் பாராட்டப்பட்ட இவர் அதற்காகச் 'சில்வர் ஸ்டார்' என்னும் விருதையும் பெற்றார். போரின் பின் மீண்டும் சனப்பிரதிநிதிகள் சபையின் பழுத்த அனுபவசாலியானதோடு பல சாதனைகள் மூலம் நாட்டு மக்களைப் பெரிதும் கவர்ந்தார்.

சனநாயகக் கட்சியின் குடியரசுத் தலைவர் பதவிக்கு 1960ம் ஆண்டில் ஜோன் எப் கொன்னடியை எதிர்த்து இவர் போட்டியிட்டார். இதில் கென்னடிக்குத்தான் வெற்றி கிட்டியது. அதே ஆண்டில் கென்னடியின் அழைப்பை ஏற்று இவர் உதவக் குடியரசுத் தலைவராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அமெரிக்க வரலாறு என்றுமே கண்டிராத மிகச் சுறுசுறுப்புள்ள உதவிக் குடியரசுத் தலைவர் என்ற புகழைச் சம்பாதித்துக் கொண்ட இவர் உலக நாடுகள் பலவற்றிற்கு வெளிநாட்டுக் கொள்கைத் தூதராகச் சென்றார்.

1934ல் இவர் கிளோடியா என்ற பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு வின்டா பர்ட், லூசி பெய்ன்ஸ் என்னும் புதல்வியர் இருவர் இருக்கின்றனர். 1964-ல் நடைபெற்ற தேர்தலின் போது கிளோடியாவின் தேர்தல் பிரசாரம் உச்சக் கட்டத்தை அடைந்து இதற்குமுன் எந்தக் குடியரசுத் தலைவரின் மனைவியும் செய்யாத பெருமுயற்சியென்ற புகழைப் பெற்றது. இவரது புதல்வியர் இருவரும் கூட மாணவர்களிடையேயும் இளைஞர்களிடையேயும் பிரசாரம் செய்து அப்பாவுக்கு அமோக வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

## அன்ரனி பெர்னுண்டோ

## பாடும்மீன் பலராகம்போடும்

—மட்டுநகர் முத்தழகு—

நிலா! நிலா! நில்லாமல் ஓடும்!
"நாடும் ஏடும் நல்லோரைத் தேடும்"!
ஏலோ! ஏலோ! எல்லோரும் ஏறும்
ஓடமிது நில்லாமல் போகும்!

பாடும்! பாடும்! பண்போடு பாடும்!
"பாடும்மீன் பலராகம் போடும்!"
வாடும்! வாடும்! கொக்கெல்லாம் வாடும்!
விருந்தைக் காத்துக் குடல் செத்துச்சாகும்!

ஆடும்! ஆடும்! மயிலினங்கள் ஆடும்!
மாந்தளிரால் குயிலினங்கள் கூவும்!
காடு! காடு! மரங்களெல்லாம் காடு!
கார்முகிலால் மழைவெள்ளம் போடும்!

- உங்கள் பகுதியான வளர்மதியில் பிரசுரிப்பதற்கு சிறு கட்டுரைகள், நகைச்சுவைக் கதைகள், விடுவிடைகள், சுவையான செய்திகள் தேவைப்படுகின்றன.
- ஒவ்வொரு விடயமும் முழு அளவு தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாது இருக்கவேண்டும்.
- தாளின் ஒரு பக்கத்தில் தெளிவாகவும், நிறைய இடைவெளிகள் விட்டும் எழுத வேண்டும். இவற்றையனுப்பும் கடித உறையின் வலது மூலையில் அனுப்பும் விடயம் கட்டுரையா, கதையா, விடுவிடையா, செய்தியா என்பதைக் குறிப்பிட மறக்க வேண்டாம்.

[illegible]

## விநோத சொல் வேட்டைப் போட்டி

வளர்மதி வாசகர்கள் அனைவரும் கலந்துகொள்ளக் கூடிய முறையில் நாம் நடத்திய விநோத சொல் வேட்டைப் போட்டியில் மொத்தம் 5282 விடைகள் கிடைத்தன. அவற்றுள் 1474 விடைகள் சரியானதாக அமைந்திருந்தன. போட்டி நிபந்தனைகளில் குறிப்பிட்டிருந்ததன் பிரகாரம் சரியான விடைகளிலிருந்து பரிசுக் குரிய கூப்பனை அதிட்டச் சீட்டு முறையில் தெரிவு செய்துள்ளோம்.

மொத்தம் 64 எழுத்துக்கள் அடைப்புக் குறிகளுக்குள் இருந்தன. அவற்றுள் இரண்டு எழுத்துக்களைத் தவிர ஏனைய எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சரியான விடைகள் வருமாறு:

1. சின்ன வீடு.
2. வளர்மதி மாமா.
3. ஆறுகால் மடம்.
4. கல்வியே கருந்தனம்.
5. புதுமைகள் பாரீர் பாரினிலே.
6. நமது மாமா.
7. சுதந்திரன் மாணவர் மன்றம்.

விடை யெழுதியவர்களில் பெரும் பாலோர் 'சுதந்திரன்' என்பதைத் தனிச் சொல்லாகவும் 'மாணவர் மன்றம்' என்பதை பிறிதொரு சொல்லாகவும் பிரித்து எழுதியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நமது நிபந்தனையின்படி அதிக எழுத்துக்களைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்குபவர்களே பரிசுக்குரியவர்கள் என்று குறிப்பிட்டிருந்தோம். நாம் விதித்த நிபந்தனையின்படி 'சுதந்திரன் மாணவர் மன்றம்' என்ற சொற்றொடரே அதிக எழுத்துக்களைக்கொண்டதாக அமைந்துள்ளது.

பரிசு பெற்றவரின் பெயரும் முகவரியும் அடுத்த இதழில் வெளியாகும். போட்டியில் பங்கு பற்றியவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

வளர்மதி மாமா

## அம்மா அப்பா....

—"ஜெயம்"—

அம்மா அப்பா இரண்டு பேரும்
அன்பு தெய்வம் அறிவாய்
சும்மா சுட்டித் தனமும் பண்ணி
தொல்லை தாரா திருப்பாய்

பள்ளிக் கூடம் போவாய் நாளும்
பாடம் சொல்லி வருவாய்
துள்ளி விடு வந்து வீட்டு
வேலை செய்து தருவாய்

மாலை நேரம் நன்றாய் ஆடி
மகிழ வேண்டும் உணர்வாய்
வேளை வந்த போது கடவுள்
வணங்கி கண்ணும் அயர்வாய்!

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக் குட்பட்ட சகலரும் உறுப்பினர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் உறுப்புரிமைப் பத்திரத்தைப் பூரணம் படுத்தி அனுப்பவேண்டும் உறுப்புரிமைப் பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும் வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று உறுப்புரிமைப் பத்திரங்களை "வளர்மதி"யின் உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" மே/பா சுதந்திரன், தபாற் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படி அனுப்புவோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு உறுப்புரிமை இலக்கமும் கொடுக்கப்படும் அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்

## வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரம்

இல. 3

பெயர் ______________________

பாடசாலை ______________________

முகவரி ______________________

______________________

______________ ______________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

அழகு ஈஸ்ட்மன் கலரில் இனிய பொழுது போக்குச் சித்திரம்!

# செ ன் ட் ர ல் [மருதானை]


★ அழகு கன்னியர் பனிக்கட்டி மீது சறுக்கி விளையாடும் இனிய காட்சிகள்!
★ ராகினி - ஹெலன் நாட்டிய ரமணிகளின் ரம்மியமான நடனங்கள்!

# சிக்காரி

❁ அஜித் ❁ ராகினி ❁ ஹெலன்

மற்றும் பலர்

இன்றே உங்கள் குடும்பத்துடன் சென்று பார்த்து
பொழுதைப் பரவசமாகக் கழியுங்கள்!



விரைவில் எதிர்பாருங்கள்! சிலோன் எண்டர்டெயின்மெண்ட்ஸ் திரைகளில்!

எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—ரங்கராவ்—எம். ஆர். ராதா மற்றும் பலர் நடித்த
'படிக்காத மேதை' அளித்த பாலா மூவிசாரின்

# ★ படித்த மனைவி ★

---

# செல்லமகால்

நெல்சன் (திருமலை) கிங்ஸ் (பதுளை)

ஆகிய திரைகளில்

5வது வாரம்!

யாழ்ப்பாணம் வின்சரில் 6-வது வாரம்

சிவாஜி கணேசன்—சரோஜாதேவி
எம். ஆர். ராதா—நாகேஷ்—மனோரமா
சௌகார் ஜானகி—வி. கே. ராமசாமி

நடித்த

# புதிய பறவை

திகைப்பூட்டும் சம்பவங்கள் நிறைந்த
ஈஸ்ட்மென் வர்ண ஓவியம்

## 19ம் திகதி முதல்!

கெபிட்டலில்

குதூகல ஆரம்பம்



எஸ். எஸ். ராஜேந்திரன்,
விஜயகுமாரி,
எம். ஆர். ராதா,
தங்கவேலு

நடித்த

# உல்லாசபயணம்

---

## நாடும் ஏடும் போற்றும் நல்ல திரைக் காவியம்!
## ஒவ்வொரு வீடும் வரவேற்கும் விறுவிறுக்க ஓவியம்!

# 3வது வெற்றி வாரமாக

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு] வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜா (யாழ்ப்பாணம்) நீவொலி (நுவரெலியா) ராஜ் (நீர்கொழும்பு)

குளிர்ச்சியூட்டப்பட்ட லிபர்ட்டியில் வார நாட்களில்
காலை 10 மணிக்கு மட்டும்

எம். ஜி. ஆர். (இரு வேடங்களில்)

சரோஜாதேவி—நம்பியார்—ரங்கராவ்—பண்டரிபாய்—ரத்னா
தங்கவேலு, நாகேஷ், பேபி சகிலா
ஆகியோர் தோன்றும்

விஜயா கம்பைன்ஸ்

# எங்க வீட்டுப் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை இலோன் நியூஸ் பேப்பர்ஸ் ... கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஆ, இலக்கத்தில்
1965-ம் வருடம் நவம்பர் மாதம் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.